
மாத இதழ் - May 2013
40/-

# வண்ண வானவில்

பருவம் 03 වන්න වානවිල් Vanna Vaanavil உதயம் 31



## கிராமபோன் தெரியுமா?

மீட்டலாம் ஒரு பாடல்
புதிய பகுதி

## காமன் கூத்து



ஹன்சிகா Album

## பார்மஸி ரகசியங்கள் - புதிய தொடர்

# VIP Hansika Album



























அன்னையுடன்...



## பயோடேட்டா

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஹன்ஸிகா மோத்வானி |
| பிறந்த திகதி | : | 9 ஆகஸ்ட் 1991 |
| பிறந்த இடம் | : | மங்களூர்,<br>கர்நாடக மாநிலம் |
| அப்பா | : | பிரதீப் மோத்வானி (வர்த்தகர்) |
| அம்மா | : | மோனா மோத்வானி<br>(சரும சிகிச்சை நிபுணர்) |
| சகோதரன் | : | பிரசாந்த் மோத்வானி |

பட உதவி: ஸ்ரீ

# பார்மஸி: தெரிந்த பெயர் தெரியாத விஷயங்கள்




உலகம் விசித்திரமானதும் நம்ப முடியாததுமான சமன்பாடுகளைக் கொண்டது. நீதித்துறையிடம் பல்லாயிரக்கணக்கானோர் நீதி கேட்டுச் செல்கின்றனர். நீதியும் கிடைக்கிறது. ஆனால் நீதிதேவதைக் கோவிலின் தாழ்வாரங்கள் எங்கும் அப்பாவிகளை ஏமாற்றி காசு சம்பாதிக்கத் திரியும் காக்காய்களை நிறையவே பார்க்க முடியும். எங்கு திரும்பினாலும் காசு, காசுதான்.

இன்னொரு புனிதமான இடம் கோவில். அதன் தாழ்வாரங்களிலும் எல்லாவற்றுக்கும் 'ரேட்' பேசுபவர்களைத்தான்- ஊழலில் திளைப்பவர்களைத்தான் பார்க்கமுடியும். சமயங்களையும் சாமிகளையும் விற்பவர்களே அதிகம்.

வைத்தியத்துறையும் புனிதமானதுதான். தொட்டதற்கெல்லாம் பணம் பறிக்கும் இடமும் இதுதான். கருணை எல்லாம் அபூர்வம். பணம் நீட்டினால்தான் சுகம் கிடைக்கும்.

ஆஸ்பத்திரிகள் இப்படி என்றால் அதைச் சூழவுள்ள துறைகளிலும் போட்டி, பொறாமை, ஊழல், தில்லுமுல்லு எல்லாம் நிறையவே நடக்கிறது. பார்மஸி என்ற மருந்தகமும் இந்த வரையறைக்குள் வருகிறது. நாம் இங்கே எடுத்துக்கொண்டுள்ள மருத்துவத்துடன் தொடர்புள்ள பிரிவு, பார்மஸி அல்லது மருந்தகம்.

இலங்கையில் தான் எந்த மருந்தையும் ஓவர் த கவுண்டர் வாங்கலாம். இதற்கு பார்மஸிகாரர் அறிமுகமானவராக இருக்கவேண்டிய அசியமும் கிடையாது.
இந்தியாவிலும் இந்த நிலை காணப்படுகிறது. சிலருக்கு, இது பெருமையான விஷயம். சிலர் எனக்கு எந்த மருந்து வேண்டுமோ, பிரிஸ்கிரிப்ஷன் இல்லாமலேயே வாங்குவேனாக்கும் என்று பீற்றிக்கொள்வார்கள். ஆனால், இது கரணம் தப்பினால் மரணம் போன்ற ஒரு வேலை என்பதை அவர்கள் உணர்வதில்லை. மருந்து சாப்பிட்டதால் ஒருவர் மரணமடைவதில்லைதான். ஆனால் அதிகப்படி மருந்தும், அதிக டோஸ் மருந்தும், மருத்துவரின் ஆலோசனையின்றி எடுக்கப்படும் மருந்துகளும் மனிதனை மெல்ல மெல்ல சாகடிக்கும். அல்லது புதுப்புது வருத்தங்களை உடலில் சேர்க்கும்.

இதனால் மருந்துகளை வாங்குவோரும் விற்போரும் கவனமாக நடந்து கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே இதை விரிவாக ஆராயவேண்டும். மருந்தாளர் என்பவர் ஒரு மருந்தகத்தின் உயிர் போன்றவர். ஆகவே மருந்தாளர் இல்லாத மருந்தகம் ஒரு சாதாரண கடையைப் போன்றது. மருந்தாளரும் ஒரு தொழில்சார் நிபுணர். இலங்கையில் வெளிவாரி, உள்வாரி, டிப்ளோமா, பட்டதாரி என பலதரப்பட்ட மருந்தாளர்கள் காணப்படுகின்றனர். மருந்தாளர்களும் பல துறைகளில் பணியாற்றுகின்றனர்.

இக்கட்டுரை சமூக மருந்தகங்களையும் அதில் பணியாற்றும் சமூக மருந்தாளர்களையும் மட்டும் கருத்திற்கொள்கிறது. 8 மணி முதல் இரவு 10 மணிவரை (14 மணி நேரம் 7 நாட்கள்) என்ற ஓய்வில்லா சமூக பணி இது.

சில நாடுகளில் மருந்துவருக்கு சமனாக மருந்தாளர்கள் கருதப்படுகின்றனர். பிரிட்டன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் மருத்துவர்கள் வேதப்புத்தகமாக நினைக்கும் பீ.என்.எ.்ப். எனச் சுருக்கமாக அழைக்கப்படும் British National Formulary யின் ஆசிரியர் குழாமில் 80 வீதத்துக்கு மேற்பட்டோர் மருந்தாளர்களே.

ஆனால் இலங்கையின் சாபக்கேடாக பெரும்பாலான தனியார் மருந்தகங்களில் முதலாளிமார்களே மருந்தகங்களை நடத்தி வருகின்றனர். சிலர் மட்டுமே மனச்சாட்சியுடனும் ஓரளவு மருந்து பற்றிய அறிவுடன் நடத்துகின்றனர். ஆனால் பலர் சாதாரணதரம் கூட படிக்காதவர்கள். அவர்கள் எவ்வாறு மருத்துவத்துறையில் படித்தவர்களை வேலைக்கு அமர்த்த விரும்புவர்? முடிந்த மட்டும் ஆங்கிலம் சற்று வாசிக்க தெரிந்த நபரைத் தான் வேலைக்கு அமர்த்துவர். பாவம் மருந்தாளர்! மாதாந்தம் ஒரு சில ஆயிரங்களை வாங்கி கொண்டு படமாக மருந்தகங்களை அலங்கரிக்கிறார்கள் பல இடங்களில்.

ஒரு மருந்தாளன் ஒரு காலமும் கடத்தப்பட்ட, போலியான மருந்துகளை வாங்கவோ விற்கவோ மாட்டார். ஆனால் முதலாளிமார் எல்லோரும் இதற்கு உடன்பாடானவர்கள் என்று கூறமுடியாது. அவர்கள் இலாப நோக்கை இலக்காகக் கொண்டவர்கள். மருந்தாளன் தனது அறிவை சேவையாக நோயாளருக்கு வழங்குவார். ஒரு மருந்தை குடிக்கும் முறை, எத்தனை தரம், சாப்பாட்டிற்கு முன், பின் எத்தனை நாள், மருந்தால் வரக் கூடிய சாதாரண பக்க விளைவுகள், மற்றும் என்ன விதமான பக்க விளைவு வந்தால் மருந்தை உடனே நிறுத்தி மருத்துவரை நாடவேண்டும் எனப் பல அறிவுரைகளை வழங்குவார்.

ஆனால் சிலர் விலைக்கழிவு எனும் போர்வையில் நோயாளியை மயக்கி விற்று விடுகிறார்கள். இங்கேதான் பிரச்சினை உருவாகின்றது. விலைக்கழிவு போதைக்கு மயங்கி மருந்தை அனுபவமற்ற கடை சிப்பந்திகளிடம் வாங்குகிறார்கள். இங்கேதான் பிரச்சினை உருவாகின்றது. விலைக்கழிவுக்கு விலைபோகும் வாடிக்கையாளர்கள் அதன் விபரீதங்களை அறிய முயல்வதில்லை. விலை போகாத பொருளுக்கு விலை கழிவு வழங்கப்படுவதுதான் வர்த்தக நடைமுறையாகும். எனினும் புது அறிமுகப் பொருட்களுக்கான விலைக்கழிவு விதி விலக்கானது.

இனி மருந்தகங்களின் செயற்பாடுகளை விரிவாகப் பார்ப்போம்.

1. அலோபதி மருந்துகள்
2. வாங்கல்
3. விற்றல்
4. அழித்தல்
5. அறிவுறுத்தல்

**1. அலோபதி மருந்துகள்**

இலங்கையில் இறக்குமதி, உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து அலோபதி மருந்துகளும் இலங்கை ஔடத அதிகார சபையினால் பதிவு செய்யப்படல் வேண்டும். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட மருந்துகள் மாத்திரமே விற்பனைக்கு உகந்தவை. வழங்கப்படவும் முடியும்.

பதிவு செய்யப்பட்ட சகல மருந்துகளும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. இம்மருந்துகளை விற்பதற்கு வியாபார சான்றிதழ் உரிய அதிகாரசபையில் பெற்றுக்கொள்ள முடியும்.

(பதிவு செய்யப்பட்ட மருந்துகள் I, II, III) (Schedule IA, IIA,B, III என அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை I இல் காணப்படும் மருந்துகளை விற்பதற்கு அவ் வியாபார நிலையம் இலங்கை ஔடத அதிகார சபையினால் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரேயே ஔடதங்களை சில்லறையாக விற்பனை செய்வதற்கு அனுமதி பத்திரம் வழங்கப்படும். இந்த அனுமதிப் பத்திரத்தில் மருந்தாளரின் புகைப்படம் ஒட்டப்பட்டிருக்கும்.

சட்டரீதியாக மருந்தாளரின் புகைப்படத்துடன் கூடிய இந்த உரிமம் நுகர்வோரின் பார்வைக்கு வைக்கப்படல் அவசியம்.

அட்டவணை II ஆவின் கீழ் மருந்துகள் மருந்தாளரின் மேற்பார்வையில் வழங்கப்படும். இதற்கு மருத்துவரின் பற்றுச்சீட்டு அவசியம். உதாரணத்துக்கு அமொக்சலின், பிரிட்டோன் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அட்டவணை III மருந்துகள் மருந்தாளரின் மேற்பார்வையில் வழங்கப்படும். இதற்கு மருத்துவரின் பற்றுச்சீட்டு அவசியம். இம் மருந்துகள் மூன்று நாட்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இதற்கு விசேட அனுமதிப்பத்திரமும் அசியம். உதாரணத்துக்கு பெதடின் போன்ற மருந்துகளை.

அட்டவணை I மற்றும் II அ மருந்துகள் வாங்குவதற்கு மருத்துவரின் பற்றுச்சீட்டு அவசியமில்லை. ஆங்கிலத்தில் ஓவர் த கவுண்டர் மருந்துகள் என்பார்கள்.

**2. வாங்கல்**

பல மருந்தகங்களில் மருந்துகள் முறைக்கேடான முறையில் தான் முதலாளிமாரினால் கொள்வனவு செய்யப்படுகின்றது. இந்தியா போன்ற நாடுகளில் இருந்து சட்டத்திற்கு புறம்பான முறையில் மருந்துகள் கொண்டு வரப்படுகின்றன. பயணி தன் கைப்பையில் மருந்துகளை எடுத்து வருவது பரவலாக நடைபெறுகிறது. பொதிகளிலும் குறைந்த அளவில் எடுத்து வரப்படுகிறது. விசாரித்தால் தனது பாவனைக்கே வாங்கி வருவதாக சொல்லி சமாளித்து விடுவார்கள். தவிர, அதிக அளவிலும் இந்தியா, பாகிஸ்தான், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் இருந்து கொண்டு வருகிறார்கள். இத்தகையோர் பெரும்பாலும் சட்டதின் பிடியில் சிக்குவது இல்லை.

வருபவர்களை சட்டம் ஒன்றும் செய்வதில்லை. விமான நிலையத்தில் இருக்கும் சுங்கத் துறையினரின் கண்ணில் மண்ணை தூவி விட்டு கொண்டு வருகிறார்களா? அல்லது இணக்கமான முறையில் கொண்டு வருகிறார்களா?

(31ஆம் பக்கம் பார்க்க)

வண்ண வானவில்
Vanna Vaanavil
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு
– பாரதிதாசன்

முகவரி:
ஆசிரியர்,
வண்ண வானவில்
த.பெ. இல. 1218
கொழும்பு

Address:
Editor,
Vanna Vaanavil,
P.O. Box No: 1218
Colombo

தொலைபேசி: 0112429275
E-mail: vannavaanavil@gmail.com

விற்பனை தொடர்பாக தொடர்பு கொள்ள: 0112333924, 0112429378, 0112429381

அட்டையை அலங்கரிப்பவர்
லக்ஷ்மிராய்

ஜூன் மாத
வானவில்
01ம் திகதி முதல்
கடைகளில்...

# றைகம் காமன் கூத்து

## பழம்பெரும் கலை வடிவம் இங்கே பிரமாண்டம் கட்டுகிறது

மணி ஸ்ரீகாந்தன்
msrikanthan55@gmail.com

தமிழர்களின் பாரம்பரிய நாட்டார் கலை வடிவங்களில் கூத்துக் கலையும் ஒன்று.

கிராமத்தின் மண்வாசனையும், கிராம மக்களது வாழ்வாதாரங்களையும் அவர்கள் மதம் மீது கொண்ட பற்றுதலையும் வெளிப்படுத்தும் வகையில் அமைவது கூத்துக்கலை. கூத்துக்கள் பல்வேறு செய்திகளை சமூகத்திற்கு கொண்டு செல்கின்றன.

அந்த காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர்கள் பொழுது போக்குக்காகவும், உழைத்த களைப்பை போக்கி இளைப்பாறவும் ஒரு முற்றத்தில் ஒன்று கூடி ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். அதுவே நாளடைவில் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று கலைகளாகத் தோற்றம் பெற்றது. அன்று அவர்கள் பொது முற்றத்தில் ஆடிப்பாடியதே இன்று கூத்து என்ற பெயரைப் பெற்று வளர்ந்து நிற்கிறது. இயல், இசை, நாடகம் மூன்றும் சேர்ந்த தமிழை முத்தமிழ் என்கிறோம். நாடகம் என நாம் கூறுவதை பழந்தமிழ் கூத்து என்கிறது.

கூத்துக்களில் அகக்கூத்து, புறக்கூத்து என இருவகைகள் உண்டு. புறக்கூத்து என்பதே பொதுமக்கள் முன்னிலையில் ஆடப்படும் கூத்தாகும். அகக்கூத்து ஒரு இல்லத்தில் ஆடப்படுவது. கோவலனை மாதவி எட்டு வகையான வரிக்கூத்துக்களால் மயக்கினாள் என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக உருவாக்கப்பட்டு ஆடப்பட்ட இந்தக் கூத்துக்களிடையே சொல்லப்படும் விசயங்களும், வினோதங்களும் இன்றைய சமூகத்தை ஈர்த்து வருவது ஆச்சர்யத்துக்குரியதாகும். கூத்துக்களில், பொன்னர் சங்கர், அர்ச்சுனன் தபசு, சத்தியவான் சாவித்திரி, குரவைகூத்து என்பன பிரபலமாக விளங்கினாலும் இன்றைய காலக்கட்டத்தில் இடம் தெரியாமல் மறைந்து போய்விட்டது. ஆனால் மலைநாட்டில் மட்டும் இன்றும் 'காமன் கூத்து' ஆடப்பட்டு வருகிறது.

சிவன், மதன் போர் தமிழகத்தில் உள்ள திருக்குறுக்கை என்ற ஊரில் நடந்ததாகவும் அங்கே உள்ள வீரட்டேஸ்வரர் ஆலயத்திற்கு அருகில் தோண்டத் தோண்ட கிடைக்கும் சாம்பல் சிவன்- மதனை எரித்ததற்கு சான்றாக இருப்பதாகவும் அந்த ஆலயத்தில் உள்ள வீரட்டேஸ்வரர் சிவலிங்கத்தில் மதன் வீசிய பத்மபானம் ஏற்படுத்திய வடு இருப்பதாகவும் கதை இருக்கிறது.

இதுதவிர கந்தபுராண கிளைக் கதைகளில் வரும் ஒரு பாடலில்

''நுண்ணிய உணர்வின் மிக்கீர்!
நுமக்கிது புதல்வனே! எங்கோன்
கண்ணுதல் உமிழ்ந்த செந்நீர் காமனைப் பொடித்தது அன்றால்
அண்ணலை எய்வன் என்னா அனையன் துணிவிற் கூறித்
துள்ளென ஈண்டு வந்த செயற்கையே சுட்டபோதும்.'''

என்கிறது.

சிவபெருமானின் வலிமையைப்பற்றி விளக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள காமதகன கதையின் பாடலின்படி மன்மதனை எரித்தது சிவனின் நெற்றிக்கண் நெருப்பு அல்ல என்றும் அது சிவபெருமானின் மீது அம்பு எய்ய அவன் கொண்ட துணிச்சலே அவனைச் சுட்டது என்கிறது.

இவ்வாறு கந்தபுராணத்தை சார்ந்தும், வேறுப் பல கதைகளும் காமன் கூத்துப் பற்றி சொல்கிறது.
வருடந்தோறும் மாசி மாதத்தில் வரும் அமாவாசை முடிந்து மூன்றாம் நாளில் காமன்கூத்து ஆரம்பமாகிவிடும். மலையகத்தில் பல இடங்களில் இந்தக் கூத்து சிறப்பாக நடந்தாலும் பிரமாண்டத்துடன் நடப்பது களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள றைகமையிலதான்.

மாசி மாதம் வந்து விட்டாலேயே இங்குள்ள இளைஞர்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான். பறை ஓசை விண்ணைப் பிளக்க ஒரு மாதத்திற்கு ஆட்டம் பாட்டம்தான்.

விழா கடைசி நாளில் லட்சக்கணக்கான ருபாய்களை இறைத்து மின்விளக்கு, அலங்காரம் என்று கூத்துத் திடல் களை கட்டும். இம்முறை நடந்த காமன் கூத்திற்கு இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பார்வையாளர்கள் திரண்டு வந்திருந்தார்கள். ஏராளமான வாகனங்கள் திடலின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்ததால் அந்த திடல் திணறிக்கொண்டிருந்தது. கொத்து பரோட்டா டங்கடடக்கு, ஐஸ்கிறீம் பீப்பீக்க பாதையோரம் ஒரு நாள் உணவுக் கடைகளில் சனம் முண்டியடித்து தின்று தீர்த்துக்கொண்டிருந்தது. விலைகள் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் குளிருக்கு குடித்த தேனீர் மட்டும் இதமாகத்தான் இருந்தது.

பரமேஸ்வரன் சர்மாவினால் வேத மந்திரங்கள் ஓத ரதி- மதன் திருமணத்தோடு விழா சூடு பிடிக்க தொடங்கியது. றைகம் காமன் கூத்திற்கு பிந்தன பறை இசைக்க குழுவினர் இசை வழங்கினர். ஆனால் குறவன், குறத்தியோடு ஆடுகளத்திற்குள் பறைகளோடு புகுந்து விக்னேஷ் குழுவினர் செய்த அழிச்சாட்டியத்தால் அரங்கம் பறை ஓசையால் அதிர்ந்தது.

இதுதவிர, தீயோடு விளையாடிய வீரபத்திரன், காளி- பார்வையாளர்களை மிரட்டியது என்று சொல்லலாம். பார்வை யாளர்களை பரவசப்படுத்திய விடயத்தில் நீதிபதியின் சிவன் வேடம் முக்கியமானது. அனுபவம் வாய்ந்த கூத்துப்பாடகர்கள் பலர் களத்தில் இறங்கியிருந்தாலும், அனைவரையும் தன் பாட்டால் கட்டிப் போட்டு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தவர் லிதுஷன் ஹரி, சின்னப் பையன். வயது 14. ஆண்டு ஒன்பதில் கல்வி கற்கிறாராம். சரணத்திற்கு இடையே அவர் போடும் சங்கதி அப்பப்பா... ஒரு தேர்ந்த முதிர்ந்த கலைஞருக்கு உள்ள எல்லாத் தகுதியும் அந்த தம்பிக்கு இருக்கிறது. ஆனால் அவருக்கு சரியாக வாய்ப்புகள் வழங்கப்படவில்லை. பெரும் பாடகர்களின் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கும் லிதுஷன் ஹரி இன்னும் நிறைய பாடல்களை கற்கவேண்டும்.

விழாவை திறம்பட செய்த கஜேந்திரன், அருண லொக்கா, ரவி, ஸ்ரீகாந்த உள்ளிட்ட இளைஞரணி குழுவினர் பாராட்டுக்குரியவர்கள். ஆனாலும், இரண்டாயிரத்திற்கு அதிகமான பார்வை யாளர் கூடும் இடத்தில் கழிப்பிட வசதி இல்லாதது பெருங்குறை. குறிப்பாக பெண்கள் இயற்கை கடன்களை முடிக்க மறைவிடங்களை தேடிச்சென்று சிரமமப்படுவதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

'இது காலாகாலமாக இப்படியான விழாக்களில் இருக்கின்ற பெரும் குறை. இது நிச்சயம் தவிர்க்கப்படவேண்டிய ஒன்று. இதற்கு தற்காலிகமாக டொய்லட் செட்டுகளை வாடகைக்கு எடுத்து வைத்து கட்டண கழிப்பிடங்களை தயார் செய்தால் அதில் வருமானமும் கிடைக்கும். அதோடு கூத்து பார்க்க வரும் மக்களுக்கும் நாம் ஒரு பெரிய சேவையை வழங்கிய புண்ணியமும் கிடைக்கும் என்கிறார்," கூத்துப் பார்க்க வந்திருந்த பிரதாபன் ஆசிரியர்.


கூத்து மேடைக்கு அருகிலேயே நீர் ஓடையும் ஓடுவதால் தண்ணீர் பிரச்சினையும் இருக்காது. சிறிய தண்ணீர் பம்பை வைத்து பாத்ரூம் வசதியை சிறப்பாக செய்து கொடுத்து விடலாம். அதோடு பெண்கள், குழந்தைகள் அமர்ந்திருக்கும் இடத்திற்கு மட்டும் பெரிய கூரை அமைத்தால் பாதுகாப்பானதாக இருக்கும். ஏனென்றால் கூத்து நடைபெறும் சமயத்தில் அடை மழை வந்து விட்டால் அவர்களின் கதி நினைத்துப் பார்க்கவே பரிதாபமாக இருக்கிறது.

எனவே அடுத்த ஆண்டிலாவது இந்த குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டால் காமன் கூத்து மென்மேலும் சிறப்பாக அமையும்.


(ரதி) மது ஷங்கா


லிதுஷன் ஹரி


பிரதாபன் (ஆசிரியர்)



ஒப்பனை கலைஞர் மோகன்ராஜ்

விழா ஏற்பாட்டாளர்கள்





## இலங்கைத் தமிழ் திரையுலகம்



தம்பி ஐயா தேவதாஸ்

*ஈழத்து திரைப்பட வரலாற்றை தொகுத்தளித்ததன் மூலம் மிகப்பெரும் பணியை செய்து முடித்திருக்கும் தம்பி ஐயா தேவதாஸ் தன் இலங்கை திரைப்பட அனுபவங்களை இங்கே சுவையாகப் பதிவு செய்கிறார்.*

# லைலாமஜ்னு தெலுங்கு படமே சிங்களத்தில் வெளியான முதல் டப்பிங் படம்

ஒரு படைப்பு ஒரு மொழியில் வெளிவரும் பொழுது அதன் சிறப்புகள் காரணமாக அதை வேற்று மொழிக்கு மொழி மாற்றுவது காலங்காலமாக நடைபெற்று வருகிறது. இவை எழுத்து இலக்கியங்களான கவிதை, சிறுகதை, நாவல் போன்றவற்றில் இடம்பெறுகின்றன.

உலகில் சிறந்த சினிமாக்கள் வெளி வரும்போது அவற்றையும் வேற்று மொழியில் பெயர்ப்பதும் இப்பொழுது அதிகமாக நடைபெறுகின்றன. இவ்வாறான படங்கள் மொழி மாற்றுப் படங்கள் அல்லது டப்பிங் படங்கள் என்று சொல்லப்படுகின்றன.



பைலட் பிரேம்நாத்தில் ஒரு காட்சி

இவை உலகரீதியில் மட்டுமன்றி இந்தியா, இலங்கை போன்ற நாடுகளின் உள்ளூர் மொழிகளிலும் மொழிமாற்றப்பட்டு வெளியிடப்படுகின்றன. இந்தியாவில் தெலுங்கு மொழியில் 'சங்கராபரணம்' என்ற திரைப்படத்தைத் தயாரித்தார்கள். இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து தெலுங்கு கீர்த்தனைகளை உள்ளடக்கி அந்தப் படம் தயாரிக்கப்பட்டது. அதி உன்னத இசை காரணமாக அத்திரைப்படத்துக்கு பல விருதுகள் கிடைத்தன. அப்படத்தில் பின்னணி பாடிய எஸ்.பி பாலசுப்பிரமணியம் சிறந்த பின்னணி பாடகராக தெரிவு செய்யப்பட்டார். இந்த வெற்றிகளை அவதானித்த ஒரு தயாரிப்பாளர் இத்திரைப்படத்தை மலையாளத்தில் மொழிமாற்றம் செய்தார். பாடல்கள் எல்லாம் மூல மொழியான தெலுங்கிலேயே இருக்க மற்றக்காட்சிகள் எல்லாம் மலையாள மொழியில் டப் செய்யபட்டன. இந்தப்படம் பெரு வெற்றியைப் பெற்றுத் தந்ததாம். சாதாரண மலையாளப் படத்தை விட இந்த டப் படம் அதிக நாட்கள் ஓடியதாம்.

இந்தியத் தமிழ் தொலைக்காட்சிச் சேவைகளில் ஆங்கில, இந்தி திரைப்படங்களையும் தொலைக்காட்சி நாடகங்களையும் தமிழில் டப் பண்ணி ஒளிபரப்புகிறார்கள். மகாபாரதம், இராமாயணம் போன்ற பிரமாண்டமான காவியக்கதைகளை தொலைக்காட்சி நாடகங்களாக இந்தி மொழியில் தயாரித்து வழங்குகிறார்கள். இவை தமிழ் மொழி உட்பட இந்தியாவின் ஏனைய மொழிகளில் மொழிமாற்றப்பட்டு அவற்றையும் ஒளிபரப்புகிறார்கள்.

தமிழ்த் தொலைக்காட்சிச் சேவைகளில் தமிழ் நிகழ்ச்சிகளை பர்ப்பவர்களைவிட இவ்வாறான டப்பிங் நிகழ்ச்சிகளையே அதிகமானவர்கள் ரசிக்கின்றனர் என்று கணக்கெடுப்பு ஒன்று கூறுகிறது.



ரத்தத்தின் ரத்தமே (சிங்கள டப்பிங்) படத்தில் ஜெயசந்திரன்- கீதா குமாரசிங்க

இதனால் டப்பிங் முயற்சிகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. தென்னிந்தியாவில் டப்பிங் படங்களை தயாரிக்க ஆரம்பித்தவர் ஏ.வி.எம் மெய்யப்பச்செட்டியார் என்று கூறப்படுகிறது. 'ஹரிச்சந்திரா என்ற கன்னடப்பத்தை தமிழுக்கு டப்பண்ணிதன் மூலம் அம்முயற்சி ஆரம்பமானது.

கன்னட மொழியும் தென்னிந்திய மொழிகளும் மொழி ரீதியில் வேறுபட்டாலும் கலாசாரரீதியில் பொதுவாக மக்கள் அனைவரும் ஒத்ததன்மையினரே. ஆனால் மொழியும் வேறுபட்ட கலாசாரமும் வேறுபட்டு விளங்கும் இரண்டு இனங்களுக்கிடையே இவ்வாறான மொழிமாற்றுப் படங்களை டப்செய்தால் என்ன ஆகும்?

மொட்டைதலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்ட கதை ஆகாதா? தெலுங்கு மொழியும் சிங்கள மொழியும் வேறுபட்டவை. தெலுங்கு மக்களும் சிங்கள மக்களும் கலாசார ரீதியிலும் வேறுபாடு கொண்டவர்கள். அவர்கள் இந்துக்கள். இவர்கள் பௌத்தர்கள். நிலைமை இப்படி இருக்க தெலுங்குப்படத்தை சிங்களப்படமாக டப்பிங் செய்யலாமா? இது கஷ்டமான விடயம்தான். ஆனாலும் தெலுங்குப்படத்தை சிங்கள மொழியிலும் மொழிமாற்றம் செய்தார்கள். இந்த மொழிமாற்றம் முயற்சிதான் இலங்கையில் முதலில் நடைபெற்ற டப்பிங் பட முயற்சி எனலாம்.

இம்முயற்சி மூலம் பணம் பண்ணலாமா என்று சினிமாக்காரர்கள் பார்த்து வந்திருக்கிறார்கள். இவ்வாறான எண்ணம் இலங்கையைச் சேர்ந்த இரண்டு சினிமாக்காரர்களுக்கும் வந்திருக்கிறது. பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களும் இலங்கையைச் சேர்ந்தவர்களுமான எம்.எஸ் தம்புவும், கே. குணரத்தினமும் இந்தியாவில் இருந்த பொழுது 'லைலா மஜ்னு' என்ற தெலுங்குப்படத்தை சிங்கள மொழிக்கு மொழிமாற்றம் செய்தனர். அதற்கு 'மனப்பிரயத்தன' என்ற பெயர்சூட்டி இலங்கையில் திரையிட வைத்தார்கள். தெலுங்கு திரை உலகில் பிரபலமாக விளங்கிய ஏ. நாகேஸ்வரராவும் பானுமதியும் பிரதான பாத்திரங்களில் நடித்திருந்தார்கள்.

இத்திரைப்படம் முதலாவது சிங்கள டப்பிங் படமாக 1947 இல் திரையிடப்பட்டது. அதைத் தொடர்ந்து 1950 ஆம் ஆண்டு முதல் 1960ஆம் ஆண்டு வரை பல ஹிந்தி, தமிழ் திரைப்படங்கள் சிங்கள மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டன. பொருளாதார ரீதியில் வெற்றி பெற்ற படங்களே இவ்வாறு சிங்கள மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்டன.

சல்லி எப்பா (1956), மனிசத்வய(1956) அய்யய் மல்லி (1957, அங்குலிமாலா (1960) போன்ற சிங்களப் படங்கள் தமிழ் மற்றும் ஹிந்தி மொழிகளிலிருந்து டப் செய்யப்பட்டிருந்தன.

பின்னாளில் இலங்கையில் படமாக்கப்பட்ட



யார் அவளில் ஏ.ச மனோகரனும் மாலினி பொன்சேகாவும்

சினிமா உலகில் பெயர்பெற்றிருந்தது.

இத்திரைப்படத்தை சென்னையிலும் திரையிட முயன்றபோது படத்தின் தலைப்பு பொருத்தமாக இல்லை என்பதால் அதற்கு 'மாற்றாந்தாய்' என்று பெயரிட்டதாகவும் ஒரு கதை உண்டு. 1971ஆம் ஆண்டு காலத்தின் பின் இலங்கையில் தயாரிக்கப் பட்ட பல சிங்களப் படங்கள் தமிழில் டப் பண்ணப்பட்டுள்ளன.

ஆரம்பக் காலத்தில் சிங்களப் படங்கள் தென்னிந்தியாவில் தயாரிக்கப்பட்டன. இவை பின்பு இலங்கையில் தயாரிக்கப்பட்டபோது தென்னிந்தியக் கலைஞர்கள் இலங்கைக்கு வந்து சென்றனர். அவர்களில் பலர் சிங்களப் படங்களை இயக்கினர். ஒளிப்பதிவு செய்தனர். இசை அமைத்தனர். பின்னணி பாடினர். அவர்களே சிங்களப் படங்களை வளர்த்து விட்டனர். ரீ. ஆர். கோபு, ஏ.பி.ராஜ், ரி.ஆர் சுந்தரம், கோ. சுப்பிரமணியம், ஜே.சிங், ஏ.எஸ்.ஏ.சாமி, ஏ.எஸ். நாகராஜன், எம். மஸ்த்தான், பீ. நீலகண்டன், கே. எஸ் சேதுமாதவன் போன்ற கலைஞர்கள் முக்கியமானவர்கள்.



**சிங்களப் படங்களை இயக்கிய ஏ.பி.ராஜ்**

1956ஆம் ஆண்டுவரை இவர்களே சிங்களச் சினிமாவை ஆட்டிப் படைத்தனர். 1956ம் ஆண்டுகளுக்குப் பின் இந்தியக் கலைஞர்கள் இலங்கைக்கு வந்து சினிமாத் தொழிலில் ஈடுபடுவதற்கு அரசாங்கம் தடை விதித்தது. அதனால் இந்தக் கலைஞர்களிடம் உதவியாளர்களாக இருந்த இலங்கை தமிழ் கலைஞர்கள் சிங்களச் சினிமாவை ஆக்கிரமிக்கத் தொடங்கினர்.

இவர்களில் ரி.சோமசேகரன், கே.வெங்கட், எஸ். ராமநாதன், ஜே.செல்வரத்தினம், டப்ளியூ.எம்.எஸ்.தம்பு, றொபின்தம்பு, லெனின் மொறாயஸ், ஜே. தேவானந், எஸ்.வி.சந்திரன், எம்.வி.பாலன், எம்.எஸ். ஆனந்தன், ரி. அர்ஜுன் போன்றோரை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

இவர்களில் பலர் சிங்களப் படங்களை இயக்கினர் அவ்வாறான சிங்களப் படங்கள் தமிழும் டப் செய்யப்பட்டன.

முதலில் ரி. அர்ஜுனா தான் இயக்கிய 'கலியுக காலே' என்ற சிங்களப் படத்தை 'கலியுக காலம்' என்ற பெயரில் தமிழில் டப் செய்தார். அடுத்து 'ஹாரலக்ஷ' என்ற சிங்களப் படம் 'நான்கு லட்சம்' என்ற பெயரில் தமிழில் டப் செய்யப்பட்டது. லெனின் மொறாயஸ் 'அபிராஸ' என்ற படத்தை 'யார் அவள்' என்ற பெயரில் டப் செய்தார். எச்.சி.சந்திரவன்ச 'வனகத கெல்ல' என்ற படத்தை 'சுமதி எங்கே?' என்ற பெயரில் மொழிமாற்றம் செய்தார்.

இவ்வாறே 'எக்திக கத்தாவ' என்ற படம் 'ஒருதலைக் காதல்' என்ற பெயரிலும் 'மிஹிதும் சிஹின' 'பனிமலர்கள்' என்ற பெயரிலும் 'அஜாசத்த' அதே பெயரிலும் தமிழுக்கு டப் செய்யப்பட்டன. பிரசன்ன விதானகே இயக்கிய 'ஆகாச குசும்' என்ற சிங்களப் படம் 'ஆகாயப்பூக்கள்' என்ற பெயரில் டப் செய்யப்பட்டு அண்மையில் திரைக்கு வந்தது.

'பைலட் பிரேம்நாத்', 'ரத்தத்தின் ரத்தமே' போன்ற தமிழ்ப் படங்களும் சிங்கள மொழிக்கு டப் செய்யப்பட்டுள்ளன. சிவாஜிகணேசன் நடித்த 'பைலட் பிரேம்நாத்' அதே பெயரிலும் ஜெய்சங்கர் நடித்த ரத்தத்தின் ரத்தமே படம் 'யுக்தியட்ட சண்டியா' என்ற பெயரிலும் சிங்களப் படங்களாக டப் செய்யப்பட்டன. பி. ஏ டபிள்யு. ஜெயமான என்பவர் முதலாவது சிங்களப் படமான 'கடவுனு பொறந்துவ' என்ற படத்தின் கதாநாயகன். இவர் இந்தியாவில் இருக்கும் பொழுது பல சிங்களப் படங்களைத் தயாரித்தார். இவர் தயாரித்த 'சங்கவுனு பிலித்துற' என்ற சிங்களப்படம் 1951ஆம் ஆண்டு திரையிடப்பட்டபோது பெருவெற்றி பெற்றது. இத்திரைப்படத்தை இவர் தமிழ் மொழிக்கு டப்பண்ண முயன்றார். ருக்மணிதேவி இத்திரைப்படத்தில் 'குசுமலதா' என்ற பாத்திரத்தில் தோன்றினார். எனவே டப்செய்யப்பட்ட இத்திரைப்படத்துக்கு 'குசுமலதா' என்று பெயர் சூட்டினார்கள். இத்திரைப்படம் மருதானை- காமினித் தியேட்டரிலும் கண்டி- ஓடியன் தியேட்டரிலும் திரையிடப்பட்டது. தென்னிந்திய கலைஞர்களே இப்படத்துக்கான டப்பிங் குரல்களை வழங்கியிருந்தனர். பி.ஏ.டப்ளியூ ஜெயமானவின் பெயர் அப்பொழுது சென்னை

சத்யா

# “என்னை எம்.ஜி.ஆர் சென்னைக்கு வரச்சொல்லியிருந்தார்”

## தோட்டக்காரி நாயகி சேபாலிக்கா ருக்ஸ்

**‘தோட்டக்காரி படத்தின் நாயகியாக நடித்த சேபாலிக்காவுக்கு 72 வயதாகிறது. இப்படத்துடன் தொடர்புடைய அனைவரும் காலத்தால் காவு கொள்ளப்பட, இன்று உயிருடன் இருக்கும் ஒரே நபரான இவர் கவனிக்கப்படாத நிலையில் ஏழ்மையுடன் போராடி வருகிறார்’**



இலங்கையின் முதல் தமிழ்த் திரைப்படத்தின் பெயர் தோட்டக்காரி. பின்னர் வடபகுதியைச் சேர்ந்தவர்களால் இலங்கைத் தமிழ்த் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டாலும் முதல் தமிழ்த் திரைப்படம் மலையகத்திலேயே தயாரிக்கப்பட்டது. தயாரித்து நாயகனாகவும் நடித்தவர் கிருஷ்ணகுமார். அப்படியானால் தோட்டக்காரியில் நாயகியாக நடித்தவர் யார்?

ஜெயஸ்ரீ. அனேகமாக மலையகத்துத் தமிழ்ப் பெண்ணாகத்தான் இருக்கவேண்டும்.

ஆனால் அதுதான் இல்லை.

ஜெயஸ்ரீ ஒரு புனைப்பெயர். நாயகியாக நடித்தவர் ஒரு சிங்கள கிறிஸ்தவப் பெண். பெயர் சேபாலிகா ருக்ஸ். கொழும்பில் பிறந்து வளர்ந்த சிங்கள பறங்கிப் பெண். 1941 ஆண்டு பிறந்த இவருக்கு இப்போது 72 வயதாகிறது.

தோட்டக்காரியின் கதாநாயகி பலரும் நினைப்பதுபோல தமிழ் நடிகை அல்ல என்பது தெரிந்தும் அந்த சிங்கள நடிகையைத் தேடிப் பிடிப்பதில் பல மாதங்களை செலவிட நேர்ந்தது. இறுதியாக அவரது ஒரே மகன் சங்கவின் தொலைபேசி இலக்கத்தைத் தேடிப்பிடித்தோம். தன் அம்மா சேபாலிக்காவை எமது அலுவலகத்துகு அழைத்து வர அவர் ஒப்புக்கொண்டார். ஒருநாள் தான் சொன்னபடியே சேபாலிக்காவை அழைத்து வந்தார்.

இவரா அவர் என ஆச்சரியப்படும் வகையில் அவர் தோற்றத்தை முதுமை மாற்றியிருந்தது. மெலிந்த உடலமைப்பு. ஏழ்மையும் தெரிந்தது. ‘‘அம்மா சுகவீனமாக இருக்கிறார். பழைய விஷயங்கள் சரியாக ஞாபகத்தில் இல்லை. அவரை பேச விடுவோம். தவறுகின்ற இடங்களில் நான் சரி செய்கிறேன்... எனக்கு பல விஷயங்கள் தெரியும்” என்று மகன் சங்க எங்களிடம் கூறி உற்சாகப்படுத்தினார். மகன் மேடைகளில் சிங்கள பாடல்கள் பாடுவதோடு சிங்களத் திரைப்படங்களில் பல்வேறு பாத்திரங்களில் நடித்து வருகிறார். தற்போது மூன்று சிங்களப் படங்களில் கதாநாயகனாக நடித்து வருவதாகவம் கூறினார். அவரது சிங்களப் பாடல்கள் அடங்கிய ‘சீடி’ கடந்த மாத இறுதியில் வெளியாகியது.

சேபாலிக்கா ருக்ஸின் தந்தை வழி குடும்பம் டச் வழி பறங்கி வகுப்பைச் சார்ந்தது. தோட்டம், வீடு வாசல், தொழில் என வசதியான குடும்பம். தந்தை சிறில் சார்ள்ஸ் ருக்ஸ் பொலிசில் உயர் அதிகாரியாக பதவி வகித்தவர். அவர் கண்டியைச் சேர்ந்த பொடிமெனிக்கே என்ற சிங்களப் பெண்ணை திருமணம் செய்தார். இவர்களுக்கு பிறந்த ஐந்து பிள்ளைகளில் ஒருவரே சேபாலிக்கா ருக்ஸ்.

கொழும்பு நல்லாயன் கொன்வெண்டில் கல்வி கற்ற சேபாலிக்காவுக்கு சிறுவயது முதலே ஆடல் பாடல்களில் ஆர்வம் அதிகம். பள்ளி நாடகங்களில் நடித்த அவருக்கு மொஹம்மட் சாலி மாஸ்டரின் அறிமுகம் கிடைத்தது. டவர் ஹோல் நாடகங்களில் நடித்தார். இதற்கு அவரது அப்பாவின் ஆசி இருந்தது. ஏனெனில் அவர் பியானோ வாசிக்கத் தெரிந்தவர்.

ஒருமுறை நடிகைகள் தேவை என்ற விளம்பரத்தைக் கண்ட இவரது தோழி இவரையும் அழைத்துக் கொண்டு கிரிபத்கொடயில் இருந்த நவஜீவன் ஸ்டுடியோவுகு சென்றார், நடிகை தேர்வுக்காக. நண்பி தேர்வு முடிந்து இவரையும் அழைத்துக் கொண்டு புறப்படவிருந்தபோது தேர்வு செய்தவர்கள் சேபாலிக்காவை அழைத்தனர்.



இளமையில்...

‘‘நான் நடிக்க வரவில்லை. சும்மாதான் வந்தேன் என்று அவர்களிடம் சொன்னேன். அவர்கள் அதைக் காதில் வாங்கிக்கொள்ளவில்லை. இல்லை; சும்மா நடித்துக் காட்டுங்கள் என்று கூறி நடிக்கச் சொன்னார்கள். ஒரு மரத்தை மனிதனாகப் பாவித்து நடித்துக் காட்டச்சொன்னார்கள். அவர்கள் சொன்னபடியே செய்து காட்டினேன். நன்றாக இருக்கிறது என்று சொல்லி புதுப்படம் ஒன்றில் நடிக்க முடியுமா? என்று கேட்டார்கள். நான் ஒன்றும் சொல்லாமல் வந்து விட்டேன்” என்று பழைய ஞாபகங்களை இரை மீட்டினார் சேபாலிக்கா.

இறுதியாக நண்பிக்கு பதிலாக இவரே நடிக்க ஒப்பந்தமானார். அந்தப் படம்தான் தோட்டக்காரி.

இப்படத்தில் நடிப்பதற்காக இவர் 250 ரூபாவை சம்பளமாக வாங்கியிருக்கிறார்.

கிருஷ்ணகுமார் அத் தேர்வுக் குழுவில் இருந்திருக்க வேண்டும். எனினும் அவர் அன்று இவருடன் பேசினாரா என்பது இவர் ஞாபகத்தில் இல்லை. வீட்டில் ஒப்புதல் கிடைத்ததும் படப்பிடிப்புக்கு போயிருக்கிறார். முதல் நாள் படப்பிடிப்பு தெரணியகலையில் ஒரு பாலத்தின்மேல் நடந்ததாகச் சொல்கிறார். பாலத்தில் ஓடி வருவதாகக் காட்சி. படத் தயாரிப்பாளர்களில் ஒருவரான தங்கவேலு தெரணியகலையைச் சேர்ந்தவர் என்பதால் முதல் காட்சி தெரணியகலையில் படமாக்கப்பட்டிருக்கவேண்டும். தோட்டக்காரி டைட்லில் ஜெயஸ்ரீ ருக்ஸ் என போட்டிருந்ததாகச் சொல்கிறார். இவரது முழுப்பெயர் மரியா க்ளொடில்டா ருக்ஸ் என்பதாகும்.



தோட்டக்காரி நாயகியாக...

படப்பிடிப்பு இரண்டு வருடங்களாக நடந்திருக்கிறது. நுவரெலியா, ஹட்டன், தியதலாவ, பண்டாரவளை ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடந்ததாகவும் பயணம், சாப்பாடு, தங்குமிடவசதி என நன்றாகவே கவனித்தார்கள் என்றும் கூறும் இவர் தனக்கு எவ்விதப் பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும் சொல்கிறார். கிருஷ்ணகுமார் பழகுவதற்கு எளிமையான ஜெண்டில்மன் என வர்ணிக்கிறார்.



நண்பியுடன் ருக்ஸ் (வலம்)



தோட்டக்காரி வெளியானதும் படம் பார்க்க கிஸ்ஸ்லி தியட்டருக்கு சென்றிருந்தவராம். தன்னைத் திரையில் பார்க்க வெகு ஆச்சரியமாகவும் சந்தோஷமாகவும் இருந்ததாம்.

‘‘என்னை எல்லோரும் பாராட்டினார்கள். அப்பா என்னைப் பெருமை பொங்கப் பாராட்டினார். நான் ஏற்றிருந்த பாத்திரத்தின் பெயர் வள்ளி. கடை வீதிக்கு போகும்போது தமிழ் ரசிகர்கள் ‘வள்ளி வள்ளி’ என்று அழைப்பார்கள்,’’ என்று கூறியபோது கண்களில் பிரகாசம் தெரிந்தது.

தோட்டக்காரி வெளியாகி 45 வருடங்களுக்கு மேலாகிறது. கிருஷ்ணகுமாரோ இப்படத்துடன் தொடர்புடைய ஏனையோரோ இப்போது உயிருடன் இல்லை. இருப்பவர் சேபாலிக்கா மட்டுமே. அவராலும் எல்லா தகவல்களையும் ஞாபகப்படுத்தி சொல்ல முடியவில்லை. இதில் பரிதாபமான விஷயம், தோட்டக்காரி படம் இப்போது பிரிண்டில் இல்லை. முறையாகப் பாதுகாக்காததால் மாஸ்டர் கொப்பி அழிந்து விட்டது. இதனால் படம் எப்படி இருக்கும்; சேபாலிகாவின் நடிப்பு எவ்வாறு இருந்தது என்பது யாருக்குமே தெரியாது. அப்படத்தைப் பாதுகாக்காமல் விட்டது பேரிழப்பு என்பது இப்போதுதான் புரிகிறது.

அன்றைய சூழலில் தென்னிந்திய தமிழத் திரைப்படங்களின் செல்வாக்கு இலங்கையில் கொடிகட்டிப் பறந்ததால் தோட்டக்காரி சில தினங்களே தியட்டர்களில் நின்று பிடித்தது. தயாரிப்பார்களுக்கு எவ்வளவு நஷ்டத்தை இப்படம் ஏற்படுத்தியிருக்கும் என்பது குறித்தும் மொத்த தயாரிப்பு செலவு எவ்வளவு என்பது குறித்தும் எந்தத் தகவலும் இல்லை.

தோட்டக்காரி படத்தை எடுப்பது குறித்த ஆரம்ப பேச்சுவார்த்தைகளில் இராமன் என்பவரும் சம்பந்தபட்டிருந்தார். கருத்து மோதல் எழுந்ததால் ராமனும் வேறு சிலரும் அக்குழுவில் இருந்து பிரிந்து வேறொரு படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் ஐந்து ரீல்கள் வரை எடுக்கப்பட்ட பின்னர் அதுவும் முடங்கியது. இந்த ரீல்கள் இப்போது எடிட் செய்யப்படாத நிலையில் இராமனிடம் உள்ளது. ராமன் தற்போது கொட்டகலையில் சைக்கிள் திருத்தும் கடை நடத்தி வருகிறார். அவரிடம் தோட்டக்காரி தொடர்பாக விசாரித்தபோது, தோட்டக்காரி தொடர்பான எந்தத் தகவலையும் தான் சேர்த்து வைக்கவில்லை என்று சொல்லி வருத்தப்படுகிறார்.

தோட்டக்காரி படம் ஓடவில்லை என்பது உண்மையானாலும் அது ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது உண்மை.

**(31ஆம் பக்கம் பார்க்க)**


வண்ண வானவில்

சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.40 |
| 1 வருட சந்தா | ரூ.480.00 |
| 6 மாத சந்தா | ரூ.240.00 |
| 3 மாத சந்தா | ரூ.120.00 |

சந்தாவை செலுத்தியதும் நாம் உங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்வோம் எமது ஏஜண்ட்டிடம் இதனை பெறலாம்.

தபால் மூலம் பெறுவதற்கு:

| | |
|---|---|
| 1 வருட சந்தா | ரூ.672.00 |
| 6 மாத சந்தா | ரூ.336.00 |

மேலும் விபரங்களுக்கு:
011-2319760, 2429444
மின்னஞ்சல்:
subscription@lakehouse.lk

# பார்த்து ரசிக்க வந்தவருக்கு மரண அடி!




மக்கலமுல்ல பொலிஸ் பிரதேசத்தில் உள்ள முஸ்ஸென்னவத்த ஒரு சிறிய கிராமம். இந்தக் கிராமத்தில் வசித்த மக்கள் கறுவாச் செய்கையையே தமது ஜீபனோபாயமாக நம்பியிருந்தனர். ஒவ்வொரு வீட்டின் வளவிலும் சிறிய அளவிலான கறுவாத் தோட்டமொன்று இருந்து வந்தது.

இவ்வாறு சிறிய அளவில் கறுவாச் செய்கையை மேற்கொண்டு அதன் மூலம் வாழ்க்கை நடத்தி வந்த சரத் ஒரு அப்பாவி இளைஞன். தனது வீடு குடும்பம் என்று இருப்பவன். தனது கறுவாத் தோட்டத்தில் கடுமையாக உழைத்து அதனால் கிடைக்கும் வருமானத்தின் மூலம் தனது குடும்பத்தை கவனித்து வந்தான்.

சரத்தின் வீடு சிறிய வீடுதான். முன் விறாந்தையை தவிர இரண்டு சிறிய அறைகளும் குசினியும்தான் இருந்தன. அதில் ஒரு அறையில் பச்சை மற்றும் காய்ந்த கறுவாப்பட்டைகள் அடுக்கப்பட்டிருந்தன. மற்றைய அறையிலேயே சரத் அவனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளும் உறங்கினர். சரத்துக்கு இருந்த இரு பிள்ளைகளும் பெண் பிள்ளைகள் மூத்த பிள்ளைக்கு 3 வயது மற்றைய பிள்ளைக்கு இப்போது ஒரு வருடம் ஆகிறது.

சரத் படுக்கும் அறையில் உள்ள ஜன்னலின் கண்ணாடி உடைந்ததையடுத்து ஒரு பொலிதீன் பேப்பரை வெட்டி கண்ணாடியாக போட்டிருந்தான். கண்ணாடி போடத்தான் நினைத்திருந்தான். ஆனால் அதற்கு காலமும் நேரமும் தோதாக அமையவில்லை.

சரத்துக்கு பெரிய வயதில்லை. கடந்த மாதம்தான் 28 முடிந்திருந்து. அவனது மனைவிக்கு 23. சரத்தின் அப்பாவும் அம்மாவும் அவனது அண்ணனுடன் தென் பகுதியில் வசித்தார்கள். சரத்தின் மனைவியும் அந்தப் பக்கத்தை சேர்ந்தவள்தான். பாடசாலைக் காலத்திலேயே இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டு கல்யாணத்தில் முடிந்திருந்தது.

அன்று ஒரு நாள் தனது கறுவாத்தோட்டத்தில் முழு நேரம் வேலை செய்தபின் மிகுந்த களைப்புடன் வீடு வந்தான் சரத். சரத்துக்கும் பிள்ளைகளுக்கும் சமைத்த சிகப்பரிசி சோறு, மற்றும் காய்கறிகள் ஆகியவற்றுடன் அவித்த பலாக்காயையும் இரவு உணவாக எடுத்து வைத்தாள் சரத்தின் மனைவி. அவித்த பலாக்காய் சின்னக் காலத்திலிருந்தே சரத்துக்கு பிடித்த உணவு என்பது அவனது மனைவிக்குத் தெரியும்.

எனவே வாரத்தில் குறைந்தது நான்கு நாட்களாவது எங்கிருந்தும் அதனை தேடி அவித்து விடுவாள் சரத்தின் மனைவி.

திருப்தியாக சாப்பிட்டதையடுத்து 9 மணியளவில் சரத் குடும்பத்தினர் படுக்கைக்கு சென்றனர்.

அந்த கிராமத்தில் இருந்தவர்கள் எல்லோருமே விவசாயிகள்தான். ஒருவருக்கொருவர் அந்நியோன்யமாகவும் ஒத்தாசையாகவும் இருந்தார்கள். அதனால் திருடர் பயம் இருக்கவில்லை. ஆனால் எதற்கும் பாதுகாப்பாக இருக்கட்டும் என்று சரத் தன் படுக்கைக்கு கீழ் கித்துள் தடியையும் 3 பட்டரி டோர்ச் ஒன்றையும் வைத்துக்கொள்வது வழக்கமாகியிருந்தது.

மூன்றாவது சாமத்தில்...

சரத் திடீரென்று விழித்துக்கொண்டான். ஜன்னலுக்கு வெளியே ஏதோ அசைவதைப் போன்ற உள்ளுணர்வு.

அன்று பௌர்ணமி கழிந்து மூன்றாம் நாள். நிலவொளி அறைக்குள்ளும் விழுந்தது.

சரத் மெல்ல எழுந்தான். கதவை சத்தமின்றி திறந்துகொண்டு மெதுவாக வெளியேறி சுவரோடு சுவராக நகர்ந்து சென்று பார்த்தபோது

ஜன்னலுக்கு வெளியே ஒரு மனிதன் நின்று கொண்டு அறைக்குள் எம்பிப் பார்த்துக்கொண்டிருந்தான்.

''யாரடா நீ''

சரத்தின் கத்தலைக் கேட்டு அவன் திரும்பிப்பார்த்தான்.

சரத் அவனை கண்டுவிட்டதால் அங்கிருந்து அவன் ஓட முயன்றான்.

சரத் அவன் அவனது தலையை பிடித்துக்கொண்டு முகத்துககு டோர்ச்சை அடித்தான்.

சரத் அவனை இதற்கு முன் கண்டதேயில்லை. அவன் வேறு கிராமத்தில் இருந்து வந்திருக்கவேண்டும்.

'யார் நீ மீண்டும் அதட்டிக் கேட்டான் சரத். அந்த பரட்டைத் தலையன் சரத்தின் பிடியையும் மீறிக்கொண்டு ஓடத் தொடங்கினான்.

டோர்ச்சை அடித்த சரத் கையில் இருந்த கித்துள் தடியை பரட்டை தலையனின் தலையை நோக்கி வீசினான்.

சரியாக நடு மண்டையில் பட்டது கித்துள் தடி. 'அம்மோ' என்று அலறியவாறு தலையை பிடித்துக்கொண்டு கீழே விழுந்தான் பரட்டைத் தலையன். அவனது அலறல் கேட்ட மூன்றாவது நிமிடம் அக்கம் பக்கத்தவர்கள் அந்த இடத்தில் நிறைந்து விட்டனர்.

கீழே விழுந்தவன் எழும்பவில்லை. பின் மண்டையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

சூழ்ந்திருந்தவர்கள் டோர்ச் லைட்டுகளுடன் வந்திருந்தனர். பரட்டை தலையனின் முகத்தை திருப்பி பார்த்தார்கள். குறிப்பிட்ட நபர் கிராமத்தில் அடுத்தடுத்துள்ள பல வீடுகளில் ஜன்னலை திறந்து உள்ளே பார்ப்பதை வழக்கமாக கொண்டிருந்தவராம். இரவில் படுக்கையறையில் என்ன நடக்கிறது என்பதை பார்க்க விரும்பும் பாலியல் நோயாளி அவன்.

இவ்வாறு ஏற்கனவே சில வீடுகளுக்குள் இவர் பார்க்க முனைந்தபோது இவரைப் பிடிக்க சிலர் முயற்சி செய்துள்ளனர். ஆனால் இந்த நபர் அவர்களிடமிருந்து லாவகமாக ஓடித் தப்பிவிட்டார். ஆனால் இன்று சரத்திடம் வசமாக மாட்டிக்கொண்டாராம்.

அடிபட்ட நபர் லேசாக முனகுவதைக் கேட்ட அங்கு இருந்தவர்கள் அவரை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு தூக்கிச் சென்றனர்.

ஆனால் பரட்டைத்தலை நபர் செய்த பாவமோ என்னவோ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சில நிமிடங்களில் சிகிச்சை பலனின்றி அந்த நபரின் உயிர் பிரிந்தது.

அந்த நபர் உயிரிழந்ததையடுத்து அந்த கிராமத்தில் இருந்த இளம் தம்பதியினர் நிம்மதியும் ஆறுதலும் அடைத்தனர்.

எனினும் சரத் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியவில்லை. விசாரணைக்கென பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டான்.

ஆனால் சரத் கித்துள் தடியால் அடித்ததை எவரும் பார்க்கவில்லை. பொலிஸாரிடம் அதுபற்றி எதுவும் கூறப்படவும் இல்லை. போதாதற்கு அந்த கித்துள் தடி அந்தப் பிரதேசத்தில் எங்குமே காணப்படவுமில்லை. கிராமவாசி ஒருவர் அதனை அடுத்த கிராமத்தில் இருந்த வாவிக்குள் வீசிவிட்டதாக சொல்லக் கேள்வி.

அடிபட்ட நபரை கண்ட முதல் ஆள் என்ற தகவலின் பேரில்தான் பொலிசார் சரத்தை கைது செய்திருந்தனர். போதிய சாட்சிகள் இல்லாததால் சரத் அடித்ததால்தான் பரட்டைத் தலையன் உயிரிழந்தான் என்று பொலிஸாரால் நிரூபிக்க முடியவில்லை.

ஒரு வாரத்தில் சரத் தடுப்புக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டான். அந்த கிராமம் இப்போது இரவில் நிம்மதியாக உறங்குகிறது.

பாலியல்ரீதியாக வக்கிர எண்ணம் படைத்தவர்கள் பல வகைப்படவர். ஏனையோர் படுக்கை அறைகளில் அல்லது பொது இடங்களில் என்ன செய்கிறார்கள் என்று பார்த்து தமது இச்சையை சிலர் தீர்த்துக்கொள்கின்றனர். சிலர் பெண்களின் உள்ளாடைகளை திருடி வைத்துக்கொள்வதில் இன்பம் அடைகின்றனர். இது குணப்படுத்தக்கூடிய ஒரு மனநோய். ஆனால் தமக்கு இப்படி ஒரு பிரச்சினை இருப்பதை இவர்கள் அறிவதுமில்லை. இவரது குடும்பத்தாருக்கு தெரியவருவதுமில்லை. இது எளிதில் குணப்படுத்தக் கூடிய வியாதி.

---


கோப்பிக்காலத்தில்...

# கோப்பிக்கு உகந்த இடமாக இலங்கை ஏன் தெரிவு செய்யப்பட்டது?

பிரிட்டிஷ் காலனி அரசு இலங்கையில் கோப்பிப் பயிரை அறிமுகம் செய்வதற்கு முன்னரேயே மேற்கிந்திய தீவுகளில் கோப்பிப்பயிரை ஆங்கிலேயர் பயிரிட்டடிருந்தனர். பிரிட்டிஷ் பேரரசுக்கு கோப்பி ஏற்றுமதி செய்யும் பிரதான நாடாக மேற்கிந்தியத் தீவுகள் விளங்கியது.

ஆனால் அடிமை முறை ஒழிக்கப்பட்டதால் ஆபிரிக்க அடிமைகள் தோட்டங்களில் வேலை செய்ய மறுத்து, தோட்டங்களை விட்டு வெளியேறினர். இதேசமயம், மேற்கிந்திய தீவுகளின் உற்பத்திகளுக்கு அதுவரை காட்டப்பட்டவந்த வர்த்த ரீதியியான சாதக நடைமுறை- ஒரு வகையான கோட்டாமுறை ஒழிக்கப்பட்டதால் கிழக்கிந்திய நாடுகளின் கோப்பியும் பிரிட்டன் சந்தையில் நுழைந்தது. கோப்பிக்கு ஐரோப்பாவில் பெரும் வரவேற்பு ஏற்பட்டிருந்த நிலையிலேயே மேற்கிந்திய கோப்பி வீழ்ச்சி கண்டது. எனவே சரியான காலநிலை, சுவாத்தியம், கடல்மட்ட உயரம் ஆகியவற்றையும், அடிமைகள் மற்றும் 'ராஜகாரிய' என அழைக்கப்பட்ட அரச ஊழியம் செய்வோர் ஆகியோரை நம்பியிருக்காத சம்பள ஊழியர்களைக் கொண்ட ஒரு பொருத்தமான நாட்டையும் கோப்பிப் பயிர்ச் செய்கைக்காக தேடவேண்டிய நிலை வெள்ளைத் துரைமாருக்கு ஏற்பட்டது. இச்சூழல்கள் அனைத்தும் பொருந்தி வரக்கூடிய நாடாக இலங்கை அமைந்திருந்தால் 1820 முதல் 1880 வரையிலான காலப் பகுதியில் இலங்கை கோப்பி உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடாக விளங்கியது. இதன் பொருட்டு தேயிலைத் தோட்டங்களுக்கான முடிக்குரிய காணியுடன் சேனை பயிர்ச் செய்கை காணிகளும் பெறப்பட்டன. எனினும் 'சேன' பயிர் நிலங்களில் பயிர் செய்யப்படும் தேயிலைச் செடிகளைவிட காட்டு நிலங்களில் பயிர் செய்யப்படும் செடிகளே அமோக விளைச்சலைக் கொடுப்பதைக் கண்ட துரைமார், சேன பயிர் நிலங்களை கையகப் படுத்துவதை கைவிட்டனர்.

ஆரம்பத்தில் காடுகளை அழிக்கவும் நிலத்தைப் பண்படுத்தவும் கண்டிச் சிங்களவர்கள் முன்வந்தனர். அது அவர்களுக்கு பழக்கமான காரியமா-கவும் இருந்தது. ஆனால் கோப்பித் தோட்டங்களில் தொடர்ச்சியாக பணியாற்ற அவர்கள் மறுத்தனர். தமது சொந்தக் காணிகளில் வேலை செய்யவும் சுதந்திரமாக வாழவுமே அவர்கள் விரும்பினர். மேலும் அவர்கள் சம்பளம் பெற்றுக்கொள்ளவும் விரும்பவில்லை. பணம் அவர்களுக்கு அவசியப்படவும் இல்லை. இந்நிலையலேயே தேயிலைத் தோட்டங்களில் பணியாற்ற சீனர்களும் பின்னர் தென்னிந்தியத் தமிழர்களும் இலங்கைக்கு அழைத்துவரப்பட்டனர். கடுமையாக உழைப்பவர்களாகவும், எஜமான் விசுவாசம் கொண்டவர்களாகவும், உழைப்புக்கான பணத்தைப் பெற விரும்புபவர்களாகவும் இருந்தால் வெள்ளயர்களின் தேவைகளுக்கு சீனர்களைவிட தமிழர்கள் பொருத்தமானவர்களாக விளங்கினர்.



1864ஆம் ஆண்டில் கம்பளையில் காணப்பட்ட கோப்பித் தோட்டம்

# தமிழ்மொழி பயன்பாடும் அரசியலமைப்புகளும் 1972-1978

வட கிழக்கு தலைவர்களும் மலைநாட்டு காங்கிரஸ் தலைவர்களும் ஒன்று கூடி திருகோணமலையில் ஒரு கூட்டத்தை நடத்தினர். புதிய அரசியலமைப்பை நிராகரிப்பதாக கூறினார்கள். அவ்வாறு புதிய அரசியலமைப்பை எதிர்ப்பதற்கு கீழ்க்காணும் காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

"கல்வி நிர்வாகம் மற்றும் நீதித்துறைகளில் தமிழ் மொழிக்கு யாப்பு ரீதியான அந்தஸ்த்தை வழங்குவதை நிராகரிப்பதன் மூலம் தமிழ்ப் பிரஜைகள் இரண்டாம் பிரஜைகளாக தள்ளபட்டிருப்பதால் தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் அரசியலமைப்பு முற்றாக தோல்வி கண்டுள்ளது."

சட்டவாக்கற் கருமங்களில் தமிழ் மொழியை பாவிப்பது உட்பட தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக புதிய அரசியல் யாப்பினால் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்பதை ஆராய்ந்து பார்ப்பது இச்சந்தர்ப்பத்திலே பொருத்தமானதாகும்.

1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 8 (1), 8 (2) ஷரத்துக்களில் மொழி பற்றி குறிப்பாக தமிழ் மொழி பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

8 (1) தமிழ் மொழி உபயோகம் 1958 ஆம் ஆண்டு 28ம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை ஒத்ததாக இருக்கும்.

8 (2) தமிழ் மொழி உபயோகத்துக்காக 1958 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வரும் வரை எவையேனும் ஒரு ஆணை நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தால் அதை அரசியல் யாப்பின் விசேட ஏற்பாடுகளாக வரைவிலக்கணம் கொள்ளக்கூடாது. அவ்வாணைகள் 12ஆம் ஷரத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நடைமுறையில் உள்ள வரையப்பட்ட சட்டங்களாக அமுலில் இருக்கும் உப சட்டங்களாக கருதப்படவேண்டும்.

இதன் மூலம் தமிழ் மொழியின் நியாயமான உபயோகத்தின் அந்தஸ்து 72ஆம் ஆண்டு அரசியல் யாப்பினால் தரம் குறைக்கப்பட்டு இருப்பதையிட்டு தமிழ் தலைவர்கள் திருப்தியடையவில்லை. ஆயினும் இங்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால் நீதிமன்ற நடவடிக்கைகளின்போது தமிழ் பேசும் மக்களுக்கு யாப்பு மூலம் பல சலுகைகள் வழங்கப்பட்டிருந்தமை.

சட்டவாக்க நடவடிக்கைகளின்போது மொழியை பயன்படுத்துவது பற்றிய ஷரத்துகள் இங்கு ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமானதாகும்.

அரசியல் யாப்பின் 9 (1) சகல சட்டங்களையும் ஆக்குவதிலும் உப சட்டங்களை ஆக்குவதிலும் மொழி சிங்கள மொழியாக இருக்கும்.

9 (2) ஆம் ஷரத்தில் அவ்வாறு ஆக்கப்படும் எல்லாம் சட்டங்களினதும் உப சட்டங்களினதும் தமிழ் மொழிபெயர்ப்புக்கள் இருக்கவேண்டும்.

நீதிமன்ற மொழி என்ற தலைப்பில் 72ஆம் ஆண்டின் புதிய யாப்பில இவ்வாறு கூறப்படுகிறது:

யாப்பின் 11 (1)ல் இலங்கை முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களினதும் நியாயம் வழங்குவதற்காக சட்டத்தினால் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள நீதித்துறை நிறுவனங்களினதும் நியாயம் வழங்குவதற்காக சட்டத்தினால் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள நீதித்துறை நிறுவனங்களினதும் கைத்தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நீதிமன்றங்கள் உட்பட ஏனைய நிறுவனங்களின் சட்டங்களும் 1958 10 ஆம் இலக்க இணக்க சபை சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட இணக்க சபைகளின் கருமங்களும் சிங்கள மொழியில் மேற்கொள்ளப்படவேண்டும்.

அவ்வாறு இருப்பினும் வட கிழக்கு மாகாணங்களில் ஆரம்ப நிலை நீதிமன்றங்கள் தொடர்பாகவும் கைத்தொழில் தகராறு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீதி நிறுவனங்களினதும் ஏனைய நிறுவனங்களினதும் கருமங்கள் தொடர்பாக தேசிய அரசு பேரவையினால் ஆக்கப்படும் அதிகாரத்தின் கீழ் அல்லது ஏனைய ஏற்பாடுகள் மேற்கொள்ள முடியும் என்று கூறப்பட்டிருந்தது.

இதைத்தவிர தமிழ் மொழியை பேசுபவர்களுக்கு தமது முறைப்பாடுகளையும் பதில்களையும் கோரிக்கைகளையும் மற்றும் மகஜர்களையும் தமிழ் மொழியில் சமர்ப்பிக்கவும் நீதிக் கருமங்களில் பங்குகொள்ளும் பொழுதும் தமிழ் மொழியை உபயோகிக்க உரிமை இருக்கிறது.

அவ்வாறு பங்குகொள்ளும் பொழுது சிங்கள மொழி அல்லது தமிழ் மொழியை உபயோகிக்கவும் அப்பணிகளின் பொருட்டு அரசினால் வழங்கப்படும் சிங்கள அல்லது தமிழ் மொழிபெயர்ப்பாளர்களின் சேவையை பெற்றுக்கொள்ளவும் உரிமை இருக்கிறது என கூறப்பட்டிருந்தது. இவ்வாறு நீதித்துறை நடவடிக்கைகளின்போது தமிழ்மொழியின் உபயோகம் முற்றாக மறுக்கப்படவில்லை என்பதனை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆயினும் சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்து எனும் பார்வையில் 72ஆம் ஆண்டு அரசியல் யாப்பு தமிழ் மொழிக்கு வழங்கப்பட்ட அந்தஸ்து குறைக்கப்பட்டிருப்பதனை 72ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் ஷரத்துக்களை உற்று நோக்கும் பொழுது காண முடிகிறது.

மொழிக்கொள்கையோடு தொடர்புபட்ட கல்வித்துறையை நோக்கும்பொழுது பல்கலைக்கழக நுழைவு பற்றிய பிரச்சினைக்கு தீர்வாக கூட்டு முன்னணி அரசாங்கத்தின் தரப்படுத்தல் முறை அமுலாக்கப்பட்டது. இதனால் தமிழ் பேசும் மாணவர்களின் பல்கலைக்கழக பிரவேசம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததாகக் குறை கூறப்பட்டது.

கல்வியை தமது வாழ்க்கையின் முக்கிய அம்சமாக கருதிய தமிழ் மக்களுக்கு இது கடும் மனக் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

மேலும் சோல்பரி யாப்பினால் தாபிக்கப்பட்ட நீதிச் சேவை ஆணைக்குழு மற்றும் அரசசேவை ஆணைக்குழுக்களுக்கு பதிலாக புதிய அரசியல் யாப்பின் மூலம் நீதிச் சேவை ஒழுக்காற்று சபை மற்றும் அரச சேவை ஒழுக்காற்று சபை அமைக்கப்பட்டதும், சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய செனட் சபையை ஒழித்தமையும் நியமன அங்கத்தவர்கள் முறையை ரத்து செய்தமையும தமிழ் தலைவர்களினதும் தமிழ் மக்களினதும் மனதை புண்படுத்தியது.

1972ஆம் ஆண்டு அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்ட பின்பு தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு இயக்கங்களையும் நடைமுறைப்படுத்த தீர்மானித்தனர்.

1972ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி தேசிய அரசு பேரவை திறப்பு விழாவை தமிழரசுக் கட்சியும் ஏனைய தமிழ் கட்சிகளும் பகிர்ஷ்கரித்தன.

1972 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ஆம் திகதி தமிழ் கட்சிகளின் தலைமையில் வடகிழக்கு பிரதேசங்களில் ஹர்த்தால்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன் மூலம் தமிழ் மக்களின் எதிர்ப்பு அரசுக்கு தெரிவிக்கப்பட்டதுடன் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் அரசு மீது தமிழ் மக்களின் மனக் கசப்பு அதிகரித்தது. இந்நிலைமையே தமிழ் மக்கள் தனிநாட்டு கோரிக்கை மீது பற்றுக் கொள்வதற்கான பின்னணியை அமைத்தது என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

எவ்வாறு இருப்பினும் 1977 ஆம் ஆண்டு ஆகும் பொழுது மீண்டும் கூட்டு முன்னணி அரசுடன் தமிழ் கட்சிகள் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிப்பதை நாம் அவதானிக்கலாம். அதற்கு மற்றுமொரு காரணி பின்னணியாக அமைந்தது. அதாவது 1977ஆம் ஆண்டு ஆகும் பொழுது அரசின் கூட்டு கட்சிகளாக இருந்த லங்கா சம சமாஜ கட்சியும் இருந்த கம்யூனிஸ்ட் கட்சியும் அரசில் இருந்து பிரிந்து போனமையினால் தமிழ் கட்சிகளின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் தேவை அரசுக்கு ஏற்பட்டிருந்தது. இதன் நிமித்தம் 1977-2-21 ஆம் ஆண்டு ஸ்ரீ.ல.சுதந்திர கட்சியினால் தேசிய அரசு பேரவையின் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் சகலவரினதும் பங்களிப்பின் பேரில் ஒரு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இக்கலந்துரையாடல் தோல்வியில் முடிந்தாலும் தமிழ் மக்களினதும் தமிழ் தலைவர்களினதும் அபிலாஷைகள் என்ன என்பதை அடையாளம் கண்டு கொள்ள எமக்கு வாய்ப்பு இருக்கிறது.

சில வேளைகளில் ஆட்சியில் இருந்த அரசுக்கு அது பற்றி கரிசனை இருந்திருந்தால் இரு சாராருக்கும் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையிலான ஒரு தீர்வினை எட்டி அதன் மூலம் பிற்காலத்திலே ஏற்பட்ட அழிவினில் இருந்து நாட்டை காப்பாற்றிக்கொள்ள வாய்ப்பு இருந்தது.

ஏனெனில் பெரும்பாலான அரசியல் விமர்சகர்களின் கருத்துப்படி தமிழ் குழுக்கள் தமிழ் ஈழத்தை நோக்கி தள்ளப்படும் போக்கு இக்காலகட்டத்திலே நிகழ்ந்திருக்கிறது.

எவ்வாறு இருப்பினும் இக்காலகட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி வடக்கிலும் கிழக்கிலும் பிரபல்யமடைந்த அரசியல் அமைப்பாக உருவெடுத்திருந்தது.

1977 ஆம் ஆண்டு தேர்தலில் முன்வைத்த அக்கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமது கட்சியின் இறுதி இலக்கு தனி நாடொன்றினை பெற்றுக்கொள்வது என குறிப்பிடப்பட்டிருந்தது.

அத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மொழி உபயோகம் பற்றி இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழ் ஈழத்தின் அரச கரும மொழி தமிழ் மொழியாக இருப்பதுடன் அங்கு வாழ்கின்ற சிங்கள மக்களுக்கு தமது மொழி மூலம் கல்வி கற்கவும் அரசுடன் தொடர்புகளை மேற்கொள்ளவும் வாய்பளிக்கப்படும்.

சிங்கள அரசின் கீழ் வசிக்கும் தமிழ் மொழியை பேசவும் மக்களுக்கும் அவ்வாறான சலுகைகளை பெற்றுக்கொள்வது எதிர்பார்க்கப்படும்.

இத்தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் மொழியின் உபயோகம் உட்பட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்தது.

தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகள் தொடர்பாக சர்வகட்சி மாநாடொன்றை கூட்டி கலந்துரையாடி தமிழ் மக்கள் எதிர்நோக்கும் கல்வி, குடியேற்றம் தமிழ் மொழியின் உபயோகம் மற்றும் அரசின் தனியார் மயம் கலந்த அரச நிறுவனங்களின் தொழில் வளங்கள் பற்றிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டு ஏற்றுககொள்ளக்கூடிய தீர்வு திட்டத்தின் மூலம் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது.

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசிய கட்சி பெரும் வெற்றியை ஈட்டி 168 ஆசனங்களில் 140 ஆசனங்களை வெற்றி கொண்டது. ஸ்ரீ.ல.சுதந்திர கட்சி தோல்வியுற்று தமிழர் விடுதலை கூட்டணி எதிர்க்கட்சியாக தெரிவாகியது.

ஆட்சியை கைப்பற்றிய ஐக்கிய தேசிய கட்சி 1977 ஆம் ஆண்டு ஒரு புதிய அரசியலமைப்பொன்றினை ஓகஸ்ட் 4ஆம் திகதி தேசிய அரச பேரவையில் முன்வைத்து அக்டோபர் மாதத்தில் அதை நிறைவேற்றிக்கொண்டது. ஆயினும் தமிழ் மக்களுக்கு உறுதியற்ற விதத்தில் சர்வகட்சி மாநாட்டினை ஐக்கிய தேசிய கட்சி அரசு துரிதமாக கூட்டவில்லை. அத்துடன் புதிய அரசியலமைப்புக்கு தமிழ் மக்கள் உட்பட பொதுமக்களின் கருத்துக்களை தெரிவிக்க போதுமான கால அவகாசமும் வழங்கப்படவில்லை.

1977 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பின் மூலம் தமிழ் மொழியின் உபயோகம் தொடர்பில் தமிழ் மக்களுக்கு பல சலுகைகள் வழங்கப்பட்டிருப்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதாவது தமிழ் மொழி முதல் முறையாக அந்த அரசியல் யாப்பினால் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதேபோன்று 1978 ஆம் ஆண்டு யாப்பினால் எவையேனும் ஒரு நபருக்கு நாம் விரும்பிய மொழியொன்றினை உபயோகித்து தமது கருமங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டதுடன் மொழி அடிப்படையில் எந்தவொரு நபரும் சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடாது என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது. நாடு முழுவதும் செயற்படுத்தப்படும் வண்ணம் சிங்கள மற்றும் தமிழ் மொழிகள் நிர்வாக மொழிகளாக பிரகடனப்படுத்தப்பட்டது. அரசின் சட்டவாக்க நடவடிக்கைகள் கூட சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டதுடன் அவற்றுக்கு ஆங்கில மொழி பெயர்ப்புகளும் வழங்கப்பட வேண்டும் என்று அரசியல் யாப்பினால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.



1972ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பின் கீழ் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் முதல் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பதவியேற்றபோது...

# கிராமபோன்



முன்னைய காலத்தில் பயன்பாட்டிலிருந்த பல பொருட்கள் அல்லது கருவிகளின் பாவனை நவீன காலச் சூழ்நிலைகளுக்கு அமைய இப்போது பாவனையில் இல்லாவிட்டாலும், அத்தகைய பொருட்களை ஒரு நினைவுச் சின்னமாகவோ, ஒரு காட்சிப் பொருளாகவோ இன்றும் சிலர் அவற்றை பாதுகாத்து வைத்திருக்கிறார்கள்.

தற்போதைய நவீன தொழில்நுட்ப யுகத்தில் பாடல்களை கேட்டு ரசிப்பதற்கு வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தவிர, ஒலிநாடா, இறுவட்டு மெமறிகாா்ட், கணினி, பென்டிரைவ் என பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது..

ஆனால் இவற்றுக்கெல்லாம் முன்னோடியாகக் குறிப்பிடக்கூடிய ஒலிக்கருவியாக கிராமபோன் அமைந்திருக்கிறது. இது பல வருடங்களுக்கு முன்னரே பாவனையிலிருந்து மறைந்து விட்டது. கிராமபோன் கருவியை தோமஸ் அல்வா எடிசன் என்ற விஞ்ஞானி கண்டுபிடித்தார். இது மேற்கத்தியரின் வருகையின் மூலம் இலங்கையில் அறிமுகமாகி பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த சாதனத்தில் இசைத்தட்டுகளை பொருத்தி, அதனை சுழலவிடுவதன் மூலம் இசையைக் கேட்கக் கூடியதாக இருந்தது. நமது முன்னோர்கள் தங்களது விருப்பத்திற்குரியவர்களான எம். கே. தியாகராஜபாகவதர், பி.யு. சின்னப்பா, ரி.ஆர். மகாலிங்கம், எம்.எஸ். சுப்புலட்சுமி, கிட்டப்பா, எம். எல். வசந்தகுமாரி, கே.பி. சுந்தராம்பாள் போன்றவர்கள் பாடிய பாடல்களை இதன்மூலம் கேட்டு மகிழ்ந்தார்கள். இதை வீட்டில் வைத்திருப்பது கௌரவத்தின் சின்னம்.

கிராம போன் கருவியை இயக்கு வதற்கு மின்சாரமோ அல்லது மின்கலமோ தேவையில்லை. இதில் இசைத்தட்டினை வைத்து அதன்மீது ஊசி பொருத்தப்பட்ட அதன் பிறிதொரு பாகத்தினை இணைக்க வேண்டும். பின்னர் அதற்குரிய முடுக்கியை முடுக்கவேண்டும். அதன்பின் அதிலுள்ள இசைதட்டு சுழலத் தொடங்கியதும் அச்சாதனத்தில் பொருத்தப்பட்டிருக்கும் ஒலிபெருக்கி ஊடாக பாடல் ஒலிக்கத் தொடங்கும்.

இதற்கு பயன்படுத்தப்பட்டு வந்த இசைத்தட்டு இரு பக்கங்களைக் கொண்டது. ஒரு பக்கத்தில் ஒரு பாடல் மட்டும் பதிவு செய்யப்பட்டிருக்கும். பொதுவாக 3 1/2 நிமிடங்கள் சுழலக்கூடியது. நீளமான பாடல் என்றால இசைத் தட்டின் இருபகுதிக-ளிலும் பதிவு செய்யப்பட்டிருக்கும். கிராமபோன் கருவியிலுள்ள முடுக்கியயை 40 தடவைகள் முடுக்கி விடுவதன் மூலம் இசைத்தட்டின் ஒரு



பக்கத்திலுள்ள பாடலை முழுமையாகக் கேட்கமுடியும்.

பின்னாளில், இதன் நவீன வடிவமாக அமைந்த மின்சாரததில் இயங்கும் ரெக்காா்ட் பிளேயர் (Record Player) அறிமுகத்தின் பின்னர், கிராமபோன் படிப்படியாக ஒதுக்கப்படும் நிலைக்கு உட்பட்டது. இதனால் உற்பத்தி செய்து வந்த நிறுவனங்களும் உற்பத்தியை நிறுத்திவிட்டன. உற்பத்தியை இதற்கு பயன்படுத்தப்பட்டுவந்த ஊசி ஒருவகையான காந்தத் தன்மைகொண்டது. அதனையும் இப்போது பெற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் இதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்த இசைத் தட்டுகளையும் தற்போது பெற்றுக்கொள்ள முடியாது.

கிராமபோன் இசைத்தட்டுகளில் ஒலிபெருக்கி ஒன்றின் முன்னால் ஒரு நாய் அமர்ந்திருப்பது போன்ற இலச்சினை பொறிக்கபட்டிருப்பதை காணலாம் இதுபற்றி இருவேறுபட்ட கருத்துகள் உள்ளன. இதில் ஒன்று, நாயின் குரலையே முதன்முதலாக இசைத்தட்டில் பதிவு செய்து பரீட்சித்துப் பார்த்ததாகவும் இதன் ஞாபகமாகவே நாயை முதன்மைப்படுத்தி, அதன் உருவத்தை பொறித்துள்ளார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இன்னொன்று இசைத்தட்டு உற்பத்தி நிறுவனமொன்றை நடத்தி வந்தவர் மரணமடைந்தபோது அவரால் வளர்க்கபட்டு வந்த நாயொன்று மிகவும் சோமாக இருந்ததாகவும், ஆனால் எஜமானின் குரலை பதிவு செய்திருந்த இசைத்தட்டினை ஒலிக்கவிட்டபோது நாய் உற்சாகமடைந்து காணப்பட்டதாகவும், அதன் பின்னரே இசைத்தட்டில் நாயின் உருவம் பொறிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இதுவே HMV என்ற இசைத்தட்டு நிறுவனம் தோற்றம் பெறுவதற்கும் காரணமாக இருந்திருக்கிறது என்றும் தெரியவருகிறது. HMV என்பது ஹிஸ் மாஸ்டா்ஸ் வொயிஸ் (His Masters Voice) என்பதன் சுருக்கமாகும்.

கிராமபோன் கருவியையும், அதற்குப் பயன்படுத்தப்பட்ட ஊசி மற்றும் இசைதட்டுக்களையும் இன்றும் சிலர் ஒரு நினைவுச் சின்னமாகவும் காட்சிப் பொருளாகவும் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். இன்றைக்கும் அது கௌரவச் சின்னம்தான். வட்டுக்கோட்டை, மானிப்பாய், கல்வியங்காடு போன்ற இடங்களில் சிலர் அரும்பெரும் பொக்கிஷமாக கிராமபோனை வைத்திருப்பதாக அறியமுடிகிறது.

மானியம்பதி உதயா கணேசு

# மீண்டும் புதுப்பொலிவுடன் காட்சிதரும் யாழ் மணிக்கூட்டு கோபுரம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்புறமாகச் செலும் வீதி மணிக்கூட்டு கோபுர வீதி என்று அழைக்கப்படுகிறது. இதன் இன்னொரு பகுதி, வைத்தியசாலைக்கு பின்புறமாகச் சென்று யாழ். நாவலர் வீதியுடன் இணைகிறது. இந்த வீதி ஆரம்பமாகும் இடத்தில் அதாவது வேம்படி வீதி இணையும் சந்தியில், யாழ் பொதுசன நூலகத்திற்கு சமீபமாக யாழ் மத்திய கல்லூரி மைதானத்தின் வட எல்லையில் உயர்ந்த நிலையில் மிகக் கம்பீரமாகக் காட்சி தருகிறது இந்த மணிக்கூட்டு கோபுரம்.

இந்த மணிக்கூட்டு கோபுரம் நான்கு பக்கங்களிலும் கடிகாரங்களைக் கொண்டது. கடந்த இரு வருடங்களாக செயலற்றிருந்த கடிகாரங்கள் அகற்றப்பட்டு புதிய கடிகாரங்கள் பொருத்தப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் 5ம் திகதியிலிருந்து இயங்கத் தொடங்கியிருக்கிறது.

இலங்கையில் பிரித்தானிய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தின்போது அமைக்கப்பட்ட இது, 138 வருடகால வரலாற்றுப் பெருமை கொண்டது. இதனை வடபகுதிக்கு பெருமைசேர்க்கும் ஒரு நினைவுச்சின்னம் என்று சொல்வது பொருத்தமானது.

இது தோற்றம் பெற்றது பற்றி யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை தலைவர் பேராசிரியர் ப. புஷ்பரத்தினம் தகவல் தருகையில், ''1871 ஆம் ஆண்டு முதல் 1884 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இலங்கையில் சேர் ஜேம்ஸ் லோங்ட் (Sir James Longde) என்ற ஆளுநர் பதவியிலிருந்தார். அப்போது 1875 ஆம் ஆண்டில் வேல்ஸ் இளவரசர் இலங்கைக்கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்திருந்தார். அவரது விஜயத்தின் நினைவாகவே இந்த மணிக்கூட்டு கோபுரம் அமைக்கப்பட்டது. இதனைக் கட்டுவதற்கு ரூபா பத்தாயிரம் செலவிடப்பட்டிருக்கிறது. பொதுமக்களிடமிருந்து கிடைத்த நிதியுதவியாக 4000 ரூபாவும் அடங்குகிறது. அந்நாளில் அரச கட்டிடக் கலை நிபுணராகவிருந்த சிமிற்றர் (Smitter) என்பவரால் இந்த மணிக்கூடு கோபுரம் வடிவகைப்பட்டது. இதில் பொருத்துவதற்கான நான்கு கடிகாரங்களையும் அப்போது ஆளுநராகவிருந்த சேர் ஜேம்ஸ் லோங்ட் தனது அன்பளிப்பாக வழங்கி யிருந்தார்," என்கிறார் புஷ்பரத்தினம்.

இந்த மணிக்கூட்டு கோபுரத்தில் ஆரம்பகாலத்திலிருந்து உரோமன் இலக்கம் கொண்ட முள் கடிகாரங்களே பொருத்தப்பட்டிருந்தன. போர்க்காலச் சூழ்நிலைகள் காரணமாக கடிகாரங்கள் பழுதடைந்ததினால் தொண்ணூறுகளின் இறுதியில் பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் இதற்கான புதிய நான்கு கடிகாரங்களை அனுப்பிவைத்திருந்தார். அப்போது இலங்கையில் பிரிட்டிஸ் தூதுவராக இருந்த லின்டா டபீல்ட் உதவியின் பேரில் புனரமைக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்தில் புதிய கடிகாரங்களின் செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தார். மணிக்கூட்டு கோபுரத்தின் பராமரிப்பு செயற்பாடு யாழ் மாநகரசபையிடமே இருந்து வந்தது.

2009 அல்லது 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடிகாரங்கள் மீண்டும் பழுதடைந்ததினால் தனியார் தொலைத்தொடர்பு சேவை நிறுவனம் ஒன்றின் உதவியுடன் கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் டிஜிற்றல் கடிகாரங்கள் பொருத்தப்பட்டன.

ஆனால், டிஜிற்றல் கடிகாரங்களும் அடிக்கடி செயலிழந்ததினால் அதுவும் வெற்றியளிக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் டிஜிற்றல் கடிகாரங்களும் முற்றாகவே செயலிழந்துவிட்டன.

இரண்டு வருடகால இடைவெளிக்குப் பின்னர் இப்பொழுது 1 முதல் 12 வரையிலான இலக்கங்கள் கொண்டதாக கம்பிகளிலான முள் பொருத்தப்பட்ட வட்டவடிவமான கடிகாரங்கள் கோபுரத்தின் நான்கு பக்கங்களிலும் காணப்படுவதுடன், மணிக்கூட்டு கோபுரமும் புனரமைக்கப்பட்டு வெள்ளை வர்ணப்பூச்சுடன் மீண்டும் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கிறது. முதியோர்கள் கூட தூரத்திலிருந்து நேரத்தை பார்க்கக்கூடியதாக கடிகாரங்கள் அமைந்திருக்கின்றன. கடிகார முள் 1 முதல் 12 மணிவரையிலான நேரத்தை காட்டும் போது, ஒவ்வொரு மணித்தியாலமும் குறிப்பிட்ட நேரத்தை அறிவிக்கும் வகையிலான மணியோசையை எழுப்புவதாக புதிய கடிகாரங்கள் உள்ளன. இரவு நேரத்தில் இந்த மணியோசை நீண்ட தூரத்திற்கு கேட்பதாக பலராலும் சொல்லப்படுகிறது.

யாழ் மாநகரசபை முதல்வரின் முயற்சியின் பயனாக கோபுரத்தின் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு புதிய கடிகாரங்களும் பொருத்தப்பட்டிருப்பதுடன், அதற்கான பணம் மாநகரசபை நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அ. கனகசூரியர்



வேலணை சற்குருநாதன்

# பூமிக்கு வெளியே, யார் அங்கே?

பால்வெளி அண்டத்தில் மட்டுமே நமது பூமியின் அளவுடைய 1700 கோடி கிரகங்கள் இருக்கலாம் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக விண்ணியலாளர் கூறுகின்றனர்.

நமது சூரியனைப் போன்ற அளவு கொண்ட நட்சத்திரங்களை நாசாவின் கெப்ளர் விண்வெளி தொலைநோக்கி ஆராய்ந்தது.

அப்படியான நட்சத்திரங்களில் ஆறில் ஒன்றில் பூமியின் அளவுகொண்ட கிரகங்கள் இருப்பதற்கான அறிகுறிகளை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


கலிபோர்னியாவில் உள்ள அமெரிக்க விண்ணியல் ஆராய்ச்சிக்குழுமத்தின் முன்பு இந்த ஆய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பூமியை ஒத்த அளவில் ஏராளமான கிரகங்கள் இருந்தாலும் இவற்றில் பெரும்பான்மையானவை உயிர்கள் வாழ முடியாத அளவுக்கு அதிக வெப்பம் கொண்டவையாக இருக்கும் என்பதை விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஒரு கோளத்தில் உயிர்கள் வாழ்வதற்கு, திரவ வடிவில் நீர் வேண்டும்.

ஆனாலும் ஆயிரங்கோடிக் கணக்கில் பூமியை ஒத்த கிரகங்கள இருக்கின்றபடியால், பூமியைப் போல உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற அம்சங்களைக் கொண்ட கிரகம் ஒன்றை விண்ணியல் நிபுணர்கள் நிச்சயம் கண்டறிவார்கள் என்று பிபிசியில் அறிவியல் துறை செய்தியாளர் கூறுகிறார்.

ராம்ஜி



# 3D அனுபவம் உண்டா?

**நாம் முப்பரிமாண உலகில் வாழ்ந்து வந்தாலும் முப்பரிமாணம் என்றால் என்ன என்பதை 3D படம் ஒன்றைப் பார்ப்பதன் மூலம்தான் விளங்கி பரவசப்படுகிறோம் என்பதே ஒரு விநோதம்தான்**

முப்பரிமாணம் என்றால் எங்களில் நிறையப்பேருக்கு என்னவென்று தெரியாது. ஆனால் 3 என்ற எண்ணையும் D என்ற ஆங்கில எழுத்தையும் சேர்த்து '3D' என்று சொன்னால் எல்லோருக்கும் தெரியும்.

எங்கள் கண்களுக்கு இயற்கையாகத் தெரியும் அனைத்துக் காட்சிகளும் முப்பரிமாண தோற்றமுள்ளவையே ஆகும். ஆனால் அவை 3D தோற்றத்துடன் தான் உள்ளன என்பதை நாம்தான் உணர்வதில்லை. அதனை பத்திரிகையிலோ திரையிலோ பார்க்கும்போதுதான் வியப்பும் மலைப்பும் ஏற்படுகிறது.

முப்பரிமாண படங்களை நான் முதன் முதலில் பார்த்தது 'ஆனந்த விகடன்' சஞ்சிகை மூலமாகத்தான் 1990 களின் முற்பகுதியில் என்று நினைக்கிறேன். 'ஆனந்த விகடன்' ஒவ்வொரு வாரமும் அதன் கடைசிப் பக்கத்தில் முப்பரிமாண படமொன்றை பிரசுரித்தது. இதன் காரணமாக அதன் விற்பனை அதிகரித்ததாக சொல்லக் கேள்வி. அப்போது ஆனந்த விகடன் பத்திரிகை கொழும்பில் எளிதாக கிடைத்தது. போதாக்குறைக்கு ஆமர் வீதியில் ஒரு வயதான பாய் பழைய ஆனந்த விகடன் சஞ்சிகைகளை விற்று வந்தார். அவரிடம் 5 ரூபாவுக்கு இரண்டு என்ற விலையில் ஆனந்த விகடனும் குமுதமும் கிடைத்தன.

ஆனந்த விகடனில் கடைசிப் பக்கத்தை முதலில் மூக்குக்கு நேரே 1 அங்குல தூரத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அதன் பின் அதனை மெல்ல மெல்ல தூரத்துக்கு கொண்டு செல்லவேண்டும். 4 முதல் 6 அங்குல தூரத்தில் முப்பரிமாண படம் கண்களுக்கு தெரியும் என்று போட்டிருந்தார்கள்.

நண்பர்கள் எல்லாம் பார்த்தார்கள். ஆஹோ ஓஹோ என்று சொன்னார்கள். இத்தனையும் கேட்ட பின்னர் நான் பார்த்தேன். ஆனால் கண்களில் வலி வந்ததுதான் மிச்சம். எதுவுமே தெரியவில்லை. ஆனால் நண்பர்களிடம் அதனைச் சொல்ல முடியாதே! சிரித்துக்கொண்டே அதுவும் தெரிந்தது. இதுவும் தெரிந்தது. மலைப்பாக இருந்தது என்று பொய்யாக கூறி பெருமைப்பட்டுக்கொண்டேன். வீட்டுக்கு சென்றதும் அறைக்கதவை பூட்டிக்கொண்டு மீண்டும் பார்த்தபோது குறிப்பிட்ட படத்துக்குள் வேறொரு படமும் தெரிந்தது. ஆனால் ஒவ்வொரு சமயமும் சரியாக தெரியவில்லை. சில சமயங்களில் மட்டும் 3D மற்றைய சமயங்களில் சைபர் D.

சில காலத்தின் பின் மாளிகாவத்தை ரூபி தியேட்டரில் 'மை டியர் குட்டிச்சாத்தன்' என்றொரு படத்தை திரையிட்டார்கள். எனக்குத் தெரிந்தவரை சமீபகாலத்தில் இலங்கையில் திரையிடப்பட்ட முதலாவது 3D படம் அதுதான். அதற்கு முன்னர் கண்ணாடி போட்டுப் பார்க்கும் ஆங்கிலப் படங்கள் வந்ததாகக் கேள்வி. ரூபியில் டிக்கட் கொடுக்கும்போதே ஒரு கண்ணாடியையும் சேர்த்துக்கொடுத்து விடுவார்கள். அந்த கண்ணாடியை போட்டால் தான் படம் சரியாகத் தெரியும். இல்லாவிட்டால் மங்கலாகத்தான் இருக்கும் என்று கண்ணாடியை கொடுக்கும்போதே சொல்லி விட்டார்கள்.

படத்தை பார்த்தேன். மங்கலாக இருந்தது. கண்ணாடியை போட்டேன். சீராக தெரிந்தது. அந்த படத்தின் சில காட்சிகளில் வாழைப் பழம், வடை, பொங்கல் இத்தியாதிகள் வாய்க்கு அருகில் வருவதைப் போல் இருந்தது. அன்று எனக்கு கிடைத்தது நிச்சயம் ஒரு புதிய அனுபவம்தான்.

அதன்பின் நீண்டகாலமாக 3Dயுடன் எந்த பரிச்சியமும் இருக்கவில்லை... 2012 வரை.

2012ஆம் வருடம் முதல் கொழும்பில் உள்ள சவோய் மற்றும் மெஜஸ்ட்டிக் சிட்டி ஆகிய தியேட்டர்கள் 3D படங்களை திரையிட்டு வருகின்றன. முதலில் வந்த சில படங்கள் Animation மூலம் உருவாக்கப்பட்ட சிறுவர் படங்கள்தான். அண்மையில் வெளியான 'Hobbit' என்ற 3D படத்தை பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மைடியர் குட்டிச்சாத்தான் போலன்றி மிகவும் உயர் தொழில்நுட்பத்தில் நேர்த்தியாக தயாரிக்கப்பட்ட படம் அது. 'Lord of the rings' என்ற பிரபல படத்தின் டைரக்டர் இயக்கிய படம். அது 3Dயின் உச்சம். பிரமிக்கத்தக்க அனுபவம் என்றுதான் கூறவேண்டும்.

இந்த விடயத்தில் (3D) கடந்த மாதம் இடம்பெற்றது மாறுபட்ட அனுபவம். 'சிலோன் டுடே' என்றொரு பத்திரிகை 8 பக்கத்தை 3D தொகுப்பாக வெளியிட்டது. அத்துடன் சிவப்பு நீல கண்ணாடியொன்றையும் சேர்த்துக்கொடுத்தார்கள்.

கொழும்பு நகர் காட்சிகள், அவதார் சினிமா மற்றும் செய்திகளுடன் கூடிய முதல் பக்கம் ஆகியவவை அசத்தின.

இதனையடுத்து அடுத்தவாரமே மற்றொரு பத்திரிகை நிறுவனம் இதேபோன்ற 3D தொகுப்பொன்றை வெளியிட்டது. அந்த இரண்டுமே வந்த வேகத்திலேயே விற்றுத் தீர்ந்து விட்டன. இதன் மூலம் பலர் 3D அனுபவத்தை பெற முடிந்தது.

இந்நிலையில் 3D விளம்பரமொன்று கடந்த மாதம் முதல் திரைக்கு வந்துள்ளது. இலங்கையின் முதலாவது 3D விளம்பரம் இதுதான்.

போகிறபோக்கில் இவ்வருட இறுதிக்குள் 3D பத்திரிகையொன்று வாராவாரம் இலங்கையில் வெளிவந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

3D என்பது இலங்கையில் ஒரு புதிய அனுபவமாக மாறியுள்ளது. சிறுவர்களுக்கு உகந்த தொனிப்பொருள் மற்றும் கதாபாத்திரங்களை மையப்படுத்தியே ஏராளமான 3D படங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை எங்கள் சிறுவர்கள் பார்க்கவேண்டும். இந்த புதிய அனுபவத்தை பெறவேண்டும். எனவே இவ்வாறு வெளிவரும் 3D படங்களில் ஏதாவது ஒன்றை பார்க்க பிள்ளைகளை பெற்றோர் அழைத்து செல்லவேண்டும். உலகின் ஏனைய நாடுகளில் சிறுவர்கள் பெறும் புதிய அனுபவத்தை உங்கள் பிள்ளைகளும் பெறவேண்டும். அந்தப் படங்களை பார்த்தபின் அவர்களுக்கு ஏற்படும் உணர்வுகளை கேட்டறியுங்கள். உங்களுக்கு அது புது அனுபவத்தை ஏற்படுத்தும்.

அவர்களுடன் சேர்ந்து பெரியவர்களான நீங்களும் ஒரு முறை 3D படமொன்றை பாருங்கள். மாறுபட்ட அனுபவத்தை நீங்களும் உணரலாம்.



பி.பி.ஸ்ரீநிவாஸ்

கடந்த மாதம் 14ம் திகதி மாரடைப்பினால் மரணமடைந்த பழம் பெரும் பின்னணிப் பாடகர் பி.பி. ஸ்ரீநிவாஸ் 1930ம் ஆண்டு செப்டெம்பர் 22ம் திகதி ஆந்திர மாநிலத்தில் கிழக்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள பசலபுடி கிராமத்தில் பிறந்தவர். ஜெமினி நிறுவனம் 1951ம் ஆண்டு ஹிந்தியில் தயாரித்த மிஸ்டர் சம்பத் படத்தில் இடம்பெற்ற 'கஹிபரது' என்ற ஹிந்திப் பாடல் மூலம் அறிமுகமான இவர் 1953ல் வெளியான 'ஜாதகம் தமிழ் படத்தில் 'சிந்தனை செய் செல்வமே' பாடல் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகம் பெற்றார்.



## குருவும் சிஷ்யனும்

இப் படத்தை நகல் செய்யும் போது அலுவலக பையன் சில தவறுகளைச் செய்து விட்டான். வலப்பக்க படத்தில் ஆறு தவறுகளை செய்திருக்கிறான். அவற்றைக் கண்டுபிடித்துச் சொல்கிறீர்களா? கண்டுபிடிப்பை எங்களுக்கு எழுதி அனுப்பினால் அறுவரின் பெயர்களை அடுத்த இதழில் பிரசுரிப்போம்.

## அன்றும் இன்றும்

மணி ஸ்ரீகாந்தன்







நூறு ஆண்டுகளுக்கு முன்னர் புறக்கோட்டை பஸார் இப்படி அமைதியாக சாணி மணந்துகொண்டிருந்தது. அதன் இன்றைய தோற்றம் மற்றப் படத்தில். காலம் அனைத்தையும் அழித்துவிட்டது. இன்றைய புறக்கோட்டையையும் காலம் எப்படியெல்லாம் அழித்து மாற்றுமோ, யாருக்குத் தெரியும்?

*எழுபதுகள் முதல் கொழும்பு திடீர் மரண விசாரணை மன்றுக்கு பத்திரிகையாளராக சென்று செய்தி சேகரித்துவரும் கட்டுரையாளர் தனக்கு தெரியவந்த உண்மைச் சம்பவங்களை இங்கே உங்களுடன் சுவை பட பகிர்ந்து கொள்கிறார்.*

### மரண விசாரணை மன்றில் கேட்ட கதைகள்



# எமனை நோக்கி எஸ்கேப் ஓட்டம்!

ஏ. மதுரை வீரன்

ஜினதாஸ முதலாளி பெரிய ஜவுளிக்கடை பிஸினஸ்மேன். மற்றொரு ஜவுளிக்கடை முதலாளியின் மகளை திருமணம் செய்ததன் மூலம் ஒரு ஜவுளிக்கடை இரண்டாகி இப்போது மூன்றாகியிருக்கிறது.

இவருக்கு இரண்டு பிள்ளைகள். ரூபன் என்றொரு மகன், ரூபினி என்றொரு மகள். இவர்கள் இரண்டு பேருக்கும் பணக்காரத்தன்மை மனதுக்குள் வந்துவிடக் கூடாது; தாம் மத்திய குடும்பத்தினர் என்றே அவர்கள் நினைத்துக்கொள்ள வேண்டும் என்பதால் அளவோடு செலவு, அதனை மீறாத கவனம் ஆகியவற்றை சிறு வயதில் இருந்தே தனது பிள்ளைகள் கற்றுணர வேண்டும் என்ற வேட்கையில் ஒன்றுக்கு நான்கு கார்கள் வீட்டில் இருந்தும் தனது பிள்ளைகளை பஸ்ஸிலேயே பாடசாலைக்கு அனுப்பி வைத்தார்.

ரூபனும் ரூபினியும் நகரில் பிரபலமான பாடசாலைகளிலேயே படித்து வந்தனர். ஓரளவு உயர் மட்ட மாணவ குடும்பங்களுடனேயே அவர்கள் பழகி வந்தனர். இது அவர்களது தந்தைக்கு பெரும் திருப்தியளித்தது. வாழ்க்கையில் நடுத்தர வர்க்கத்தினர் அனுபவிக்கும் இரண்டுங் கெட்டான் ரக சுமைகளை அனுபவரீதியாக தனது பிள்ளைகள் தெரிந்து கொள்ளவேண்டுமே தவிர அவற்றை அவர்களது வாழ்க்கை ஒரு போதும் அனுபவிக்கக் கூடாது என்பது அவரது நோக்கமாகும்.

ரூபன் மற்றும் ரூபினியின் மாடி வீடு அமைந்திருந்த இடத்துக்கு பின்னால் நடுத்தர வர்க்கத்தினர் பெருமளவில் குடியிருந்த ஒரு வீட்டுத் தொகுதி. துறைமுகத்தில் வேலை செய்த ஊழியர்களுக்கான வீடுகளே அந்த தொகுதியில் இருந்தன. நூற்றுக்கு மேற்பட்ட வீடுகள் அங்கே இருந்தன. அவற்றில் பாடசாலை செல்லும் மாணவ மாணவியர் பெருமளவில் இருந்னர்.

கிரிக்கெட், றகர், கால்பந்தாட்டம் மற்றும் கரப்பந்தாட்ட அணிகள் என்று பல டீம்கள் அந்த தொகுதிக்குள்ளேயே இருந்தன. அங்கிருந்த கிரிக்கெட் மற்றும் றகர் அணிகளின் ஒட்டு மொத்த ஸ்டார் மகேஸ். காப்டன் என்ற பொறுப்பை மகேஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அந்த அணிகளுக்கு காப்டன்களாக இருந்தவர்களும் மகேஸின் ஆலோசனையுடன் தான் செயற்பட்டனர்.

விளையாட்டில் மட்டுமல்ல கணக்கிலும் மகேஸ் புலி. கணக்கு சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ள இளம் மாணவர்களை மைதானத்தில் வைத்துக்கூட மகேஸை அணுகுவதுண்டு.

ஒரே பிரதேசம் என்பதால் மகேஷின் திறமைகளால் கவரப்பட்ட ரூபனும் அவனது நண்பர்கள் குழுவில் இருந்தான். ரூபினிக்கு அது தெரியும். ஆனால் மகேஸ்- ரூபன் நட்பு வீட்டுக்குத் தெரியாமல் இருவரும் ரகசியம் காத்தனர்.

ரூபினி மட்டும் என்ன... அந்த வீட்டுத் தொகுதியில் இருந்த மாணவியர் சிலர் அவளது நண்பிகள் லிஸ்ட்டில் இருந்தனர். ஆனால் அதை அவள் வீட்டுக்குத் தெரியாமலே வைத்திருந்தாள்.

அவர்கள் தந்தை ஜினதாஸ முதலாளி ஆரம்பத்தில் வறுமையில் வாடியவராக இருந்தாலும் தமது பிள்ளைகள் எப்போதுமே செல்வத்தில் மிதக்க வேண்டுமே தவிர வறுமையில் உழலும் மற்றும் நடுத்தர வர்க்கத்தினருடன் பழகக் கூடாது. அவர்களுடன் நட்பு பாராட்டக் கூடாது என்று கருதினார். பின்னால் உள்ள வீட்டுத் தொகுதியில் உள்ள சம வயதினர்களுடன் தனது பிள்ளைகள் நட்பு பாராட்டுவது தெரிந்தால் அவர் கோபமூர்த்தியாகிவிடுவார்.

இந்த சமயத்தில்தான் அந்த சம்பவம் நடந்தது.

அன்று அந்த பஸ்ஸில் நிறையக் கூட்டம் இருந்தது. அதில் முக்கால் வாசிப்பேர் பாடசாலை மாணவ மாணவியர். மகேஸ், அவனது நண்பர்கள், ரூபன், ரூபினி ஆகியோருடன் நகரில் இருந்த பிரபல ஆண்கள் பாடசாலையொன்றில் உயர் மட்ட மாணவர் குழுவும் அந்த பஸ்ஸில் பயணம் செய்தனர். குறிப்பிட்ட அந்த உயர் மட்ட மாணவர் குழு எப்போதுமே தம்மை ஆளவந்தோர் என்ற நினைப்பில் மிதப்பவர்கள். இதனால் எங்கும் எதிலும் அவர்கள் வைத்ததுதான் சட்டம்.

நீண்ட காலமாகவே ரூபினியை குறிவைத்திருந்த ஒரு மாணவன்தான் அந்தக் குழுவில் தலைவன். சொந்த கார் வைத்திருந்தான். அதில்தான் கல்லூரிக்கு வருவான். ஆனால் வாரம் ஓரிருமுறை அவனது பரிவாரங்களுடன் பஸ்ஸில் வருவான். வேறெதற்கு ரூபினியை பார்ப்பதற்குத்தான்! மன்சூரலிகான் உடம்பு, உரித்த இறால் போல் சிகப்பு, அப்புக்குட்டி கிராப்பு, இதுதான் அவன்.

சுற்றிலும் தனது நண்பர்கள் பரிவாரம். ஏனையோர் அவன் வர்த்தைகளுக்கு கீழ்ப்படிபவர்கள் என்ற திமிரில் ரூபினியை கட்டிப்பிடித்து முத்தமிட்டான். ரூபினி ஐயோ, குய்யோ என்று அலறினாள். அவளது தோழிகளுக்கு அதிர்ச்சி கூச்சலை கேட்ட டிரைவர் பஸ்ஸை நிறுத்தினான். மன்சூர் அலிகான் உடம்பானை வெளியே இழுத்தான் மகேஷ். சரமாரியான அடி உதை. அவனது நண்பர்கள் பறந்தோடித் தப்பினர். அதே ரூட் பஸ் ஒன்று பின்னால் வந்ததும் கிட்டத்தட்ட அனைவருமே அதில் ஏறிச் சென்றனர்.

அன்று ஆரம்பித்தது மகேஸ்- ரூபினி லவ் எபிசோட்!

இப்போது நூறாவது அங்கத்தையும் தாண்டி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருந்தது.

இத்தனை தூரம் சென்ற பின்னர்தான் ஜினதாஸ முதலாளிக்கு விஷயமே தெரிந்தது. காதல் ஜோடிகள் பேசிக்கொண்டிருப்பதை அவரது நண்பர் ஒருவர் பார்த்திருக்கிறார். போட்டுக்கொடுத்துவிட்டார்.

அதைக் கேட்ட ஜினதாஸ முதலாளி கோபமூர்த்தியானார். அவசர அவசரமாக வீட்டுக்கு வந்து ரூபினியின் தலைமுடியை பற்றியிழுத்து சரமாரியாக அடியும் உதையும் கொடுத்தார்.

'பரதேசியுடன் படுக்கை சுகம் கேட்குதா உனக்கு' என்று கத்தியவர் மகேஸ் குடும்பத்ினரை கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டித் தீர்த்தார்.

கோபமூர்த்தியுடன் ரூபினியின் அம்மா, பாட்டி, மாமா ஆகியோரும் சேர்ந்து கொண்டனர். ரூபினியை அவர்களும் அடித்துத் துவைத்தனர். அறைக்குள் போட்டு பூட்டிவிட்டனர்.

ரூபன் பாவம். தங்கையை காப்பாற்ற வழி தேடினான். கிடைக்கவில்லை. அரச மரத்தடி பிள்ளையார் போல் உட்கார்ந்து விட்டான். மனது மட்டும் ரூபினியை நினைத்து அழுதது.

ரூபினி பூட்டி வைக்கப்பட்ட அறையின் வெளி ஜன்னல் மூலம் சாப்பாடு உள்ளே சென்றது அந்த அறையை அடுத்து பாத்ரூமும் இருந்ததால் ரூபினியின் நிலை முற்றிலும் மோசமாகி விடவில்லை. ஆனால் நான்கு நாட்கள் அறைக்குள்ளேயே அடைபட்டு கிடந்ததால் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகினாள் ரூபினி.

ரூபினி இருந்த அறைக்கு வெளியில் இருந்த அத்தனை ஜன்னல்களுக்கும் ஆணி அடித்து சீல் வைத்திருந்தனர்.

ரூபனுக்கு தங்கையை பார்க்க பரிதாபமாக இருந்தது. ஆனால் மிகுந்த சிரமத்துடன் ஒரு ஜன்னலுக்கு அடித்திருந்த ஆணியை மட்டும் கழற்றி ஜன்னலை திறக்க மகேஸின் உதவியுடன் திட்டம் தீட்டினான்.

இரவு 10 மணிக்கு வெளியே தப்பிவிடு. மகேஸ் மற்றும் அவனது நண்பர்கள் உன்னை அழைத்துச் செல்ல தயாராக இருப்பார்கள் என்ற தகவலையும் ரூபினிக்கு தெரிவித்து விட்டான்.

அப்போது பகல் 2 மணி. 4 நாட்கள் அடைப்பட்டுக் கிடந்த வெறி. எவருமே ஆதரவு காட்டாததால் ஏற்பட்ட ஆதங்கம், எப்படியாவது தப்பவேண்டும் என்ற வேட்கை. எல்லாம் சேர்ந்து ரூபினியை ரொம்பவும் படுத்திவிட்டன.

அருகில் இருந்த நோட்புக்கை எடுத்தாள். ஒரு நீண்ட கடிதத்தை எழுதினாள். அதனை மேசையில் வைத்தபின் யோசித்தாள்.

எல்லாம் சரி. இரவு 10 மணிக்கு தப்பும்போது மகேஸ் சொன்னபடி அங்கு இருக்காவிட்டால்? அந்த நினைப்பே ரூபினியை ரொம்பவும் தவிக்க வைத்தது.

இப்போதே பகலிலேயே தப்பினால் என்ன? தோழியர் வீட்டுக்காவது சென்று விடலாமே.

இரண்டாவது ஜன்னலை அழுத்தித் தள்ளினாள் திறந்துவிடும் என்று ரூபன் சொல்லியிருந்தானே அது உண்மையா? பொய்யா? பரீட்சித்துப் பார்த்தால் என்ன? தப்புவது இருக்கட்டும். முதலில் ஜன்னல் திறக்கிறதா என்று பார்ப்போம்.

இரண்டாவது ஜன்னலை மெல்லத் தள்ளினாள். ரூபன் சொன்னது உண்மைதான். ஜன்னல் திறந்து கொண்டது. வெளியே பார்த்தாள். ஒருவரையும் காணவில்லை. ஜன்னலை நன்றாக திறந்து வெளியே குதித்தாள்.

இனி விடுதலை என்ற சந்தோஷத்துடன் சில அடி தூரம்தான் சென்றிருப்பாள்.

(31ஆம் பக்கம் பார்க்க)



# சம்பந்தி

தவம்



மூனாக்கானா

"என்ன கடபுக் கட்டிக்கிடக்கு, மச்சாள், மச்சாள், மச்சாளே!" கடப்படியில் நிண்டு தவமணி கூப்பிட்டாள்.

"ஏய்! ஆரோ கடப்பில் நிண்டு கூப்பிடுகிறாப்பில கேக்கிது... போய்ப்பாரன் கடப்பக் கட்டி வெச்சிரிக்கிய" என்று கேட்டாள் வள்ளியம்மை.

"ஓம் ஆட்டுக்கரச்சலுக்காக கட்டிவெச்சான். நீ போய்பாரு" என்று சொல்லிவிட்டு காத்தமுத்து மறுபக்கம் திரும்பி படுத்துக்கொண்டான். வள்ளியம்மை ஓடிப்போய்ப் பாத்ததும் அங்கே செல்லத்தம்பியும் மனைவி தவமணியும் நின்று கொண்டிருந்தார்கள்.

"ஏன் மச்சாள் கடப்பக்கட்டினனீங்க?"

"அத ஏன் கேக்கிறா மச்சாள்... அவன் சின்னாண்ட ஆடு படுத்திற பாடு... அதுதான் கட்டி வெய்க்கிறனாங்க" என்று சொல்லி விட்டு, வா மச்சாள் வாங்க என்று கூட்டிக்கொண்டு போனாள். அவர்களை பாயில் இருத்திவிட்டு "இஞ்ச ஆரு வந்திதிக்காங்கெண்டு பாரு. உண்ட தங்கச்சியும் மச்சானும் வந்திரிக்காங்க எழும்புங்க," என்றாள் வள்ளியம்மை.

"என்ன தங்கச்சியா? எனக்கேது தங்கச்சி?" என்று சொல்லிக்கொண்டு கோபத்தோடு எழுந்துக்கொண்டான் காத்தமுத்து.

"இதென்னண்ணா உண்டகத- மலப் பழுத்தாப்பில இந்தா நானிரிக்கன்- இந்தா உண்ட மச்சானும் இரிக்காரு ஏனண்ண இப்பிடிப் பேசுறா"

"தங்கச்சி என்டொருத்தி இருந்தா நான் சாகப்புழப்க்க இரிக்கதக்க வந்திரிப்பாளே- இண்டய்க்கோ நாளைக்கோ எண்டிருந்த இந்தச் சீவன் ஏதோ அந்த காளித் தாயாரால சீவன் கிடக்கிது" என்றான் காத்தமுத்து.

"சத்தியமா அண்ண எண்ட தலயால... அண்ண நீ வருத்தமாக் கிடந்தது எனக்கும் தெரியாது. வயல் காட்டில போய்கிடந்த இவருக்கும் தெரியாது. தெரிஞ்சா துடிச்சிப்பதச் செல்லுவ ஓடிவந்திருப்பம்"

வள்ளியம்மா குறுக்கிட்டு, "அத ஏன் கேக்கிற மச்சாள், அவர் பட்ட பாட்ட! சளி அடச்சி இருமப்புடிச்சிதெண்டா அவன் இளயதம்பி ஓடாவி மரமறுக்கிற சத்தம்போல இஞ்ச இழுத்தா மூனு ஊடு தள்ளிக் கேக்கும் - நான் தனிய என்ன செய்வன்- பென்னம் பரிசரியாரிட்ட அந்த குளிசயப் போய் வேண்டி வாறத்துக்கும் ஒரு ஆளிள்ள. பொடியனும் வெளிநாட்டில. எண்டப்பா நாங்க பட்ட பாட்ட ஆரிட்டச் செல்ற" என்று வள்ளியம்மை மனதில் இருந்த வேதனையெல்லாம் கொட்டிவிட்டாள்.

"வெயிலிலும் பனியிலும் நுளம்புக்கடியோடயும் அந்தக் காட்டில கிடக்கிற எனக்கு எப்புடி மச்சான் தெரியும். ஆரும் சொன்னாத் தானே தெரியும்'?" என்றால் செல்லத்தம்பி.

"இந்த நொண்டிச் சாட்டெல்லாம் எனக்கிட்ட கதயாத. நானென்ன விரல் வாய்க்குள வெச்சாக் கடிக்கத் தெரியாத குழந்தப்புள்ளயில்ல. அவளவுக்கென்ன நீங்க சிங்கப்பூரிலய இருந்தனீங்க?"

"எங்கட கதய நீங்க நம்பல்லய அண்ண?"

"அண்ணன் தங்கச்சி உறவு இதோட முறிஞ்சி போச்சி- தங்கச்சியாம் தங்கச்சி..."

"என்ன நீங்க இப்பிடியெல்லாம் கதய்க்கிற? தங்கச்சி தங்கச்சிதானே?" என்றாள் வள்ளியம்மை

"பொத்திடி வாய!" என்று காத்தமுத்து உறுக்கியதும், "சரி நான் பொத்திறன். வாசல் கடய்க்கு வந்தவியளக்கு இப்பிடியெல்லாம் கதய்க்கிறத... நீங்க அண்ணன் தங்கச்சி நான் புறத்தியாள்- என்னெண்டான செய்யுங்க" என்றாள் வள்ளியம்மை.

"போயி நீ உண்ட வேலயப்பாரு" என்று உறுக்கிச் சொல்லிவிட்டு, செல்லத்தம்பியப் பார்த்து "நீங்க வந்த காரியம் என்ன?" என்று காத்தமுத்துக் கேட்டான்.

"நாங்க உங்கள பாத்திற்றுப் போகத்தான் வந்தம்"

"சரி பாத்திற்றியள் போகலாம்தானே" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டான்.

"பாத்தியாடி கடய்க்கு வந்தவியள கொண்ணன் ஆதரித்தத... நீதானே வா போவம் போவம் என்று கூட்டிற்று வந்தா கொண்ணன் மச்சானுக்கு குடயும் குதிரயும் தந்திருக்காரு வா போவம்" என்று கையை உயர்த்தினான்.

வள்ளியம்மா ஓடி வந்து, "மச்சாள் என்னக் குற நினயாத. நானென்ன செய்வன்... நீங்கள் அண்ணன் தங்கச்சி. வாயப் பொத்த சொல்லி எனக்கு உறுக்கினத்த நீ கண்டதானே" என்று தலையை குனிந்து கொண்டாள்.

செல்லத்தம்பியும் மனைவியும் வீட்டை விட்டு வெளியே வந்து றோட்டோரம் ஆல மரத்துக்குக் கீழே 'பஸ்'சுக்காக காத்துக்கொண்டு நின்றார்கள்.

காத்தமுத்து வீட்டில் நடந்ததையெல்லாம் கோடிப்பக்கம் நின்று கேட்டுக்கொண்டிருந்த கதிராமர், என்ன விசயம் என் அறிவதற்காக வெளியே வந்தார். அங்கோ றோட்டோரம் ஆல மரத்துக் கீழே செல்லத் தம்பியும் மனைவியும் நிற்பதைக் கண்டு அவர்களிடம் போனார்.

" என்ன புள்ள ஊருக்குப் போக பஸ்சுக்குக் காத்து நிக்கியள்"

"வஸ் என்னத்துக்கு, அண்ணன் தந்த குடையும் குதிரையும் இரிக்கக்க" என்று தவமணி கண்கலங்கியபடி கூறினாள்.

"என்னபுள்ள உண்ட கத ஒரு குத்துக்கதயா கிடக்கு... நடந்ததச் சென்னாத்தானே எனக்கு விளங்கும்."

தவமணி நடந்த விசயம் முழுவதையும் சொல்லி வேதனை தாங்க முடியாமல் அழத் தொடங்கினாள்.

"அப்படியா அவன் செய்தான்? புள்ள அவனிடம் நான் இப்பபோய் இதக் கேட்டிட்டு வருமட்டும் வஸ் ஏறாம இந்த ஆலமரத்தடியில் இரிங்க" என்று கூறிவிட்டு காத்தமுத்து வீட்டுக்கு கதிராமர் வேகமாக நடந்தார்.

கடப்பால ஏறியதும் "வள்ளியம்மா" என்றார்.

"என்ன கதிராமண்ண"

"உண்ட புரிசனெங்க"

"அந்தா இரிக்காரு"

"டேய் காத்தமுத்து இஞ்சவாடா"

"என்ன கதிராமண்ணா"

"டேய் இந்த நடந்த சங்கதியெல்லாம் நான் ஒட்டி நிண்டு கேட்டிட்டுத்தான் வாறன். அதுகள் ரெண்டு பேரும் றோட்ல வஸ்சுக்குக் காத்திற்று நிக்குதுகள். நீ செஞ்ச வேல, உனக்கு நல்லாத் தானடா தெரிஞ்சுது?" என்று கோபத்துடன் கேட்டார் கதிராமர்.

"என்ன வேல"

"உன்னப் பாக்கிறதுக்கு அந்த ஊரில இருந்து வந்த அதுகள இந்த மதிய வேலயில ஒரு தண்ணியும் குடுக்காம ஏசி அனுப்பியிருக்கியே, நீயும் ஒரு மனிசனடா? கண் கெட்ட சத்திராதியும் கடபத் தாண்டி முத்தத்துக்கு வந்தா அவனுக்கு ஆதரவு காட்டிற தாண்டா மனிசக் குணம்- நீ முறுகதிபோல நடதிற்றியே- வள்ளியம்ம! இந்த கொடுமைய நீயும் பாத்திற்றுதான் இருந்தநீ?"

"நானென்ன செய்யிற கதிராமண்ண... அவிய அண்ணனும் தங்கச்சியும்... அப்பவும் எண்ட மனம் கேளாம கதச்சத்துக்கு அடிக்கிறதுக்கு மட்டக்கம்பத் தூக்கினாரு. என்னால என்ன செய்ய முடியும்?"

"டேய்! சத்திராதி நீ செஞ்ச இந்த கொடுமய்க்கு கடவுள் பலன் எழுதி வெச்சிரியார்ரா- இந்தப் பாவத்தில இருந்து நீ தப்புறண்டா நான் செல்றபடி கேளு."

"என்ன?"

"வா ரெண்டு பேரும் போய் அதுகளக் கூட்டிற்று வருவம். நீ கொள்ளயாக் கதய்க்கத் தேவல்ல, புள்ள! நீங்க எண்ட வருத்தத்த பாக்கவரல்லே எண்ட கோபத்தில நான் என்னமோ கதச்சிற்றன். மச்சானையும் கூட்டிற்று வா புள்ள எண்டு ஒரு கத கதச்சாப்போதும். மற்றத நான் பாத்துக்கிறன்- டேய் பாவண்டா அதுகள் றோட்டில் நிண்டு கண் கலங்கிதுகள். அதப்பாத்திற்றுத்தாண்டா நான் ஓடி வாறன். இப்ப வருவியோ வரமாட்டியோ?" என்று வற்புறுத்திப் பேசினார்.

"வயது போன ஒரு பெரிய மனிசன் நமக்கெல்லாம் உதவியான மனிசண்ட கதயக் கேட்டிட்டு இன்னமும் நிக்கிய போ" என்று வள்ளியம்மை கூறியதும் காத்தமுத்து துவாயை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கதிராமர் பின்னால் நடந்தான்.

"வஸ் சத்தம் கேக்கிது வாடா சுறுக்கா" என்று சொல்லி வேகமாக நடந்தார்கள். காத்தமுத்து கூப்பிட்டதும் எல்லோரும் காத்துமுத்து வீட்டுக்கு வந்தார்கள்.

"புள்ள வள்ளியம்ம"

"என்ன கதிராமண்ண"

"கொண்ணனும் பொஞ்சாதியும் வந்திரிக்காங்க. முதல்ல தேத்தண்ணி போட்டுக்கு- மறுகா உனக்கிட்ட கிடக்கிற கோழியில் அந்த பாணிச் சாவல புடிச்சி அறுத்துக் கறி ஆக்கு, எனக்கிட்ட ஒரு தயிர்குடுக்க இரிக்கி, அதயும் கொண்டாறன். மதியத்தால கிறுக்கிற்று பாவம் பசியோட இரிக்கிதுகள். ஆக்கிப் போட்டு உண்ட புரிசனுக்கு சேத்து மூனு கோப்பையும் கழுவி வெய்," என்றார்.

"என்ன கதிராமண்ண இண்டய்க்கு இஞ்சதான் நீயும் சாப்புட வேணும். உனக்கும் சேத்து நாலு கோப்ப கழுவி வைப்பன்" என்றாள் வள்ளியம்மமை.

"அப்படியா சரி சரி நான் ஊட்ட போய் நாலு வாளித் தண்ணி வாத்திற்று ஓடி வாறன். வாற நேரம் எல்லர் ஆயித்தமாகி இரிக்கவேணும்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

"சரி சரி போயிற்றுக் கெதியா வாங்க"- என்று சொல்லி விட்டு விரைவாகச் சமைக்கத் தொடங்கினாள்.

கதிராமர், நெற்றி நிறைய திருநீற்றுப் பூச்சுடன் செருமிக் கொண்டு வந்ததும் "எல்லாம் சரியா புள்ள" என்று கேட்டார்.

"ஓம் கதிராமண்ண"

"டேய் காத்தமுத்து, இந்த இத உடச்சி உண்ட மச்சானுக்கு முதல் ஊத்திக்குடு" என்று சொல்லி ஒரு அரைப் போத்தல் சாராயத்தைக் கொடுத்தார்- கதிராமர்

"இல்ல முதல்ல கதிராமண்ணனுக்கு குடுமச்சான்" என்றான் செல்லத் தம்பி.

இது முடிந்ததும், "புள்ள வள்ளியம்ம கோப்பய வெய், அதில சோத்த வெய்," என்று மகிழ்ச்சியோடு நரைத்த மீசையை ஒதுக்கி விட்டுக் கூறினார்.

(31ஆம் பக்கம் பார்க்க)






# மரணமும் லண்டனில் Expensive ஆன விஷயம்தான்

லண்டனுக்கு வந்ததன்பின்பு நிறைய நாளாக மையத்துத் தொழுகைக்குப் போக எனக்கு நேரம் கிடைக்கவில்லை. நோன்பு நேரத்தில் பகல் வேளையில் பள்ளி வாசலுக்குப் போனபோது ஒரு மரணத் தொழுகைக்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

நானும் மகனும் மையத்துக்குப் பின்னால் அடக்கஸ்தலத்துக்குப் போனோம். முதன் முதலாக அன்றுதான் அடக்கஸ்தலத்துக்குப் போகிறேன் லண்டனில்.

கொழும்பு, கண்டியைப் போல அல்லது எங்களது கிராமங்களில் உள்ள பள்ளிவாசல்களைப்போல அருகிலே மையத்தை அடக்கும் வசதி இல்லை. பெட்டியில் மையத்தை வைத்து காரில் கொண்டு போகவேண்டும்.

ஊரில் மாதிரி சந்தூக்கில் வைத்து தூக்கிக் கொண்டு செல்லும் மரண ஊர்வலங்கள்போல லண்டனில் செல்ல முடியாது. எல்லாம் காரில் கொண்டுதான் போகவேண்டும்.

நீண்ட தூரம் காரில் கொண்டு போய் நிறுத்தியதும் அந்த இடத்தைப் பார்த்த எனக்கு முதலில் அதிர்ச்சியாக இருந்தது.

ஏனெனில் அது ஒரு சேமக்காலை. கிறிஸ்தவர்களின் இறந்த உடலைப் புதைக்கும் இடம். கொஞ்ச தூரம்போக முஸ்லிம்களை அடக்கம் செய்யும் இடம் வந்தது. பரந்து விரிந்த சேமக்காலையில் ஒரு சிறிய பகுதியை முஸ்லிம்களுக்கு அடக்கம் செய்யக் கொடுத்திருக்கிறது கவுன்ஸில் (நகரசபை).

இங்கு லண்டனில் இருக்கும் பூமி முழுவதும் அரசாங்கத்துக்குச் சொந்தம். அதில் ஒவ்வொரு பகுதி கவுன்ஸிலுக்கும் அதன் பரிபாலனத்துக்கும் உரியது.

வீட்டுவரி, கடைவரி, நிலவரி என்று கவுன்ஸில் அறவிட்டு அந்தப் பணத்தை கவுன்ஸில் தனது எல்லைக்குட்பட்ட பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தும்.

ஆகவே மையத்துப் பிட்டி நிலமும் கவுன்ஸிலுக்கு சொந்தமானது. நாங்கள் கொண்டுபோன மையத்தை அடக்கவென்று ஆறு அடிநிலம் சரியாக இஸ்லாமிய விதிப்படி ஆழ அகலமாக வெட்டி வைக்கப்பட்டிருந்தது.

மையத்தை அந்தக் குழிக்குள் அப்படியே பெட்டியோடு வைத்தார்கள். எங்கள் ஊர்களில் பெட்டியோடு மையத்தை அடக்கம் செய்வதில்லை. மையத்தைத் தரையில் வைத்துவிட்டு குழிக்கு மேலால் பலகையைப் போட்டு அதற்கு மேலால்தான் மண்ணைப்போட்டு மூடுவோம்.

ஆனால் லண்டனில் அப்படிச் செய்ய கவுன்ஸிலும் சுகாதாரத்துறையும் விடமாட்டார்கள். சுகாதார மாசு ஏற்பட்டுவிடும் என்கிறார்கள். பெட்டியோடுதான் அடக்கம் செய்யவேண்டும். பேர்மிங்ஹாம் போன்ற இடங்களில் சில பகுதிகளில் இலங்கையில் உள்ளது போல மையத்தை அடக்க முடியும் என்று அதில் ஒருவரோடு கதைத்துக் கொண்டிருக்கும்போது சொன்னார்.

பெட்டியோடு அடக்குதல், பெட்டியில்லாமல் அடக்குதல் என்ற விடயத்தை ஏன் நான் இங்கு குறிப்பிடவேண்டும் என்றால், இஸ்லாமிய மத நம்பிக்கையின்படி மரணித்த ஒருவருக்கான கேள்வி கணக்குகள் மரணக் குழியில் இருந்தே ஆரம்பிக்கின்றன என்பதாலாகும்.

அவரது மையத்தை எழுப்பி உட்காரவைத்தே கேள்வி கணக்குகள் நன்மை தீமை தொடர்பாக ஆரம்பிக்கப்படும் என்பதே இஸ்லாமிய மார்க்கம் சொல்லுகின்ற விடயம்.



ஆகவே இது முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் பெரிய விடயம்தான்.

விடயம் என்னவெனில் பள்ளி வாசலில் இருந்து மையத்து காரை ஓட்டுகின்றவரைப் பிடித்து விசாரித்தேன். ஒரு மரணத்துக்கு எவ்வளவு செலவு ஆகும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக. ஏனெனில் நாங்களும் லண்டனில்தானே இருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டு.

'இரண்டாயிரம் பவுன்ட்' என்றதும் எனக்கு தூக்கிவாரிப்போட்டது. தற்செயலாக இப்பொழுது என்னையோ அல்லது வீட்டில் யாரையாவதோ அடக்கம் செய்ய அவ்வளவு பணம் இல்லை என் கையில். யாராவது அனாதைகளை அடக்கம் செய்வதைப்போலத்தான் எங்களை அடக்கம் செய்ய வேண்டியிருக்கும். ஏனெனில் மைய வாடிக்கு பிணத்தை எடுத்துக்கொண்டு போவதற்கே இரண்டாயிரம் பவுன் பணம் வேண்டும்!

ஏன் அவ்வளவு பணம் செலவாகிறது என்று அவரைக் கேட்டேன். மையவாடியில் ஆறு அடி நிலத்துக்கு கவுன்ஸில் கேட்கும் தொகை ஆயிரத்து ஐநூறு பவுன்கள். இதைக் கட்டாயம் கொடுக்க வேண்டும். கொடுக்காவிட்டால் நிலம் தரமாட்டார்கள். கார், பெட்டி, மையத்தை அடக்கும் இடத்துக்குக் கொண்டு வருவது, குழி தோண்டுவது, மூடுவது என்று பள்ளி வாசலுக்கு ஐநூறு பவுன்ட் கொடுக்கவேண்டும். இரண்டு செலவுகளுமாகச் சேர்த்து இரண்டாயிரம் பவுனட். ஒரு மையத்தை அடக்கம் செய்ய செலவாகும் இந்தச் செலவு தற்செயலாக இரண்டுபேர் ஒரு வீட்டில் மௌத்தாகினால் நாலாயிரம் பவுன்களாகிவிடும் என்று அவர் விளக்கமாகச் சொன்னார்.

எங்கு போவது இவ்வளவு காசுக்கு! இலங்கைக் காசுக்கு இரண்டாயிர பவுன் நாலு லட்சம்ரூபா. ஆண்டவனே, இப்படி ஒரு மரணம் நிகழ்ந்துவிடக் கூடாதே என்று அந்த மையவாடியில் வைத்து பிரார்த்தனை செய்தேன்.

அடக்கம் செய்கின்ற செலவை எண்ணி லண்டனில் மரணமாகக் கூடாது இலங்கையில்தான் மரணிக்க வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு மரணம்கூட பெரும் எக்ஸ்பன்ஸிவ் ஆக இருக்கிறது லண்டனில்.

லண்டனில் எல்லாமே இப்பொழுது பெரும் செலவானதாக மாறிக்கொண்டு வருகிறது. தினமும் கம்பனிகள் தொழில் செய்வோர் எண்ணிக்கையை குறைத்து குறைத்து இப்பொழுது பல சொப்ட்வெயார் கம்பனிகள் ஆட்களை நிறுத்தியே விட்டார்கள். அதனால் இந்தியாவில் இருந்து இங்கு வந்த பலர் வேலை இல்லாமல் அலைந்து திரிகின்றனர்.

வேலைகேட்டு கடைகளுக்கும் போகமுடியாமல் இருக்கிறது. முந்தி என்றால் தமிழர்களின் பெற்றோல் ஸ்டேசன்கள் எப்பொழுதும் எங்களுக்காகத் திறந்தே இருக்கும். வேலைக்கு பஞ்சமில்லாமல் இருந்தது, அப்பொழுது. 90 களில் நாங்கள் இங்கு வந்தபொழுது அகதிகளுக்கும் சரி, சாதாரணமாக இங்கு வந்து வேலை செய்பவர்களுக்கும் சரி வேலை வாய்ப்பு இருந்தது. மொழி ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை.

மொழி தெரியாதவர்கள்கூட தமிழர்களின் கடைகளில் வேலை செய்யக்கூடியதாக இருந்தது. ஆனால் இப்பொழுது இன்சூரன்ஸ் நம்பர் இல்லாமல் வேலை செய்வதை எண்ணிப் பார்க்கவே முடியாது.

ஒவ்வொரு கடைகள் அலுவலகங்கள் என்று இமிக்கிறேசன் ஓ·பிஸர்மார் ஓடித்தான் திரிகிறார்கள். திடீர் திடீர் என்று செக் பண்ண வருகின்றனர். கையில் எப்பொழுதும் சரியான ஆவணங்களை எல்லோரும் வைத்திருக்கவேண்டும். அல்லது வேலை கொடுப்போர் வேலை செய்வோர் எல்லோரும்பெரும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இன்சூரன்ஸ் நம்பர்தான் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. வரி கட்டாமல் யாரும் வேலை செய்யமுடியாது லண்டனில்.

வேர்க் பேர்மிட்டுடன் வருகிறவர்களுக்கும் பெரும் நெருக்கடி வந்துவிட்டது. இப்பொழுது அதாவது மூன்று வருடத்துக்கு முன்புபோல 5 வருடம் வேர்க் பேர்மிட் விசா கொடுக்கிறார்களில்லை. இரண்டு வருடம் மாத்திரமே விசா கொடுக்கிறார்கள். அதுவும் ஒரு கம்பனி வேர்க் பேர்மிட்டில் ஒருவரை இலங்கையில் இருந்து எடுப்பதானால் முதலில் கம்பனி, ஹோம் ஓ·பிஸில் றிஜிஸ்டர் பண்ண வேண்டும். அதற்குப் பிறகு யாருக்கு விசா கொடுக்கவேண்டும் என்று கம்பனி கேட்கிறதோ அவரின் எல்லா விபரங்களையும் அந்த நிறுவனமே சரி பார்க்க வேண்டும். முழுப் பொறுப்பும் நிறுவனத்துக்குரியது.

இதில் மயிர்போல சிறு பிழை நடந்தாலும் நிறுவனத்தின்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அப்படி வேர்க் பேர்மிட்டில் விசாவில் வந்தவர் அதே நிறுவனத்தில் வேலை செய்யவேண்டும். 10 நாள் அவர் வேலைக்கு வராமல் விட்டால் ஹோம் ஓ·பிஸுக்கு அறிவிக்கவேண்டும்.

முன்னர் என்றால் வேர்க் பேர்மிட்டில் ஐந்து வருடம் இருந்தால் பெர்மனண்ட் றெசிடன்ட் கொடுத்தார்கள். அதற்குப்பிறகு பிரிட்டிஸ் சிட்டிசன் எடுக்கலாம். இப்ப அப்படி இல்லை. ஸ்டுடன்ட் விசாவும் பெரும் சிக்கல்.

இதனை நான் சொல்லும்பொழுது இடியாப்பச் சிக்கல் மாதிரி உங்களுக்குத் தெரியுதல்லவா? ஆனால் அதைவிட சிக்கல் லண்டனில் இருக்கிறது.

லண்டனில் வாழ்வதும் எக்ஸ்பென்ஸிவ். மரணிப்பதும் எக்ஸ்பென்ஸிவ். ஆனால் லண்டன் ஆசை யாரைத்தான் விட்டது?

# வேலாயுதம் வினோதரன்

## சிங்கள இசைத்துறையில் பண்ணிசைக்கும் தமிழ் இளைஞர்



மணி ஸ்ரீகாந்தன்

சிங்கள இசை ரசிகர்களுக்கு நன்கு பரிச்சியமான பெயர் வேலாயுதம் வினோதரன். தெரண தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'தெரண ட்ரீம்ஸ் ஸ்டார்' நிகழ்ச்சியில் போராடி தோற்ற ஒரு தமிழன் இவர். ''நான் இந்த போட்டியில் ஜெயிக்க முடியும் என்று எப்போதும் நினைக்கலை... நினைக்கவும் கூடாது. ஏனென்றால் நான் ஒரு தமிழன்," என்று நச்சென்று வினோதரனிடமிருந்து வார்த்தைகள் வந்து விழுகின்றன.

தெரண ட்ரீம்ஸ் ஸ்டார் நிகழ்ச்சிக்கு விண்ணப்பித்திருந்த ஒன்றரை லட்சம் போட்டியாளர்களில் வேலாயுதம் வினோதரன் ஐந்தாவதாகத் தெரிவு செய்யப்பட்டதே இமாலய சாதனைத்தான்.

கண்டி தெல்தெனியவை பிறப்பிடமாகக் கொண்ட வினோதரன், சிங்கள மொழியிலேயே கல்வி கற்றிருக்கிறார். ''என் குடும்பம் ஒரு இசைக்குடும்பம். என் அப்பா நன்றாக டொலக் வாசிப்பார். என் அம்மா பாடுவார். எனக்கு விவரம் தெரிந்த நாளிலிருந்து அந்த பாட்டுக் கச்சேரியை பார்த்து வளர்ந்தவன் நான். இரவு நேரங்களில் கரண்ட் கட் ஆனால் மெழுகுதிரியை கொளுத்தி வைத்து அதன் வெளிச்சத்தில் அம்மா பாட அப்பா டொலக் வாசிக்க ரொம்பவும் வேடிக்கையாக இருக்கும். நானும் அந்த சந்தர்ப்பங்களில் பாட்டுப்பாடுவேன். என் இசை ஆர்வத்திற்கு வித்திட்டது என் வீட்டில் நடந்த பாட்டு கச்சேரிகள்தான்," என்று சொல்லும் வினோதரன், சங்கீதத்தை முறையாக பயின்றிருக்கிறார்.

சென்னை இசைக் கல்லூரியில் இசைப் பயிற்சியை நிறைவு செய்திருக்கும் இவருக்கு தற்போது இருபத்திரண்டு வயதாகிறது.

''வட இந்திய இசைக் கலைஞர் லைனா பாத்தைதான் நான் என் குருவாக மதிக்கிறேன். எனக்கு பிடித்த பாடகர்கள் என்றால் எஸ்.பி பாலசுப்ரமணியம், ஹரிஹரனை குறிப்பிடுவேன். நம் நாட்டில் ஆத்மா லியனகேயும் எனக்குப் பிடிக்கும்,"

என்ற வினோதரன் சிங்கள மொழியிலேயே சரளமாக பேசுகிறார். தமிழில் பேச கொஞ்சம் சிரமப்படுகிறார். அம்மா பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர். அப்பா வவுனியாவைச் சேர்ந்தவர். சிங்களச் செல்வாக்கில் வளர்ந்தவரானாலும் தமிழ் மீதான பற்று இவரை விட்டுப் போகவில்லை. எஸ்.பி, ஹரிஹரன் பாடல்களையே ரொம்பவே விரும்பிப் பாடுகிறார்; கேட்கிறார்; இருவருமே அருமையான சங்கதிகளைத் தமது குரலில் வைத்துப் பாடுகின்ற உன்னதக் கலைஞர்கள் என்று சிலாகிக்கும் இவர் தமது இசை வெற்றிக்கு தமிழ் பாடல்கள்தான் முக்கிய காரணம் என்று சொல்கிறார் வேலாயுதம். இன்றுவரை இந்து மதத்தையே கடைப்பிடித்து வருவது இவருக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது.

''எனக்கு எஸ்.பி. பாலசுப்பரமணியம்னா ரொம்பப் பிடிக்கும். கேளடி கண்மணி படத்தில 'மண்ணில் இந்த காதல்...' என்ற பாடலை அடிக்கடி முணுமுணுப்பேன். 2007ல் தான் சென்னை இசைக் கல்லூரியில் சேர்ந்தேன். அங்கே இசைப் பயிற்சி ரொம்பவும் கடுமையாக இருக்கும். அதிகாலை 4. மணிக்கெல்லாம் எழும்பி கழுத்தளவு தண்ணீரில் 5 மணி வரை நிற்க வைத்து பாட்டுப் பாடி சாரீரத்தை சரி செய்யும் பயிற்சியை அளிப்பார்கள். இசைன்னா அது இந்தியாதான் நாம அவங்ககிட்டே கற்க வேண்டி சங்கதிகள் நிறைய இருக்கு! என்ற வினோதரன் தனது நண்பர் சசிந்து விஜேஸ்ரீ பற்றியும் இப்படி கூறுகிறார்.

''சசிந்து அனுராபுரம், பதவிய என்ற இடத்தைச் சேர்ந்தவர். அவர் தெரணவில் ஐம்பதாயிரத்தில் போட்டியாளராக கலந்து கொண்டப்போதிலிருந்து எனக்கு நண்பராக இன்று வரை



*கரண்ட் கட் ஆனதும் எங்கள் வீட்டில் பாட்டு பாடத் தொடங்கி விடுவார்கள். என் பாட்டு இப்படித்தான் ஆரம்பமானது*

இருக்கிறார் சசிந்து. ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவர். அவர் போட்டியாளராக கலந்து கொண்ட அந்தக் காலப்பகுதியில் ஒரு நாள் பாட்டு ஒளிப்பதிவிற்காக எல்லோரும் கருப்பு டெனிம் அணிந்து வர வேண்டும் என்று ஏற்பாட்டுக குழு கூறியிருந்தது. நான் கருப்பு டெனிம் வாங்கி வந்திருந்தேன். ஆனால் சசிந்து டெனிம் வாங்க வழியின்றி தடுமாறினார். நிலைமையை அறிந்த நான் எனது டெனிமை அவருக்கு கொடுத்து விட்டு, நான் வேறு ஒன்று வாங்கிக்கொண்டேன். இதை அறிந்த டீவி நிர்வாகம், அந்த சம்பவத்தை தொலைக்காட்சியில் காட்டி விபரித்தார்கள் சசிந்து கண்கலங்கினான். நான் கடைசி தேர்வில் தோற்றப்போது எனக்காக அழுவனும் அவன்தான்," என்று சொல்லும் வேலாயுதம் வினோதரன் தனது நான்கு ஆண்டு கால காதலியைப் பற்றி இப்படி கூறுகிறார்.

''எனக்கு பெண் ரசிகைகள் அதிகம். ஆனால் என் மனசை தொட்ட அவள் கண்டியில் தான் வசித்தாள். எங்கள் இருவருக்கும் நான்கு ஆண்டுகால காதல் ஆலவிருட்சம் மாதிரி வளர்ந்திருந்தது. அவளை எனக்கு நீண்டகாலமாக தெரியும். எனக்கு பிடித்தமானவள்.

*அதிகாலையில் கழுத்துவரை தண்ணீரில் நிறுத்தி பாடச் சொல்வார்கள்*

ஒருநாள் தெரண பாட்டு நிகழ்ச்சியில் எனக்கு புதுமணத்தம்பதிகளின் பாட்டுக் காட்சியை கொடுத்திருந்தார்கள். அதாவது புதுமணத் தம்பதியினரைப் போலவே நாங்கள் நடிக்கவேண்டும். நான் அந்த விசயத்தை என் காதலியிடம் கூறியபோது அவள் அதிர்ந்துப்போனாள். என்னை அந்தக் காட்சியில் பங்குபற்றக் கூடாது என்று கட்டளைப்போட்டாள். ஆனால் அது ஒரு போட்டி என்ற வகையில் நான் பங்குபற்றாமல் முடியாது. எனவே அதை என்னால் தவிர்க்க முடியவில்லை. நான் அந்த நிகழ்ச்சியல் என்னுடன் மனமகளாக நடித்த பெண்ணின் கழுத்தில் தாலி கட்டினேன். இதை பார்த்த என் காதலியின் கோபம் தலைக்கேறியது. காச்மூச்சென்று கத்தி என்னுடனான உறவை துண்டித்தாள். நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அதை அவள் புரிந்துகொள்ளவில்லை. இறுதியில் எங்கள் காதல் முறிந்தது. என் காதலி என்னை விட்டு விட்டு கனடாவிற்கு சென்று விட்டார். ஒரு அற்ப விஷயத்துக்கு என்னோடு இவ்வளவு முரண்படுகிறவள் என் வாழ்நாள் துணைவியாக இருக்கமுடியுமா? என்று நான் நினைக்கிறேன்.

சரி, இனி காதல்? ''நோ! வேண்டாம். இப்போது அந்த எண்ணமே கிடையாது. இப்போதுதான் நான் ஒரு இசை அல்பம் ஒன்றை (DVD) சாந்தினி என்ற பெயரில் வெளி வெளியிட்டிருக்கிறேன். மற்றொரு வீடியோ (சிங்களம்) அல்பம் ஒன்றையும் வெளியிடும் திட்டம் உள்ளது. அதன் பின்னர் தமிழ் வீடியோ பாடல் அல்பம் ஒன்றை வெளிடவிருக்கிறேன். தமிழகத்தில் பாடும் வாய்ப்பு கிடைக்குமானால் சந்தோஷம்" என்று தமிழிலும் சிங்களத்திலும் பேசும் இவருக்கு, இவர் ஐந்தாம் இடத்தில் இருக்கும்போது போட்டியில் இருந்து நீக்கபட்டதும் மொபிடெல் இவரை அழைத்து பொறுப்பான பதவியொன்றை வசதிகளுடன் வழங்கியிருக்கிறது.

இலட்சியம்?

''தெரிந்ததுதானே! இசைத் துறையில் உச்சங்களைத் தொடவேண்டும் என்பதும் புதியவற்றை படைக்கவேண்டும் என்பதும்தான்!"

சிரிக்கிறார்.

## மச்சங்கள் மர்மங்கள்

மச்சங்கள் என்றாலே பல சமயங்களில் அதிர்ஷ்டத்தை குறிப்பதாக நாம் எண்ணுகிறோம். ஒருவனுக்கு நல்ல பெண் நண்பர்கள் கிடைத்தால் நண்பர்கள் 'உனக்கு எங்கோ மச்சம் இருக்கிறது' என்று கிண்டல் செய்வதை பல தமிழ் சினிமாக்களில் பார்த்திருக்கிறோம்.

கருப்பு மச்சங்கள் உள்ள இடங்களில் தோலில் உள்ள மெலனின் என்று அழைக்கப்படும் கருப்பு நிறத்தை தோலுக்கு உற்பத்தி செய்து கொடுக்கும் மெலனின் என்ற செல்கள் ஒன்றாக சேர்ந்து இருப்பதாலேயே இந்த மச்சம் உடலில் தோன்றுகிறது.

இந்த மச்சங்கள் எல்லாம் எல்லா சமயங்களிலும் அழகை மட்டும் குறிப்பதில்லை. சில சமயங்களில் இவை மெலிங்கனெண்ட் மெலனோமா என்ற கடும் புற்று நோயாக மாறி உயிருக்கு ஆபத்தையும் விளைவிக்க கூடியது என்பதை நாம் உணரவேண்டும்.

மச்சத்தின் வடிவம் சீராக இல்லாமல் இருந்தால், அவை நாளை புற்று நோயாக மாற அதிக வாய்ப்புள்ளது.

அந்த கருப்பு மச்சம் தோலை விட்டு மேலே உயரத்தடுமனாக தெரிந்தால் அதுவும் நாளை புற்று நோயாக மாற வாய்ப்புள்ளது.

மச்சத்தின் கலர் அங்கும், இங்கும் மாறுபட்டு கருப்பு குறைந்து, சில இடங்களில் அதிகமாகி தெரிந்தால் நாளை இது புற்றுநோயாக மாற வாய்ப்புள்ளது.

ஒரு கருப்பு மச்சத்தின் அளவு 6 மில்லி மீட்டரை விட அதிகமாக இருந்தால் நாம் கவனத்துடன் இருக்கவேண்டும்.

கருப்பு மச்சம் குறுகிய காலத்தில் அதன் அளவில் வளர ஆரம்பித்தால் அது கொடிய புற்றுநோயாக மாற அதிக வாய்ப்புள்ளது என்பதை நாம் உணர வேண்டும்.

ஆண்களின் கால் பாதங்களில் உள்ள கருப்பு மச்சங்களும், பெண்களின் முதுகு மற்றும் கால் பகுதியில் உள்ள கருப்பு மச்சங்களும் நாளை புற்று நோயாக மாற அதிக வாய்ப்புள்ளதாக மருத்துவ அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

கருப்பு மச்சத்திற்குள் இவ்வளவு கசப்பான செய்திகள் இருக்கும் என்பது பலருக்கு வியப்பை ஏற்படுத்துவதில் அதிசயமில்லை. இந்த கருப்பு மச்சங்கள் தோன்றி மூன்று ஆண்டுகளில் இருந்து 30 ஆண்டுகளுக்குள் எப்போது வேண்டுமானாலும் மேற்கூறிய முதல் ஐந்து அறிகுறிகளுடன் 'மெலிங்கனெண்ட் மெலனோமா' என்ற கொடிய புற்றுநோயாக மாற வாய்ப்புள்ளது.

ஆண், பெண் என இரு பாலாருக்கும் 40 முதல் 50 வரையில் கருப்பு மச்சங்கள் புற்றுநோயாக அதிகம் மாறுவதற்கு வாய்ப்புள்ளதென மருத்துவ மேதைகள் கண்டறிந்துள்ளனர்.

கருப்பு மச்சங்களின் கொடிய புற்றுநோய் மாற்றத்தை எப்படி கண்டறிவது என்ற பயம் நமக்கு தேவை இல்லை.

நம் உடலில் உள்ள 80 சதவீத தோலை நம்மால் பார்க்க முடியும். அந்த பாகங்களில் உள்ள கருப்பு மச்சங்களை தினம் தினம் நாமே கண்காணிக்கலாம்.

மச்சங்கள் தோலில் உள்ளதால் நம் உற்றார், உறவினர்கள், நண்பர்களுமே அந்த மச்சங்களில் மாற்றம் இருந்தால் எளிதில் கண்டு நம்மிடம் கூறிவிடுவர்.

நம் குடும்ப மருத்துவர்களும், கருப்பு மச்சங்களை எளிதில் கண்டு, மாற்றம் இருந்தால் நமக்கு எச்சரிப்பர்.

மச்சங்களில், அளவோ, உயரமோ, நிறமோ அல்லது அதில் புண்ணோ ஏற்பட்டால் உடனே மருத்துவர்களை அணுகவேண்டும். மச்சம் புற்றுநோயாக மாறத் தொடங்கி விட்டதோ என்ற சந்தேகம் ஏற்பட்டால் உரிய மருத்துவரைக் கொண்டு அதை உடனே அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றிவிட வேண்டும்.

மெலிங்கனெண்ட் மெலனோமா என்ற புற்று நோயாக அது வளர ஆரம்பித்தால், அது ரத்த நாளங்கள் மூலமும் லிம்பேட்டிக் மூலமும் மிக மிக வரைவில் மூளை, நுரையீரல், ஈரல், எலும்பு பாகங்களுக்கு பரவிவிடும். சில மாதங்களிலேயே உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்பதை நாம் உணரவேண்டும்.

என்னை புரட்டிப் போட்ட மனிதர்

# என்னை வழி நடத்தும் அந்த மூதாட்டி

பொதுவாகவே நான் என்னை விட சமூக மற்றும் பொருளாதார ரீதியாக பிற்பட்டவர்கள் மீது அனுதாபம் கொண்டிருப்பது இயல்பு. இப்பண்பு என் குடும்பப் பின்னணியில் இருந்து வந்திருக்கலாம் எனக் கருதுகிறேன்.

எண்பதுகளில் நான் யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பில் ஈடுபட்டிருந்தபோது முதன் முதலாக அன்னை திரேசா பற்றி கேள்விப்பட்டேன். அவரைப் பற்றி யாரும் எனக்கு சொல்லவில்லை. பத்திரிகை, சஞ்சிகை மற்றும் நூல்கள் வாயிலாக அவரைப் பற்றி அடிக்கடி வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். நான் கத்தோலிக்க நம்பிக்கையில் ஆழ்ந்தவள் என்ற வகையில் சாதாரண மக்கள் பற்றிய இயேசுவின் மொழிகள் என்னை இயல்பாகவே ஈர்த்திருந்தன. அதையே அன்னை திரேசா என்ற வெளிநாட்டுப் பெண்மணி கொல்கத்தா வீதிகளில் நடைமுறையில் செய்து காட்டுகிறார் என்பதை அறிந்தபோது நம்ப முடியாத வியப்பு என்னில் ஏற்பட்டது. நாடகம், பாட்டு, சினிமா, பல்கலைக்கழக வெட்டிப்பேச்சு என்பனவே, சரியாகச் சொன்னால், என்னை ஈர்த்திருக்கவேண்டும். ஆனால் என்னை ஈர்த்த நட்சத்திரமோ கவர்ச்சியற்ற குட்டையான ஒரு வெள்ளைக்கார கிழவி!

அன்னை திரேசா பற்றி அதிகம் அதிகமாகத் தெரிந்து கொள்ளவே, என் மனதில் அவர் முக்கிய இடம் பிடித்தார். நம்மால் முடிந்ததை பிறருக்கு செய்ய வேண்டும் என்ற உத்வேகம் ஏற்பட்டது. நான் பட்டப்படிப்புக்கு அரசியல் விஞ்ஞானத்தையும் இறையியலையும் தெரிவு செய்திருந்தேன். எனவே மதம் அரசியல் இரண்டும் சமூக வாழ்வியலில் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தையும் இவை இரண்டும் பின்னிப் பிணைந்து சமூகவாழ்வியலில் ஏற்படுத்தும் விளைவு-களையும் பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருந்தது, மதரின் சேவைகளை சமூக, சமய, மற்றும் அரசியல் தளங்களில் எடைபோட்டுப் பார்ப்பதற்கு எனக்கு உதவியது.



நான் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டவள். என் குடும்பத்தினரும் யாழ்ப்பாணத்தவர். அவர்கள் கொழும்பில் இருந்தபோதும், எழுபதுகளில் யாழ்ப்பாணத்தில் பிரச்சினைகள் ஏற்பட்டபோது பாதிக்கப்பட்டவர்களை வவுனியாவில் குடியேற்றி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் கரிசனை காட்டினார்கள். கோடை-காலத்தில் எங்களுக்காக வேலை செய்யும் குடும்பங்களை மாரிகாலத்தில் கவனித்து காப்பாற்றுவார்கள். இதெல்லாம் எனக்குத் தெரியும். சமூகத்தின் மீது கரிசனையுடன் இருத்தல் என்பது இயல்பானதாக என்னில் இருந்ததால் மதர் திரேசா எனக்கு முக்கியமானவராக இருந்தார்.

பிற்காலத்தில் வவுனியா அரச அதிபராக நான் பதவி வகித்தபோது அரச அதிகாரி என்ற வகையில் பெரும் சமூக அவலங்களை நான் சந்திக்க நேர்ந்தது.



மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ்

அவற்றை எதிர்கொள்வதற்கு என் குடும்பப் பின்னணியும், இறை விசுவாசமும் என்னை வழி நடத்திய அன்னை திரோசாவும் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் நின்றார்கள். இப்பின்னணி இல்லாதிருந்தால், மனதளவில் தயாராக இல்லாதிருந்தால் நிச்சயம் இச்சவால்களைச் சந்திப்பதில் நான் கஷ்டப்பட்டுப் போயிருப்பேன்.

இச்சந்தர்ப்பத்தில் நான் துவண்டுபோன, தளர்ந்து மனமுடைந்துபோன வேளைகள் பல. அப்போதெல்லாம், தனியொரு பெண்ணாக, எந்தவித உதவியும் அரவணைப்பும் இல்லாத நிலையில் கல்கத்தா வீதிகளில் ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண முயன்ற அந்த வெள்ளைக்காரப் பெண்மணியே எனக்கு உத்வேகம் தந்தார். கூடவே என் கணவரும் பிள்ளைகளும் நான் சோர்ந்து விடாமல் பார்த்துக் கொண்டார்கள் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

வேலைப்பளு ஒரு பக்கம் என்றால் பக்க வாதத்தால் பாதிக்கபட்டிருந்த என் அன்னையைக் கவனிக்க வேண்டிய கடமையும் எனக்கிருந்தது. நாங்கள் அதைப் பார்த்துக்கொள்கிறோம். நீங்கள் உங்கள் கடமையை கவனியுங்கள் என கணவரும் பிள்ளைகளும் கூறி என்னை உற்சாகமூட்டியதையும் இங்கே நினைத்துப் பார்க்கிறேன்.

என்னை செம்மைப்படுத்தி வழிகாட்டியாக இன்றளவும் திகழ்பவர் மதர் திரேசாவே!

## ஏப்ரல் மாத பலாபலன்கள்

01-05-2013 தொடக்கம் 31-05-2013 வரை

சோதிடமாமணி நவா

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு இந்தவாரம் மேன்மை தரும் மாதமாகும். செய்தொழில்கள் சீராகி பணவரவு தரும். திட்டமிட்ட கருமங்கள் நிறைவேறும். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத்தில் எதிர்பார்த்த கருமங்கள் நிறைவேறும. உத்தியோஸ்தர்கள், மாணவர்களின் காரியங்கள் சிறப்புற முடிவுறும் முதலீட்டாளர்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள் மறைந்து பணவரவு கிடைத்திடும். மேட இராசியினருக்கு மனக்கவலை குறைந்த மாதம். அதிர்ஷ்டநாள் வியாழன். அதிர்ஷ்ட திகதி 18.

### இடபம்

கார்த்திகை பின் முக்கால், ரோகிணி மிருகசிரிடத்து முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்கள் மிகவும் அவதானமாக நடந்து கொள்ளவேண்டிய மாதம். செய்தொழில்களில் சீரின்மை தென்படும் எதிர்பார்த்த பல கருமங்கள் தடைகளின் பின் நிறைவேறும். குடும்பத்தில் பணக்கஷ்டங்களினால் மனக்கவலை ஏற்படும் உத்தியோஸ்தர்கள், மாணவர்கள், நமது கருமங்களில் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. முதலீட்டாளர்களின் எதிர்பார்ப்புகள் குறைவடையும். இடப இராசியினருக்கு சிறிது மனக்குழப்பம் தரும் மாதம். அதிர்ஷ்டநாள் புதன். அதிர்ஷ்ட திகதி 14.

### மிதுனம்

மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு ஓரளவு நிம்மதி அளிக்கும் மாதமிது. செய்தொழில்களில் இருந்து வந்த தொல்லைகள் நீங்கும் எதிர்பார்த்த பணவரவுகள் கால தாமதமாகி கிடைத்திடும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த பணக்கஷ்டங்கள் மறையும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள், தமது கடமைகளை திறம்பட நிறைவேற்றுவார். முதலீட்டாளர்கள் வீண் மணக்கவலையடைவர். மிதுன இராசியினருக்கு பெரும்பாலும் தீமை செய்யாத மாதமாகும். அதிர்ஷ்டநாள் வெள்ளி, அதிர்ஷ்ட திகதி 15.

### கடகம்

புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம், நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனக்கஷ்டங்கள் சிறிது ஏற்பட்டு மறையும் மாதமிது. செய்தொழில்களில் சீரின்மையினால் மனக்குழப்பங்கள் ஏற்படும். புதிய முயற்சிகளை திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும். பணவரவுகள் மந்தமடையும். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகளுக்கு இடமுண்டாகும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள் கடும் உழைப்புக்கு ஆளாவர். முதலீட்டாளர்கள் பாரிய முதலீடுகளை அளவுடன் வைத்திருப்பது நன்மை தரும். கர்க்கடக இராசியினருக்கு பெரிதான மனக்குழப்பம் தராத மாதமாக அமையும். அதிர்ஷ்ட நாள் திங்கள். அதிர்ஷ்ட திகதி 18.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனச்சஞ்சலங்கள் மறைத்திடும் மாதம். செய்தொழில்களில் சிறப்புண்டாகி பணவரவு ஏற்படும். புதிய முயற்சிகளில் ஏற்பட்டிருந்த இழுபறிகள் நீங்கும். குடும்பத்தில் எதிர்பார்த்த கருமங்கள் நிறைவேறி மனமகிழ்ச்சி உண்டாகும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள் எதையும் திட்டமிட்டுச் செய்வது நன்மைதரும். முதலீட்டாளர்கள் முதலீடுகளில் ஏற்பட்டிருந்த மனக்குழப்பங்களிலிருந்து விடுபடுவர். சிங்க இராசியினரை சிக்கலில் மாட்டி விடாத மாடம். அதிர்ஷ்டநாள் வியாழன். அதிர்ஷ்ட திகதி 19.

### கன்னி

உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மனமகிழ்ச்சி தரும் மாதம். செய்தொழில்கள் சீராகி பணவரவு ஏற்படும். புதிய முயற்சிகளில் ஏற்பட்டிருந்த சிக்கல்கள் மறையும். காரியங்கள் தடையின்றி நிறைவேறும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி மனமகிழ்ச்சியைக் கொடுக்கும். முதலீட்டாளர்கள், பாரிய முதலீடுகளில் ஏற்பட்டிருந்த கன்னி இராசியினருக்கு எதையும் திட்டமிட்டுச் செய்யும் மன ஆற்றலைக் கொடுக்கும் மாதமாகும். அதிர்டநாள் வெள்ளி, அதிர்ஷ்ட திகதி 14.

### துலாம்

சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு மிகவும் அவதானத்துடன் கருமமாற்ற வேண்டிய மாதம். செய்தொழில்களில் பிரச்சினைகள் தோன்றி மறையும். பணவரவுகளில் வீண் தொல்லைகள் ஏற்படும். குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் தோன்றி மனக்கவலைதரும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள் தமது கடமைகளில் குறைகள் கேட்க நேரிடும் முதலீட்டாளர்கள் முதலீடுகளால் சிறிது காவலையடைய நேரிடும் துலாம் இராசியினருக்கு பெரும் துயர் தந்திடாத மாதமிது. அதிர்ஷ்நாள் புதன். அதிர்ஷ்ட திகதி 16.

### விருச்சிகம்

விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை நட்சத்திரங்களில் பிறந்தவர்களில் பிறந்தவர்களுக்கு மனக்குறைகள் விலகிடும் மாதம். செய்தொழில்கள் சீராகும். பணவரவுகள் குறையின்றி கிடைக்கும். எதிர்பார்த்த கருமங்களில் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் ஏற்பட்டிருந்த மனக்கவலைகள மறைந்திடும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள் சீராக கடமைகளை மேற்கொள்வர். முதலீட்டாளர்கள் முதலீடுகளால் பணவரவினைப் பெறுவர். விருட்சிகம் இராசியினருக்கு தீமைகள் குறைந்த மாதமிது. அதிர்ஷ்டநாள் திங்கள், அதிர்ஷ்ட திகதி 18.

### தனுசு

மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால் நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு வீண் பிரச்சினைகள் தானாக உருவாகும் மாதம். செய்தொழில்களில் மனக் கஷ்டங்கள் ஏற்படும். எதிர்பார்த்த பணவரவுகள் தாமதமாகி மனச்சிக்கல்கள் உருவாக வாய்ப்புண்டாகும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள், தமது கடமைகளில் பொறுமையுடன் நடந்துகொள்வது நன்மை தரும். முதலீட்டாளர்கள் பணக்கஷ்டங்களுக்கு உள்ளாகுவர். தனு இராசியினருக்கு சிறிது தளர்வினைக் கொடுத்திடும் மாதமாக அமைந்திடும். அதிர்ஷ்டநாள் செவ்வாய் அதிர்ஷ்டதிகதி 19.

### மகரம்

உத்திராடத்துப் பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை நட்சத்திரங்கிளல் பிறந்தவர்களுக்கு மனஉறுதியுடன் செயற்படவேண்டிய மாதமிது. செய்தொழில்களில் மனநிறைவு தராது. பண விடயங்களில் சிகல்கள் உருவாகி தொல்லைதரும். குடும்பத்தில் எதிர்பார்த்த சில விடயங்களில் தடைகள் ஏற்பட்டு மறையும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள், கடும் உழைப்புக்கு ஆளாகி மனக்கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடும். முதலீட்டாளர்கள் எதையும் திட்டமிட்டு பொறுப்புடன் செய்வது நன்மைதரும். மகரம் இராசியினருக்கு மகிழ்ச்சி குறைவான மாதம். அதிர்ஷ்டநாள் வெள்ளி, அதிர்ஷ்ட திகதி 17.

### கும்பம்

அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கர் நட்சத்திர்களில் பிறந்தவர்களுக்கு மனமகிழ்ச்சி தரும் மாதமிது. செய்தொழில்களில் இருந்து வந்த தொல்லைகள் விலகும். புதிய முயற்சிகளில் அனுகூலம் ஏற்படும். பணவரவுகள் சீராகும். குடும்பத்தில் வீண் செலவுகள் குறைவடையும். உத்தியோஸ்தர்கள். மாணவர்கள் மனநிறைவுடன் கருமமாற்றுவர். முதலீட்டாளர்கள் முதலீடுகளால் சிறிது குழப்பமடைந்து தெளிவு பெறுவர். கும்ப இராசியினருக்கு மனகுறை தராத மாதமாக அமைந்திடும். அதிர்ஷ்ட நாள் புதன், அதிர்ஷ்ட திகதி 14.

### மீனம்

பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி, நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு சிறிது மனக்கவலையை கொடுத்திடும் மாதம். செய்தொழில்களில் சிறிது சிக்கல்கள் தோன்றி மறையும் புதிய முயற்சிகளை யோசித்து ஆரம்பிப்பது நன்மை தரும். பணவிடயங்களில் முட்டுக் கட்டைகளினால் கடன்படும் நிலையுண்டாகும். உத்தியோஸ்தர்கள், மாணவர்கள் மனக்குறைகளுக்கு ஆளாகுவர். முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை அளவுடன் வைத்திருப்பது நல்லது. மீன இராசியினருக்கு மன நிம்மதி குறைந்த மாதமிது. அதிர்ஷ்ட நாள் திங்கள். அதிர்ஷ்ட திகதி 19

# வானவில் மருத்துவம்

பதில் தருபவர் :
**எஸ். எப். எல். அக்பர்,** *MBBS (Cey) MS (Cey)*
*MRCOG (UK)* மகற்பேற்று மருத்துவம், பெண் நோய் மருத்துவம்

# இரட்டைக் குழந்தைகள் பெற்றுக் கொள்ள முடியுமா?

**வயது 24. 18 வயதில் இடுப்பு வலி இருந்தது. பின்னர் இடது கால் பாதம் வீங்கியது. யானைக்கால் நோய்க்கு மருந்து குடித்து வீக்கம் வற்றியது. இப்போது நின்று கொண்டிருந்தல் கால் வீங்கும். உளைச்சலும் ஏற்படுகிறது. எனக்கு எப்போதாவது தலைவலி, கண் எரிச்சல், தூக்கமின்மை, கோபம், மார்புக்கு இடையே வலி, மூச்சு எடுப்பதில் சிரமம் போன்றவையும் ஏற்படுகிறது. என்ன காரணம்?**

**- பெயர் குறிப்பிட விரும்பாதவர்**
**நாவலப்பிட்டி**

பூப்பெய்திய காலத்தில் மாதவிடாய் சிரமம் ஏற்படாது. அடிக்கடி ஏற்படலாம். அல்லது நாள் தள்ளிச் செல்லலாம். ஆரம்பத்தில் மாதவிடாய் ஏற்படும்போது உபாதைகள் ஏற்படாது. ஆனால் வருடங்கள் செல்லச் செல்ல வயிற்றுவலி, தலைவலி, சோர்வு, இடுப்பு வலி, நெஞ்சு வலி என பல உபாதைகள் ஏற்படுவது வழக்கம். இதற்குக் காரணம் கருமுட்டைகளை உற்பத்தி செய்யும் சூழகங்கள் ஆரம்பத்தில் முறையாகக் செயல்படாதிருந்து பின்னர் செயல்படத் தொடங்குவதுதான். உற்பத்தி சீரடைந்தும் மாதவிலக்கு ஒழுங்காகும் அதேசமயம் ஒவ்வொரு-வருடைய உடல் மன நிலைகளின்படி நோவுகளும் வேறுபடும். நோவுகளை பொருட்படுத்தாத மன இயல்பும், அவற்றைத் தாங்கும் உடல் வலிமையும் கொண்டவர்கள் மாதவிலக்கு வருத்தங்களினால் பெரிதும் பாதிக்கப்படுவதில்லை. நீங்கள் குறிப்பிடும் குமட்டும், வயிற்று நோவு, கால்வலி, மார்பு பாரம், தலைச்சுற்றல், இடுப்பு வலி ஆகியன இக்காலப் பருவத்தில் ஏற்படும் குணங்களே. நீங்கள் மருந்துகள் குடிப்பதை நிறுத்திவிட்டு ஒரு வி.ஓ.ஜியை சந்தித்து உங்கள் பிரச்சினைகள் பற்றி பேசி ஆலோசனை கேளுங்கள். பெண்களின் பல வருத்தங்கள் நோய்கள் அல்ல. உங்கள் உடல் பலம், மனப்பலம் ஆகியவற்றை சரியாக புரிந்துக்கொண்டு வி.ஓ.ஜி ஒருவரின் ஆலோசனையைப் பெற்று நடந்தால் பிரச்சினைகள் விலகிச் செல்லும்.

பல இளம் பெண்களின் மாதவிலக்கு பிரச்சினைகளை அவர்களது தாயார்கள் சந்தேகப்பட்டு, பெரிதுபடுத்தி, பிள்ளைகளின் மன உறுதியைத் தகர்த்து, குழப்பி அவர்களை சிக்கலில் மாட்டிவிடுகிறார்கள். தாயாரே, இதுதான் நோய் என ஏற்கனவே தீர்மானித்து, அதை ஒரு டாக்டர் ஒப்புக்கொள்கின்ற வரை பல மருத்துவர்களிடம் மகளை அழைத்துச் செல்கின் பிடிவாதத்தைப் பார்த்திருக்கிறோம். மகளுக்கு ஒன்றுமில்லை எனச் சொல்லும் டாக்டர் மீது கோபப்படும் தாய்மாரையும் அறிவேன். பெண் நோய்கள் விடயத்தில் தாய்மார்கள் டாக்டராகாமல் மருத்துவர்களிடமே நோய்களை விட்டுவிடுவது நல்லது.

**திருமணமாகி ஏழு வருடங்களாகி விட்டன. இப்போது குழந்தை வேண்டாம் என பின்போட்டோம். தற்போது குழந்தை வேண்டும். இரட்டை குழந்தைகளாக கிடைக்க வழி இருக்கிறதா? தயவு செய்து விளக்குங்கள்.**

**- சுகுமார் சுரேன், கம்பளை**

உங்கள் பரம்பரை கணவர் பரம்பரையில் இரட்டைக் குழந்தைகள் பிறந்திருப்பின் இயற்கையாகவே உங்களுக்கும் இரட்டையர் பிறக்கும் வாய்ப்புகள் அதிகம். இரட்டைக் குழந்தைகளை வயிற்றில் சுமப்பதும், பிரசவிப்பதும் கொஞ்சம் கஷ்டமான காரியங்கள். அவர்களை வளர்ப்பதிலும் தாயார் சிரமப்படவேண்டும். இதனால் இரட்டைக் குழந்தைகளைப் பொதுவாகவே பெண்கள் விரும்புவது குறைவு. இன்றைய நவீன மருத்துவ உத்திகளைப் பயன்படுத்தி உங்களுக்கு இரட்டையர் பிறக்கச் செய்ய முடியும்.

சில மருந்துகளைப் பாவிப்பதன் மூலம் ஒரு சமயத்தில் இரண்டு மூன்று கரு முட்டைகளை வரச் செய்து கருக்கட்டச் செய்யலாம். ஆரம்பத்தில் கால்நடை மருத்துவத்தில் இது பயன்படுத்தபட்டது. இப்போது பரிசோதனை குழாய் உத்தியின் மூலம் இது சாத்தியம். ஆகவே, இரட்டைக் குழந்தைகள் சுமப்பது, பிரசவிப்பது, வளர்ப்பது ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகள், கஷ்டங்களை நீங்களும் கணவரும் கலந்து ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டும். பின்னர் வி.ஓ.ஜி ஒருவரை அணுகி உதவி பெற்றுக்கொள்ளலாம்.

**என் மகள் பூப்படைந்து ஆறு மாதங்களாகிறது. அவள் பூப்படைவதற்கு முன்னர் வீட்டு மாடிப்படியில் உருண்டு விழுந்து அடிபட்டிருந்தது. மறுநாள் அவள் பூப்படைந்தாள். அவள் பூப்படைய இந்த விபத்து காரணமாக இருந்திருக்குமோ என்று சந்தேகிக்கிறேன். மேலும் அவளது கன்னித் தன்மையில் பழுது ஏற்பட்டிருக்கலாமோ என்ற கவலையும் உள்ளது.**

**- வி.என்.ஏ**
**இறக்காமம்**

கீழே விழுந்ததற்கும் இதற்கும் இடையே முடிச்சுபோட வேண்டாம். இரண்டுக்கும் இடையே எந்த சம்பந்தமும் இல்லை. இனி கவலையை விடுங்கள். அப்படியானால் உறுப்பிலிருந்து அப்போதே இரத்தப் பெருக்கு ஏற்பட்டிருக்கவேண்டும்.


பூப்பெய்துவது என்பது இயற்கை நிகழ்வு. அதுதான் நிகழ்ந்திருக்கிறது. முதல் விலக்கில் நிறைய இரத்தம் வெளி-யேறுவது இயல்பு. அடுத்ததாக மகளின் கன்னித் தன்மைக்கு எவ்வகையிலும் பங்கம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை.

மேலும் கன்னிச் சவ்வுக்கு பங்கம் ஏற்பட்டிருந்தால் அவள் ஒழுக்கமற்றவர் என்றும் ஏனையோர் ஒழுக்கமானவர்கள் என்றும் தரம் பிரிப்பது பழைய நம்பிக்கை. ஒழுக்கம், கண்ணியம், நல்ல பழக்க வழக்கங்கள் என்பது ஒரு சவ்வில் தங்கியிருக்கிறது என்பது மூட நம்பிக்கை. நல்ல பழக்க வழக்கங்கள் வாழ் நாள் முழுவதும் ஆணும் பெண்ணும் கடைபிடிக்கவேண்டியவை. ஒழுக்கமானவராக இருப்பது வேறு, ஒழுக்கமானவராக காட்டிக்கொள்வது வேறு. ஆகவே மூட நம்பிக்கைகளைப் பற்றி கவலைப்படவேண்டாம்.

*கர்ப்பம் தொடர்பான நோய்கள், வருத்தங்கள், பெண் நோய்கள் தொடர்பான உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்*
**எஸ். எப். எல். அக்பர்**
*பதில் சொல்லத் தயாராக இருக்கிறார். உங்கள் கேள்விகளை தெளிவாகவும் சுருக்கமாகவும் நெடுநாள் நோயானால் ஏற்கனவே எடுத்துக் கொண்ட சிகிச்சைகளின் போட்டோ பிரதிகளையும் இணைத்து கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும். வயதை குறிப்பிட மறக்க வேண்டாம். பெயர் குறிப்பிட விரும்பாதவர்கள் அதை தனிக் கடிதத்தில் தெரிவிக்கலாம். எனினும் பெயர் முகவரி குறிப்பிட மறக்க வேண்டாம். இது எமது தேவைக்காக.*

வானவில் மருத்துவம்,
த.பெ. எண். 1218
கொழும்பு.
e-mail: vannavaanavil@gmail.com

## 'வானவில்' குறுக்கெழுத்துப் போட்டி 30



### இடமிருந்து வலம்

1. பல நிற சிறகுகளுடன் பறந்து திரியும் பூச்சி இனம் (7)
4. ஒரு நிறம் (4)
8. மோட்சம் பெற இங்கு போவார்கள் (2)
10. சால்ஜாப்பு (3)
12. போட்டியில் வென்றால் இது கிடைக்கும் (5)
14. இதை வைத்து முன்னர் தமிழ் வளர்த்தார்கள் (4)
17. கற்பகத் தரு (2)
18. கை (3)
19. மலைஉச்சி (4)
20. சிறுவர்கள் ஆர்வமாக கேட்பார்கள் (2)
22. சுற்றும் (5)
24. நல்ல உடல் ஆரோக்கியம் (3)
25 மாப்பிள்ளை (3)
26. பூமி (2)
27. கலை (3)
28. பயறு கலந்த சிற்றுண்டி (4)
29. நடிகை (4)
31. பூமி சாஸ்திரம் (5)
32. வெட்டும் (3)
34. உருவம் (4)

### மேலிருந்து கீழ்

1. கேலி (5)
2. வீண் பகட்டு (5)
3. கடவுளுக்கு செய்வது (2)
4. யோசனை (4)
5. குழப்பம் (5)
6. வெளிநாட்டில் குடியேற்றம் (3)
7. கையால் காட்டும் சமிக்ஞை (2)
9. அரிமா (4)
11. மருத்துவருக்கு இருக்கவேண்டுமாம் (3)
13. தலையில் வைத்து ஆடுவார்கள் (4)
15. ராமாயணம் எழுதியவர் (4)
16. இவை பன்னிரண்டு உண்டு (2)
19. ஒரு நடிகர் (3)
20. 15ல் இருப்பவர் இங்கும் இருக்கிறார் (4)
21. தலைவலிக்கு பூசலாம் (3)
23. பெண்களிடம் சொல்லக்கூடாது (5)
24. தூய்மை (4)
26. பலத்த காற்று (3)
27. அழும்போது கூட வரும் (4)
30. ஒருவருக்கு பிறந்த பெண் குழந்தை (3)
31. உலகம் (2)
33. மேடையை மறைக்கும் (2)

*சரியான விடைகளை எழுதி 25. 05. 2013க்கு முன்*

குறுக்கெழுத்துப் போட்டி - 30
வண்ண வானவில்
த.பெ. இலக்கம் 1218
கொழும்பு

*என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். சரியான விடை எழுதுபவர்களில் தெரிவு செய்யப்படும் மூவரின் பெயர், முகவரி பிரசுரமாகும்.*

**குறுக்கெழுத்துப் போட்டி இல 29க்கான விடைகளும் பரிசு பெற்றவர்கள் விபரங்களும் 22ஆம் பக்கத்தில்....**







# ஆபத்தற்ற சிவப்பழகு கிறீம்களை மட்டுமே உபயோகியுங்கள்

சிவப்பாக விரும்புபவர்களுக்கு சில ஆலோசனைகளை இன்று நாம் வழங்கவிருக்கிறோம். சில நேரங்களில் இந்த ஆலோசனைகள் பற்றி உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கவும் கூடும்.

உங்கள் நிறத்தை சிவப்பாக மாற்றும் பல வகை கிறீம்கள் இப்போது சந்தையில் காணப்படுகின்றன. தங்கள் கிறீம்தான் மிகவும் உகந்தது என மேற்படி கிறீம்களை தயாரிக்கும் நிறுவனங்கள் ஊடகங்கள் மூலம் கூறி வருகின்றன. எனவே எந்தக் கிறீமை பாவிப்பது என்ற குழப்பநிலை உங்களுக்கு ஏற்படலாம். எனவே நாம் இங்கே வழங்கும் தகவல்கள் உங்களுக்கு முக்கியமானவையாக அமையலாம். இதை முழுமையாக வாசித்த பின்னர் அவசியமானவற்றை தெரிவு செய்து கொள்வது உங்களுக்கு இலகுவாக இருக்கலாம்.



எமது சருமத்தைப் பற்றி பேசும்போது மெலனின் (Melanin) என்ற வண்ணப் பூச்சு எமது நினைவுக்கு வரும். அதற்கு காரணம், குறிப்பிட்ட தோலின் நிறம், அளவு அது படர்ந்திருக்கும் விதம் ஆகியவை சிகப்பு (வெள்ளை) முதல் அடர் கறுப்பு வரை வித்தியாசப்படும். இது எதனால் ஏற்படுகிறது தெரியுமா? மெலனோ சைட்ஸ் Melano Cytes மூலம் உருவாகும் மெலனின் மூலமேயாகும்.

மெலனோசைட்ஸ் இரு முறைகளில் மெலனினை உருவாக்குகிறது. அவை யுமெலனின் (Eumelanin) மற்றும் பியோ மெலனின் (Pheomelanin) ஆகிய இரு முறைகளிலாகும். தோல் தடிப்பாக அடர் கறுப்பு நிறத்தில் இருப்பவர்கள் யுமெலனின் வண்ணப்பூச்சு அதிகமாக இருப்பவர்களாவர்.

டய்ரோசினெஸ் (Tyrosisnass) எனும் நொதிப்பொருள் மூலம் ஏற்படும் இரசாயன செயற்பாட்டினால் மரபணுக்கள் மீது செலுத்தப்படும் கட்டுப்பாடே ஒருவரின் தோலின் நிறத்தை நிர்ணயிக்கிறது. இதனால்தான் ஒவ்வொருவரின் தோலின் நிறமும் ஒன்றுக்கு ஒன்று மாறுபடுகிறது. குறிப்பிட்ட மரபணுக்களில் உள்ள DNA கூறுகள் உருமாற்றம் பெறுமிடத்து தோலில் புற்றுநோய் ஏற்படவும் காரணமாகிறது.

இதனால்தான் அதிக அளவில் உங்கள் உடலில் சூரிய வெளிச்சம் படுமானால் UVA மற்றும் UVB அடங்கிய SPF 30 + SUN protection கிறீமை பூசுமாறு கூறப்படுகிறது.

சருமத்தை சிகப்பாக மாற்றும் கிறீம்கள் (Ideal skin whitness) துரிதமாக மற்றும் இனங்காணப்பட்ட திசுக்களை மட்டும் (மெலனோசைட்) குறுகிய அல்லது நீண்ட காலத்தில் பக்கப்பாதிப்பு எதுவும் இன்றி மாற்றக்கூடியதாக இருக்கவேண்டும். இவை இயற்கையாகவும் ரசாயன சேர்க்கையாகவும் இருக்கலாம்.

இயற்கையாக சருமத்தை சிகப்பாக்கும் செறிவூட்டிகளாக மஞ்சள், வெள்ளை, சந்தனம், அதிமதுரம், தோடம், மரமஞ்சள் ஆகியவை. விட்டமின் A விட்டமின் C, E, AHA (அல்பா ஹைட்ரொக்ஸி அசிட், சிலிசிலிக் மற்றும் லெக்டிக் ஆகியவை இரசாயன செறிவூட்டிகளாகும்.

மேற்கூறிய இரசாயன பொருட்கள் சருமத்துக்கு போதிய பாதுகாப்பாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. ஊதா கதிர்களை கட்டுப்படுத்துவதன் மூலமே இவை சருமத்தில் நிற மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அத்துடன் சருமத்துக்கு தீங்கு ஏற்படக்கூடிய பாதரசம் இதில் சேர்க்கப்படுகிறது. சர்வதேச சமூகத்தினால் இவற்றின் உற்பத்தி தடை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அழகு சிகிச்சை உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய சட்டங்கள் உள்ளன. அதன் மூலம் பாவனையாளர்கள் பாதுகாக்கப்படுகின்றனர்.

இலங்கையில் எந்தவொரு அழகு சிசிச்சை உற்பத்தி பொருளையும் தயாரித்து சந்தைப்படுத்துவதற்கு முன்னர் ஔஷத மற்றும் வாசனைப் பொருட்கள் அதிகாரசபை (CDDA)யிடம் பதிவு செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட அதிகாரசபையிடம் பதிவு செய்யப்படாமல் அவ்வாறான ஒரு தயாரிப்பை சந்தைப்படுத்துவது சட்ட விரோதமானது. இதன் மூலம் தீங்கு விளைவிக்கும் இரசாயன சேர்க்கை அடங்கிய உற்பத்தியை தயாரிப்பது, விநியோகிப்பது கட்டுப்படுத்தப்படுகிறது. அதேவேளை அழகு சிகிச்சை நிறுவனமொன்று ISO என்ற நியம சான்றிதழ் பெற்றிருந்தால் அந்த நிறுவனம் தயாரிக்கும் பொருட்களில் தீங்கு விளைவிக்கும் இரசாயன சேர்க்கைகள் இல்லை என்று பாவனையாளர்கள் நம்ப முடியும்.

4rever நிறுவனத்தின் சருமத்தை சிவப்பாக்கும் கிறீம்கள் கீழ்க்கண்டவையாகும்.

Fair & Beauty
Almond fairness gel
Total Fairness Cream
Pearl Fairness Night Cream

மேற்கூறிய சருமத்தை சிவப்பாக்கும் கிறீம்கள் CDDAவில் பதிவு செய்யப்பட்டவை. அத்துடன் ISO 9001:2008 மற்றும் GMP (ஆசிய மற்றும் ஐரோப்பிய) நியமங்களின் கீழ் உற்பத்தி செய்யப்பட்டு, பொதி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படுகின்றன. அத்துடன் 4rever தயாரிப்புகள் இலங்கை ஆயுர்வேத சபையில் ஆயுர்வேத தயாரிப்புகளாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

சாந்தினி பண்டார



# அனுஷ்காவின் நிறைவேறா ஆசை

உயரமான அனுஷ்காவிற்கு தமிழில் தனுஷ், சிம்பு போன்ற குட்டையான நடிகர்களோடு நடிக்க ஆசையாம். ஆனால் அவரின் உயரம் இவர்களுக்கு பொருந்தாததால் ஐயோ என்று கன்னத்தில் கைவைத்து ரொம்பவும் கவலைப்படுகிறார். அப்புறம், தெலுங்கின் பெரிய மீசைக்கார நடிகர்களோடு நடித்து நடித்து அம்மணிக்கு வாழ்க்கையே வெறுத்து போய்விட்டதாம்.

அதற்காக தனுஷ் மற்றும் சிம்பு வகையறாக்கள் நாட்காலி போட்டா அனுஷ்காவுடன் நடிக்கவேண்டும்? பெண் என்பவள் ஆணைவிட குட்டையாகத்தான் இருக்கவேண்டும் என்ற எழுதப்படாத சமூக விதி சினிமாவை விட்டு தொலைந்ததாக இல்லை!



# நடிகராகிறார் இசை அனிருத்

போடா போடி இயக்குநர் விக்னேஷ் சிவன் அடுத்து இயக்கும் படத்தில் இசையமைப்பாளர் அனிருத் ஹீரோவாக நடிக்கிறார். 18 வயது பையனை பற்றிய கதை என்பதால், அனிருத் பொருத்தமாக இருப்பார் என்று தோன்றியது. அவரிடம் கேட்டேன். முதலில் தயங்கினார். பிறகு கதையை சொல்லி, தயக்கத்தைப் போக்கினேன் என்று அனிருத் நாயகனாகிய கதையை சொல்கிறார் விக்னேஷ் சிவன். படத்துக்கு அவரே இசையமைக்கிறார். இயக்குனர் கவுதம் வாசுதேவ் மேனனின் போட்டேன் கதாஸ் படத்தைத் தயாரிக்கிறது ஜுன் மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது.



# சந்தமாமா தோல்வி: குழப்பத்தில் கருணாஸ்

சந்தமாமாவை தன் கனவுப் பட்டறையில் வைத்து செதுக்கோ செதுக்கு என செதுக்கி எடுத்தார் கருணாஸ். ஆனால் படமோ வெளியான சூட்டோடு பெட்டிக்குள் சுருள ரொம்பவும் மூட் அவுட்டாகி இருக்கிறார் தயாரிப்பாளருமான கருணாஸ். இது அவர் எதிர்பாராத அதிர்ச்சித் தோல்வி!

சாலிகிராமத்தில் உள்ள அவரது கென்மீடியா அலுவலகம் எப்போதும் அவரைப் போலவே கலகலப்பாக இருக்கும். கருணாஸ் சந்தாவின் தோல்வியால் கடந்த மாதம் முழுவதும் ரொம்பவும் நொந்து நூலாகி போய்க் கிடந்தார். கடுப்பாகி விடுவாரோ எனப் பயந்த உதவியாளர்கள் அவரை நெருங்கி பேசவே பயந்தார்களாம்.

'திண்டுக்கல் சாரதி, அம்பாசமுத்திரம் அம்பானி என்று இரண்டு ஹிட் படங்களை கொடுத்த எனக்கு இப்படி ஒரு மெகா தோல்வி? நம்பவே முடியவில்லையே என்று தனிமையால் புலம்பி தீர்க்கிறாராம் கரு.

இதேசமயம் ஏற்கனவே தயாரிப்பு வேலைகள் முடிவடைந்த நிலையில் திரைக்கு வரவிருக்கும் 'ரகளைப்புரம்' படத்தை எப்படி இந்தச் சூழலில் வெளியிடுவது என்றுதான் அவரின் இன்றைய குழப்பத்திற்கு காரணம். முதல் படத்தின் தோல்வி ரகளைப்புரத்தையும் பாதித்து விட்டால் என்ன செய்வது என்று அவர் கலவரப்படுவதில் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. மனுஷன் கதை இத்தோடு சரி என்று இவரது எதிரிகள் சாக்குருவியாக ஒரு பக்கம் கூவ, பீனிக்சாக எழுவது எப்படி என்ற சிந்தனையில் ஆழ்ந்திருக்கிறார் ரகளைப்புரத்துக்காரர்.

பாலிவுட்டின் பிரபல இயக்குநர்களில் குறிப்பிடத்தகுந்தவர் சஞ்சய் லீலா பன்சாலி. இவரது இயக்கத்தில் உருவாகியுள்ள படம் 'குசாரிஷ்'. இந்தப் படத்தின் நாயகனாக ரித்திக் ரோஷனும் நாயகியாக ஐஸ்வர்யாராயும் நடித்துள்ளனர். சமீபத்தில் இப்படத்தின் சிறப்பான சில புகைப்படங்களை படக்குழு வெளியிட்டுள்ளனது.

இதில் ஒரு காட்சியில் ஐஸ்வர்யாராய் புகைபிடிப்பது போன்று உள்ளது. இந்தக் காட்சியை பத்திரிகைகளில் பார்த்த மகளிர் அமைப்புகள் வெகுண்டெழுந்து கண்டன ஆாப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளன. இதனால் படம் தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கிறது.

முன்னாள் உலக அழகி என்ற வகையில் அவருக்கு இன்னமும் சமூகப் பொறுப்பு இருக்கிறது. பணம் கிடைக்கிறது என்பதால் எப்படி வேண்டுமானாலும் நடிப்பதா? என்றெல்லாம் எதிர்ப்பவர்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இப்படத்தின் காட்சி குறித்து மகளிர் அமைப்புகள், 'குசாரிஷ்' படத்தில் வரும் ஐஷ்வர்யாராயின் புகைப்பிடிக்கும் காட்சிகள் இளம் பெண்களை புகைப்பிடிக்கும் பழக்கத்திற்கு ஆளாக்கும் அபாயம் இருக்கிறது என்று சத்தியம் செய்கின்றன. அதுமட்டுமின்றி புகைப்பிடிக்கும் பெண்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். ஆகவேதான் இக்காட்சியை நீக்க வேண்டும் என்கிறோம் என்று அவை தன்னிலை விளக்கமும் சொல்கின்றன.

இந்த சர்ச்சை குறித்து ஐஸ்வர்யா என்ன சொல்கிறார்?

''படத்தில் குறிப்பிட்ட அந்தக் காட்சியை நீக்கும் அதிகாரம் எனக்கில்லை. நான் புகைபிடிப்பவளும் அல்ல. பொதுவாக புகைபிடிக்கும் பழக்கத்திற்கு நான் எதிரிதான். தற்போது இதைத் தவிர வேறு எதையும் சொல்ல இயலாது'' என்று கூறி நழுவியிருக்கிறார். இந்தப் படத்தை யுடிவி மற்றும் எஸ்.எல்.பி ஃபிலிம்ஸ் ஆகியவை இணைந்து வெளியிடுகின்றன.



# சிகரட் சிக்கலில் ஐஸ்வர்யா

# காஜல் உருவில் ஹன்சிகாவுக்கு ஒரு ஆபத்து



பெரிய அளவில் நடிப்புத் திறமை இல்லாவிட்டாலும் தனது குண்டு பூசனிக்காய் உடம்பைக் காட்டி எப்படியோ முதலிடத்திற்கு வந்திருக்கிறார் ஹன்சிகா. அதோடு முன்னணி நடிகர்களின் படங்களாகவும் கைவசம் வைத்திருக்கிறார். அதிலும் சில நடிகர்கள் ஹன்சிகா வேண்டும் என்று அவருக்காக நேரடியாகவே சிபாரிசு செய்கிறார்களாம். அதன்காரணமாக, இங்குள்ள நடிகைள் ஹன்சிகாவை நெருங்கவே முடியாத அளவுக்கு வளர்ந்து நிற்கிறார். அதோடு, அவருக்கு போட்டியாக வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட அமலாபால், சமந்தா போன்ற நடிகைகளும் தெலுங்கு தேசத்தில் ஐக்கியமாகி விட்டதால், இப்போது போட்டியே இல்லாத களத்தில் வாள் வீசிக்கொண்டிருக்கிறார் ஹன்சிகா. ஆனால் அவருக்கு ஆபத்து காஜல் உருவத்தில் விரைவில் வரப்போகிறது. துப்பாக்கியைத் தொடர்ந்து ஆல் இன் ஆல் அழகுராஜா, ஜில்லா படங்களில் நடிக்கும் அவர், அடுத்து மேல்தட்டு ஹீரோக்களின் படங்களை வலைவீசி பிடிக்கும் முயற்சியில் தீவிரமடைந்திருக்கிறார் என்கிறார்கள். மும்பையில் முகாமிட்டிருந்தாலும், அங்கிருந்தபடியே அபிமாணிகளுக்கு அடிக்கடி போன் போட்டு படவேட்டை நடத்தி வருகிறார். இதில் சில முன்னணி ஹீரோக்கள் காஜல் பக்கம் சாய்ந்திருப்பதால், ஹன்சிகாவுக்கு செல்லவிருந்த புதிய படங்கள் அவர் பக்கம் திரும்பி நிற்கின்றன. அதனால் அந்தப் படங்களை காஜல் கைப்பற்றி விட்டால், அடுத்த ரவுண்டில் படங்களே இல்லாத நிலைக்கும் தள்ளப்படுவார் ஹன்சிகா என்ற டேன்ஜர் இருக்கவே செய்கிறது.

# சிம்பு: பெண் பார்க்க மாப்பிள்ளை வந்தார்...



வல்லவன் படத்தில் நடித்தபோது நயன்தாராவின் உதட்டைக் கடித்து இழுத்து படு சூட்டைக் கிளப்பினார் சிம்பு. அதையடுத்து அவர்கள் ஜாலியாக ஊர்சுற்றியதால் அவர்களை இணைத்து காதல் கிசுகிசுக்கள் வேகமாக பரவின. ஆனால், குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்களது காதல் முறிந்தது. இருவரும் அதன்பிறகு இணைந்து நடிப்பதைத் தவிர்த்தனர்.

ஏதாவது சினிமா விழாக்களில் எதேச்சையாக சந்தித்தால் கூட முகத்தை திருப்பிக்கொண்டு ஆளுக்கொரு பக்கமாக எதிரும்புதிருமாக அமர்ந்திருந்தனர். அதையடுத்து அடிக்கடி சிம்புவை முன்னணி நடிகைகளுடன் இணைத்து கிசு கிசு பரவுவது வழக்கமான ஒன்றாகிவிட்டது.

இந்த நிலையில், இந்த மாதிரியான கிசுகிசுக்கள் அனைத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக, சிம்புவுக்கு ஒரு பெண் பார்த்து திருமணம் செய்து வைக்கும் வேலைகளில் அவரது பெற்றோர் தீவிரமடைந்துள்ளனர். சமீபத்தில் வேலூரில் அவர்கள் சிம்புக்காக ஒரு பெண் பார்த்தார்களாம். இது மனசுக்கு திருப்தியாக இருக்க, மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அப்படி விரைவில் பிடித்தமான பெண் கிடைத்துவிட்டால், இந்த வருடம் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சிம்புவுக்கு திருமணம் நடைபெறுமாம். ஆக இப்போதே புதுமாப்பிள்ளை களை சிம்புவின் முகத்தில் தாண்டவமாடத் தொடங்கி விட்டது.

உங்களுக்கு தெரியுமா, என்னத்தான் விரலை ஆகாயத்தில் சுழற்றித் திரிந்தாலும், அவரது பெற்றோர்தான் சிம்புவுக்கான எல்லாவற்றையும் (பொக்கட் மணி உட்பட) பார்த்து பார்த்து செய்து வருகிறார்கள். அப்படி செய்யக்கூடிய ஒரு பெண்ணைத்தான் அவர்கள் தேடியும் வருகிறார்கள்!

## சதாவை தவிர்க்கும் வாய்ப்புகள்



வாய்ப்புகள் இல்லாமல் இருக்கும் சதா தற்போது தெலுங்கில் த்ரில்லர் படம் ஒன்றில் நடித்து வருகிறார். தமிழில் ஜெயம் படத்தில் அறிமுகமானவர் சதா. அதன் பிறகு அவர் சங்கர் இயக்கத்தில் விக்கிரமனுடன் அன்னியன் படத்தில் நடித்தார். மேலும் பல படங்களில் நடித்தார். சதா அழகாக இருந்தாலும் வாய்ப்பு என்னவோ வர மாட்டேன் என்று அடம்பிடிக்க ஆரம்பித்துவிட்டது.

## குத்தாடும் நயன்தாரா



தனுஷ் தயாரிக்கும் எதிர்நீச்சல் படத்தில் சம்பளம் வாங்காமல் குத்தாட்டம் போட்டுள்ளார் நயன்தாரா. சிவகார்த்திகேயன், ப்ரியா ஆனந்த் நடிக்கும் எதிர்நீச்சல் படத்தை தனுஷ் தயாரித்து வருகிறார். இந்த படத்தில் ஒரு பாடலுக்கு குத்தாட்டம் போட வேண்டும் என்று தனுஷ் நயன்தாராவை கேட்கவே, நயனும் உடனே ஓ.கே சொல்லி போட்டாரே ஒரு ஆட்டம்! அதற்குக் காரணம் தனுஷ் தன் நண்பர் என்பது தானாம். வேறு காரணங்கள் நிச்சயமாக எதுவும் இல்லையாம்.

## ஜி.விக்கு டும்... டும்...



ஜென்டில்மேன் படத்தில் சிக்குபுக்கு ரயிலே பாடலை பாடிய ஜி.வி பிரகாஷ் குமார் வெயில் படம் மூலம் அறிமுகமானவர். இந்த படத்தில் பாடல்கள் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றதோடு தமிழ் சினிமா உலகையே திரும்பி பார்க்க வைத்தது.

இதைத் தொடர்ந்து ஆடுகளம், பரதேசி, அன்னக்கொடியும் கொடிவீரனும் உட்பட 30க்கும் மேற்பட்ட படங்களுக்கு இசை அமைக்கும் வாய்ப்புக்களை ஜி.வி. பிரகாஷ் பெற்றார். தற்போது கதாநாயகனாகவும் தயாரிப்பு பணியிலும் இறங்கியுள்ள ஜீ.வி. பிரகாஷ் குமார், சமீபகாலமாக காதல் வலையில் சிக்கிக்கொண்டதாக பரபரப்பாக பேசப்பட்டு வந்தது. இறுதியாக தனது காதலி ஒரு பாடகி என்பதைக் கூறி வைத்தார்.

அந்த காதலி யார் என்பது குறித்து தமிழ் சினிமா ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டு வந்தது. இந்நிலையில் தனது காதல் விவகாரத்தில் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் பாடகி சைந்தவியை திருமணம் செய்து கொள்ள போவதாக ஜி.வி. பிரகாஷ்குமார் இன்று அறிவித்துள்ளார். இவர்களது திருமணம் பெற்றோர் சம்மதத்துடன் வருகிற ஜூன் மாதம் பட்டினபாக்கத்தில் உள்ள மேயர் ராமநாதன் திருமண மண்டபத்தில் நடக்கவிருப்பதாகக் கூறப்படுகிறது.



## விஜய் நம்பும் குட்டி ஜோதிடர்



ஒரு படத்திலாவது உங்களுடன் நடிக்கவேண்டும் என்று விஜய் மகன் சஞ்சய் ஆசையாகக் கேட்டாராம். அதையடுத்து வேட்டைக்காரன் படத்தில் நான் அடிச்சா தாங்க மாட்ட என்ற பாடலில், மகனை தன்னுடன் சிறிது நேரம் நடனமாட வைத்தார் விஜய். அந்த வகையில் நானும் ஒரு நண்பன் போலத்தான் என்று சொல்லும் விஜய் மகன் மூலம் தான் தன் படங்கள் பற்றி வெளியே என்ன நினைக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்கிறார். ''என் படங்களின் பாடல்களை முதலில் அவனிடம் போட்டுக் காட்டுவேன். அவனுக்கு எந்தெந்த பாடல்களெல்லாம் பிடிக்கிறதோ அதெல்லாம் கண்டிப்பாக ஹிட்டாகும். 'துப்பாக்கி படத்தில் இடம்பெற்ற கூகுள் கூகுள் பாடலைக் கேட்டு விட்டு இந்த பாட்டு கண்டிப்பாக ஹிட்டாகும்னு சஞ்சய் அடிச்சி சொன்னான். அதே போன்றே ஹிட்டானது என்கிறார் விஜய்.

## திருமணத்துக்கு ரெடி - த்ரிஷா



திரையுலகுக்கு வந்து 10 ஆண்டுகளை நிறைவு செய்துவிட்டார் த்ரிஷா. இதனால் அவரை பழைய நடிகை பட்டியலில் சேர்த்து பலர் ஓரங்கட்டியபோதும் சிலர் இன்னமும் த்ரிஷாவுக்கு சான்ஸ் கொடுத்துத்தான் வருகிறார்கள். அந்தவகையில் முன்னணி நடிகர்களான ஜெயம்ரவி, ஜீவாவுடனும் தற்போது நடித்து வருகிறார் அவர். ஆக, முன்னணி இடத்தில் இல்லையென்றாலும் ஏதோ நடித்துக்கொண்டுதான் இருக்கிறார் அவர்.

ஆனால் அவரது தாய்குலமோ, படங்கள் கைவசம் இருக்கிற இந்த நேரத்திலேயே திருமணம் செய்து கொண்டு சினிமாவை விட்டு வெளியேறினால் கௌரவமாக இருக்கும் என்று த்ரிஷாவை திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தி வருகிறார். அதோடு, வெளிநாட்டு வரன்களையும் பார்த்திருக்கிறாராம். ஆனால், த்ரிஷாவுக்கு பெரும்பாலான நடிகைகள் போன்று அமெரிக்க மாப்பிள்ளைகள் பிடிக்கவில்லையாம். அதனால் அம்மா பார்த்த வரன்களை தவிர்த்து விட்டாராம். அதோடு தமிழ்நாட்டில் உள்ள நல்ல மாப்பிள்ளையாக பாருங்கள். அடுத்த ஆண்டே திருமணம் செய்து கொள்ள நான் ரெடி என்று கூறியுள்ளாராம்.

# கவி முற்றம்

## நீயுள்ளவரை மட்டும்



பரிசுகள் தந்ததில்லை
நானுனக்கு - சிறு
கவிதையும் மென்றதில்லை
உன் வழக்கு
பிரிவிலும் முடியவில்லை
நம் கணக்கு
தோழி...
பிரிதலும் மடிதலும்
சமம் எனக்கு
ஆதலினால்தான்,
என் உடலில் உனக்கு
கவசம் செய்து
உயிரை விழிக்கு
ஒளியாய் தந்து
நீயுள்ளவரை மட்டும்
நான் வாழ நினைக்கிறேன்
ஒரு ஏகாந்த பிறவியாய்

தனஞ்சன்
மாவத்தகம

## குருவி



மரம் விட்டு மரம் தாவுகிற மனசு ....!
குருவிகள் வந்து குந்தி இருப்பதற்கு
எந்த மரக்கொம்பு என்ன சாதியிது
வளைவா நெளிவா
என்றேதும் பாரப்பதில்லை
வந்து குந்தி கூடுகட்டி சீவிதம் நடத்துகிறது.

கிளை முறிந்தால் வேறு இடம்
தேடிப்போகிறது.
சிறகு முளைக்கும் வரை தொண்டைக்குள் இருக்கும்
இரையை கக்கி எடுத்து குஞ்சுக்கு
ஊட்டி விடுகிறது

சிறகு முற்றிய
ஓர் நாளில் பறந்த குஞ்சுகளை
எங்கே போயின வென்றோ
யாருடனோவென்றோ எப்போதாகினும்
தேடியலைவதில்லை.
மனித மனசு மட்டும் ஏனோ அப்படியல்லவே
வாடிப்போகிறது
வாழ்வியல் இது தானேவென்று விளங்க மறுக்கிறது

- கவிதை மட்டுவில் ஞானக்குமாரன்

## என் அன்னை



அம்மா உன்னை நினைத்து
என் கண்கள் நனைந்த கதையை
கவிதையாய் சொல்லும் பாக்கியம்
பெற்றேன்
சுகயீனம் நான் அடைந்து
படுக்கையில் கிடைக்கையிலேயே
நீ அடைந்த கவலையை நான்
அறிவேன் அம்மா
மேனி எங்கும் சுகயீன சோக
நிலை
கண்டு கதறி அழுதால்
கண்ணுறங்கவில்லை நான்
என் கண்ணீரை துடைத்து
கசாயம் தரட்டுமா என்று
நீ கேட்டப்போது
நான் அழவில்லை என் இதயமே
இடிந்ததம்மா!

எம்.எஸ்.எப்.சுக்னா,
காத்தான்குடி

## மாமியார் வீடு



ஓராயிரம் கனவுகளுடன்
ஒருத்தனை மட்டும் நம்பி
மாமியார் வீட்டில் அடியெடுத்து
வைக்கிறாள் ஒரு பெண்
அவளது கடந்த கால வாழ்க்கையின்
சுதந்திரம் சந்தோஷம் எல்லாமே
அவள் அந்த வீட்டில் எடுத்து வைக்கும்
முதல் காலடியிலேயே அழிந்து
போகிறது ஏனெனில்
அது அவளின் மாமியார் வீடு.

- பி.நிஷா,
பருத்தித்துறை

## ஒரு விடியல்

நினைவுத் துயருடன்
போராடி
நிறைவு வராத
வாழ்வுடன்
நித்தம் சாவதை விட
நினைவுகள் அற்ற
பைத்தியமாவது மேல்
பிரிவுத் துயரில் தவிக்கும்
நம்மை அழைக்க
நாளை தூரத்தே
ஒலிக்கலாம் ஒரு விடியல்

டி.கே அனீம்
வாழைச்சேனை



## வண்ணத்துப் பூச்சி




வானவில்லின் வர்ணம் திருடி
மேனிக்கு சாயமிட்டு
இறக்கை விரித்து
இன்பம் கொள்ளதே

தென்றலோடு சேர்ந்து
சிறகுகளை அசைத்து
வான்வெளியை அலங்கரித்த
உல்லாச பூச்சி

மலர்களை மயக்கி
தேன்குடித்துப் பசிபோக்கி
எனக்கும் சொல்கிறது
சுதந்திரப்பாடம்.

ஹனிபா சஹிலா
கிண்ணியா-03

## உன் கையில்



பிரபஞ்சத்தின் தொடக்கத்தை
அறியாத மனிதா
உன் ஆணவம் என்ன
நிலையானதா
காலைக் கதிரவன்- தன்
கடமையை செய்ய
தவறியதில்லை
மாலைவரும் மதிதானும்
மறந்னேும்
தன்செயலை செய்ய தவறியதில்லை
வீசிவரும் காற்றும்
ஒருகணம் நின்றதில்லை- என்றும்
தன்பங்கை ஆற்ற
தவறியதில்லை
இயற்கையின் சீற்றமும்
என்றும் மாறாமலே
பங்களிப்பு செய்துவருகின்றன
ஆறறிவு படைத்த
மனிதா!
நீ மட்டும் ஏனிப்படி
மாறுகின்றாயோ
ஆணவம் கொண்டு
ஆடுகின்றாயோ
உன்னிடம் என்ன
இருப்பதாக
எண்ணி
..... எதுவுமில்லை!

வதிரி கண. எதிர்வீரசிங்கம்

## உதிர்ந்த காதல்...!



கற்பனை வானில் மிதந்து
ஓராயிரம் கற்பனை விண்மீன்களை
ஒன்று திரட்டி
வடித்தெடுத்த காதல் மடலானது
காதலியவள் கரங்களை
சேருமுன் உதிர்ந்துவிட்டது
அவளின் திருமண அழைப்பிதழ் கண்டு!

எம்.யூ.அல்சாத், ஓட்டமாவடி

## மனமும் மனசாட்சியும்



உதிர்ந்து
விழுந்தது மலர்...
மடியாய் தாங்கியது
சிலந்திக் கூடு
இருப்பு
உண்டு என்பதால்
முயற்சிகளில்லாமல்
நீ
மூழ்கிவிடக் கூடாதென்பதற்காக...

த. பருத்திதாசன்

### வாசக கவிஞர்களுக்கு...


பதினைந்து வரிகளுக்கு மேற்படாத வகையில் நச் கவிதைகளை எழுதி எங்களுக்கு தபாலிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்

கவிமுற்றம்,
ஆசிரியர், வண்ண வானவில்,
த.பெ இல 1218, கொழும்பு.

மின்னஞ்சல் - vannavaanavil@gmail.com

# "வானொலி பெட்டிக்குள் குள்ள மனிதர்கள் இருக்கிறார்களா என நோட்டம் விட்டேன்"


மருதமுத்து



இன்று நம் வீடுகளில் கம்பியூட்டர் சிறிதும் பெரிதுமாக வந்து உட்கார்ந்து சண்டித்தனம் பண்ணுகிறது. 1940களின் கடைசியில் இந்த சண்டியன் வரிசையில் முதல் சண்டியனாக நம் வீட்டுக்குள் புகுந்தான். அன்றைய மக்கள் அதை எப்படிப்பார்த்தார்கள், எப்படி வரவேற்றார்கள் என்பதை இச்சிறு கட்டுரைத் தொடர் சொல்கிறது. நீங்கள் ஐம்பதைத் தாண்டியவராக இருந்தால் உங்கள் ரேடியோ அனுபவங்களை இரை மீட்டிப் பார்த்துக்கொள்ளுங்கள்.

தொலைக்காட்சி பெட்டிகளின் வருகை ரேடியோ பெட்டிக்கு சாவு மணி அடித்து விட்டது என்றுதான் சொல்லவேண்டும். தொலைக்காட்சியின் வருகைக்கு முன்பு ஒவ்வொரு நடுவீட்டிலும் சண்டியராக இருந்து வானொலி பெட்டிகள் குடும்பங்களை ஆட்டிப்படைத்து வந்தன. இன்றோ ஒவ்வொரு வீட்டு பரணிலும், மூலை முடுக்குகளிலும் கவனிப்பாரற்று, தூசி படிந்து கிடக்கின்றன. பழைய ரேடியோ திருத்தும் கடைகளுக்கு சென்று பார்த்தால் நூற்றுக்கணக்கான பழைய ரேடியோக்கள் அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

''அந்தக்காலத்தில் ஒரு வீட்டுக்கு ரேடியோ பெட்டி வந்துவிட்டால் கூடவே டெய்லரும் வந்திடுவார், ரேடியோ பெட்டியை அளவெடுத்து அதுக்கு ஒரு சிற்றாடை தைத்து கொடுக்க. அதை ரேடியோவிற்கு அணிவித்து ஜம்முன்னு நடுவீட்டில் உட்கார வைப்பாங்க" என்று சொல்கிறார் மருதமுத்து.

றைகம் தோட்டத்தை சேர்ந்த மருதமுத்துக்கு இப்போ 70 வயதாகிறது. அந்தக் காலத்தில் றைகம் தோட்டத்திற்கு ரேடியோவை கொண்டு வந்தவர்களில் முதலாம் இடம் இவர்களின் குடும்பத்துக்குத்தானாம்.

ஆரம்பத்தில் றைகம் தோட்டத்தின் இன்ஜின் டிரைவர் பீட்டர் சிங்கம் வீட்டில்தான் ரேடியோ இருந்தது. அந்த சமயத்தில்தான் மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார். மகாத்மா காந்தியின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளை ரேடியோவில் ஒலிபரப்பினாங்க... றைகம் தோட்டத்து சனமே இன்ஜின் டிரைவர் வீட்டை முற்றுகை இட்ட மாதிரிதான் நிறைஞ்சு இருந்தாங்க... பாபுஜி.... பாபுஜின்னு டெல்லியில் மக்கள் போடுற சத்தத்தை வானொலியில் கேட்டபோது எல்லோருக்கும் ஆச்சர்யம்... சிலையாகிப் போனாங்க... சில மாதங்கள் கழித்து என் மச்சான் செல்லையா டிரைவர் ஒரு ரேடியோ வாங்க முடிவு செய்தார்... எனக்கு ஒரே சந்தோசம். எங்க வீட்டுக்கு ரேடியோ வரப்போற கதையை நான் பலரிடம் பரப்பி விட்டேன். அதனால் எல்லோருடைய பார்வையும் எங்க வீட்டு மீதுதான் இருந்தது. என் மச்சான் சொன்னபடியே இங்கிரிய எட்மன் ஸ்டோர்சில் 300 ரூபாய்க்கு பிலிப்ஸ் கம்பனி ரேடியோவை வாங்கி வந்தார்... அந்தக் காலத்தில் ரேடியோவிற்கு அண்டனா (அதை அப்போது ஏரியல் என்பார்கள்) கட்டினால் தான் வேலை செய்யும். பெரிய மூங்கில்கள் கொண்டு வந்து நட்டு அதில் ஒரு வயரை கட்டி அதன் மறுமுனையை எதிர்புரத்தில் இருக்கும் ஒரு மரத்தில் இணைத்துக்கட்டி அந்த வயரின் நடுமத்தியில் மற்றொரு வயரை இணைத்து அந்த வயரை ரேடியோவில் இணைக்கவேண்டும்.



## ரேடியோ வீட்டுக்கு வந்த கதை

எங்க வீட்டு ரேடியோவிற்கு அண்டனா கட்ட ஆள் ஆளுக்கு போட்டி போட்டுக்கொண்டு மூங்கில் வெட்டி வந்து கட்டினாங்க

றைகமை தோட்டத் தொழிலாளர் வீட்டில் முதல் ரேடியோ என்பதால் எங்க வீட்டு ரேடியோவுக்கு பெரிய மவுசு. ஊர் சனமே வீட்டுக்கு முன்னால் நின்று அதில் வரப்போகும் சத்தத்திற்காக காத்திருந்தார்கள். அது ஒரு பெரிய ரேடியோ. இப்போ இருக்கிற டீவி மாதிரி இருந்தது. ரேடியோவை என் மச்சான் ஒன் பண்ணி மீட்டரை கரகரவென்று ஓசை வர திருப்பி மீட்டரை பிடித்தார். ரேடியோவில் பாட்டு சத்தம் கேட்டதும் எல்லோருக்கும் ஒரே ஆச்சர்யம். ஆனந்தம். அந்த மாதம் முழுவதும் றைகம் தோட்டதில் எல்லா இடங்களிலும் எங்க வீட்டு ரேடியோவை பற்றிய பேச்சுதான். ரேடியோவிற்கு சாமுவேல் கங்காணிதான் சட்டை தைத்து போட்டார்!

அப்புறம் எங்க மச்சான் செல்லையா ஒரு விசயத்தையும் சொன்னார். ""இந்தாப் பாருங்கப்பா. இந்த ரேடியோவில் குள்ள மனிதர்கள் உள்ள இருக்காங்க. அதனால் நான் வீட்டுல இல்லாத சமயத்தில் யாரும் ரேடியோவை தொட்டுறாதீங்க. அப்படி தொட்டுட்டா உங்களை அடிச்சிடுவாங்க" என்று அவர் சொல்ல எனக்கு பயமா போய்விட்டது.

அதனால் நான் ரேடியோ இருக்கும் அறைக்குள் நுழைய மாட்டேன். ரொம்ப தூரத்தில் இருந்து அந்தக் குள்ள மனிதர்கள் வெளியே வருகிறார்களா என்று நோட்டம் விட்டுக்கொண்டே இருந்தேன். கடைசி வரைக்கும் அவர்கள் வெளியே வரவேயில்லை. பிறகு நான் கொஞ்சம் வளர்ந்த பிறகுதான் மச்சான் செல்லையா ரேடியோவை சின்னப் பசங்க உடைச்சிடாம பாதுகாக்கத்தான் அப்படி ஒரு பொய்யை சொன்னார் என்பதை புரிந்துக் கொண்டேன்.

# கொழும்பு துறைமுகத்தின் விசாலமான சமையலறை



கொழும்பின் அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் ஒன்று கொழும்பு துறைமுகம். சர்வதேச கப்பல்கள் தங்கிச் செல்லும் ஆசியாவின் மிக முக்கியமான இறங்கு தளமாக கொழும்பு துறைமுகம் செயல்படுகிறது.

இந்தத் துறைமுகத்தில் மொத்தமாக 11 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். நம் நாட்டை பொருத்த வரையில் அதிகளவான ஊழியர்கள் பணியாற்றும் ஒரே இடம் இந்தத் துறைமுகமாக மட்டுமே இருக்கவேண்டும்.

அதிகளவான பணியாளர்களை கொண்டிருப்பதால் இங்குள்ள சமையலறையும் மிகப் பெரியதாகவே இருக்கிறது. அந்தப் பிரமாண்டமான சமையலறையைப் பார்க்க கொழும்பு துறைமுகத்திற்கு ஒரு நடைபோட்டோம்.

மிகப் பெரிய விசாலமான இடத்தில் அந்த மெகா சமையற்கட்டு அமைந்திருந்தது. உள்ளே நுழையும் போதே சமையல் வாசனை மூக்கை துளைத்தெடுத்தது. அணையா விளக்கு பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் அணையா அடுப்பைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா? அப்படி ஒன்று இருக்கிறதென்றால் அது நம் நாட்டு துறைமுகத்தில் இருக்கும் சமையலறை அடுப்பு என்றுதான் சொல்லவேண்டும். 24 மணிநேரமும் இங்கே தொடர்ச்சியாக சமையல் வேலை நடைபெற்று கொண்டிருக்கிறது. பிரதான தலைமை சமையற்காரர்கள் இரண்டுப் பேரின் மேற்பார்வையில் இருபத்தேழு கைதேர்ந்த சமையற் கலைஞர்கள் சுறுசுறுப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

''இங்கே கிட்டத்தட்ட 11 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நாளைக்கு எட்டாயிரம் சோற்றுப்பார்சல்கள் தயார் செய்து கொடுக்கவேண்டும். இங்கே சாப்பிட விருப்பமில்லாதவர்களுக்கு அந்த உணவுக்குறிய பணத்தை துறைமுக அதிகாரசபை வழங்குகிறது," என்று சொல்கிறார் துறைமுக அதிகாரசபையில் அதிகாரியாக கடமையாற்றும் பூ. ஏ. ராஜ்குமார். அவரைத் தொடர்ந்து சமையல் பிரிவுக்கு உயர் அதிகாரியாக இருக்கும் அசித்த குணதிலகவை சந்தித்துப் பேசினோம்.

''ஒரு நாளைக்கு பகல் சாப்பாட்டிற்கு 400 கிலோ அரிசியும், சிகப்பு அரிசி 60 கிலோவையும் பயன்படுத்துகிறோம். இரவு சமையலுக்கு 230 கிலோ சம்பா அரிசியும் 60 கிலோ சிகப்பு அரிசியும் தேவைப்படுகிறது. மாதத்திற்கு சாப்பாட்டிற்கான செலவு கோடிகளைத் தாண்டுகிறது. வாரத்திற்கு இரண்டு தடவை டென்டர் அடிப்படையில்தான் காய்கறி வகைகளை கொள்வனவு செய்கிறோம்," என்ற அசித்தவிடம் 'ஆபர் கேம' என்ற பெயரில் வீதியோர கடைகளில் குறைந்த விலைக்கு விற்கப்படும் சாப்பாட்டு பார்சல்கள் உண்மையில் இங்கிருந்துதான் வெளியே விற்பனைக்கு போகிறதா என்று கேட்டோம். ''அதுபற்றி எனக்குத் தெரியாது" என்றவரிடம் ஏன் நீங்களே வெளியே மினி சாப்பாட்டுக் கடைகளை அமைத்து குறைந்த விலையில் சிறப்பான உணவையும் விற்பனை செய்யக்கூடாது? என்று கேட்டோம்.

அதற்கு அவர் ''என்ன பேசுகிறீர்கள்? ∴பைவ்ஸ்டார் ஹோட்டல்களில் மீதமாகும் உணவுகளை ரோட்டோரத்தில் போட்டா விற்கிறார்கள்? அப்படி விற்றால் அந்த உணவின் தரம் குறைந்து விடும். அது மாதிரிதான் எங்களுக்கென்று ஒரு பெயர் இருக்கிறது. அதை கெடுத்துக் கொள்ள முடியுமா? என்று ஒரு போடு போட்டார் அசித்த.



மணி ஸ்ரீகாந்தன்

ச.கிருஷ்காந்தன்

# ஜன்னலுக்கு வெளியே...



சரியான விடை:

**பூஜாகுமார்**

1. என். திணேஷ்- வவுனியா
2. கிருபாகரன்- எட்டியாந்தோட்டை
3. ஜி. பிரகாஷ்- விஸ்வமடு
4. யஸ்மிகா- நீர்கொழும்பு
5. பி.சுதர்ஷன்- யாழ்ப்பாணம்
6. இர்பான்- மோதர
7. எஸ்.ரஜீவ்காந்த்- கோண்டாவில்
8. எம்.எம். அசார்- கலேவெல
9. அப்ரோஸ்- பொத்துவில்
10. ப்ரியா- கொக்குவில்
11. பஜீலா ரஸ்வி- புத்தளம்
12. எம்.ஏ.எல்- ரில்கியா- கொட்டியாகும்புற
13. கே. நித்தியகலா- மாங்குளம்
14. ப்ரியா- கோண்டாவில்
15. ஜெனா- சங்கானை
16. ஆர். மகேஸ்வரி- நாவலப்பிட்டிய
17. கபில்தேவ்- இனுவில்
18. எஸ். பிரேமணி- சங்கானை
19. ஆர் இரோசன்- ஹைகம் கீ/பி
20. கே. சதீஸ்- கிளிநொச்சி
21. சன்பரா- நாவலப்பிட்டிய
22. எம். தயானி- வீரவில
23. சபானா சலாம்- தர்காடவுன்
24. மயூரி- நெடுங்கேணி
25. வி.சசிக்கலா- கொட்டகலை
26. இம்ரான் ஹம்ஷா- ஹொரவப்பொத்தானை
27. எஸ்.சிந்துஜா- வவுனியா
28. வடிவேல் தினேஷ்- அக்கறைப்பற்று
29. ரதி- யாழ்ப்பாணம்
30. என். மோகன்ராஜ்- கிளிநொச்சி

# படம் சொல்லும் கதை



1963- 64 காலப்பகுதியென்று நினைக்கிறேன். ஒரு உயிர்த்த ஞாயிறு தினத்தன்று திருப்பலி பூசையில் பங்கெடுத்து வீடு திரும்பும் வழியில் பண்டாரவெல சிறில் ஸ்டுடியோவில் எடுத்துக்கொண்ட குடும்பப் புகைப்படம் இது. பண்டாரவல தேயிலைதோட்டமொன்றில் கங்காணியாக அப்பா பணியாற்றினார். இந்த புகைப்படம் எடுத்து ஒரு வருடத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அப்பா காலமானதையடுத்து நாம் அம்மாவின் ஊரான பேராதனைக்கு திரும்பி வந்துவிட்டோம். இதில் நிற்கும் வரிசை (இடமிருந்து வலம்) நான், எனது தங்கை மனோன்மணி, பெரியக்காவின் கணவர் சார்ள்ஸ் மார்டின், பெரியக்கா, சின்னக்கா மார்க்கிரட். அமர்ந்திருக்கும் வரிசை (இடமிருந்து வலம்) அப்பா சாமுவேல் ராஜரட்ணம் டேவிட், அவரது மடியில் பெரியக்காவின் மூத்த மகள் கமலா ரோஸ்மேரி, எனது சிறிய தங்கை ரூத் டேவிட், அம்மா கிறிஸ்டினா, அவரது மடியில் பெரியக்காவின் இளையமகள் குசலாகுமாரி ஆகியோர் அமர்ந்திருக்கின்றனர். இன்று எனது அம்மாவும் அப்பாவும் எம்மோடு இல்லை. பெரியக்கா குடும்பத்துடன் பொகவந்தலாவையில் இருக்கிறார். நானும் எனது சின்னக்காவும் தங்கைமார் இருவரும் எமது பிள்ளைகளும் ஒரே வீட்டில் பிரியாமல் வாழ்கிறோம்.

**- கிறேஸ், கண்டி**

உங்களுடன் அல்லது உங்கள் குடும்பத்துடன் தொடர்புடைய மறக்க முடியாத நிகழ்வுகளை பின்புலமாகக் கொண்ட பழைய புகைப்படங்கள் இருக்குமானால் அந்த சுவாரசியமான கதையை எங்களுக்கு படத்தின் பிரதியுடன் அனுப்பி வைத்தால் அல்லது இமெயில் மூலம் அனுப்பி வைத்தால் உங்கள் மகிழ்ச்சியை நாங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

# சொல் விளையாட்டு - 29

சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**
வித்தியாசம், ஞாபகம், சிம்பு, புல்லு, மையல், வலு

**மேலிருந்து கீழ்**
விஞ்ஞானம், திலகம், யாகம், சமையல், சில்லு, புயல், மைல்

சரியான விடை அனுப்பியோரில் பெயர்கள் இடம்பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகள்

**எஸ்.ராஜேந்திரன்** - கொழும்பு
**எம்.எஸ்.சாஜஹான்** - வரக்காப்பொல
**எஸ். ஜுனைதா** - மாத்தளை



## ஆறு அதிர்ஷ்டசாலிகள்

1. கே.கவிதா- மட்டக்குளிய
2. எஸ். சசிதரன்- வவுனியா
3. ப. மிதுஷா, அளவெட்டி
4. ஆர். குகேஷ்- வாழைச்சேனை
5. எம்.எப்.எஸ். ரிஷானா- தர்காநகர்
6. எச். முனஹர்-அட்டுலுகமை



**கடந்த இதழில் வெளியான படத்திலுள்ள ஆறு தவறுகள் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளன.**

# குறுக்கெழுத்து போட்டி - 29

விடைகள்

**இடமிருந்து வலம்**
முரளி விஜய், குமரி, விஸ்வரூபம், பதாதை, தை, பிம்பம், பம்பரம், சாட்டை, அதிசயம், ரசம், கட்டாக்காலி, முட்டை, டைப்பிஸ்ட், கயல், சம்பவம், புலன், பசி, கனம், கட்டாயம், புயல், அம்பு

**மேலிருந்து கீழ்**
ரஸ்தா, விரூபி, கும்பம், மகரம், ரிதம், விபசாரம், வதை, தாட்சண்யம், திகட்டும், சட்டை, கட்டு, டாப்ஸி, கபிலன், கசப்பு, பகல், புகழ், பயம், சிம்பு

**சரியான விடைகளை எழுதி பெயர் தெரிவான மூவர்**

**ஆர். பஞ்சாட்சரம்,** இரத்தினபுரி
**எஸ். பரிமளா,** சுன்னாகம்
**எம். கேசவன்,** வத்தளை

# மீட்டலாம் ஒரு பாடல்

| | |
|---|---|
| படம் | : கும்கி |
| இசை | : இமான் |
| பாடியவர் | : மகிழினி மணிமாறன் |
| பாடல் வரிகள் | : யுகபாரதி |

சொய் சொய்... சொய் சொய்...
கையளவு நெஞ்சத்தில் கடலளவு ஆச மச்சான்
அளவு ஏதும் இல்ல அது தான் காதல் மச்சான்
நாம ஜோரா மண் மேல சேரா விட்டாலும் நெனப்பே போதும் மச்சான்
சொய் சொய்... சொய் சொய்...

வானளவு விட்டத்திலே வரப்பளவு தூரம் மச்சான்
அளவு தேவையில்ல அது தான் பாசம் மச்சான்
நாம வேண்டிக்கொண்டாலும் வேண்டா விட்டாலும் சாமி கேக்கும் மச்சான்

சொய் சொய்... சொய் சொய்...

தானே தந்தானே... தானே தந்தானே...
தானே தந்தானே... தானே தந்தானே...


தானே தந்தானே... தானே தந்தானே...
தானே தந்தானே... தானே தந்தானே...

ஏட்டளவு எண்ணத்தில் எழுத்தளவு சிக்கல் மச்சான்
அளவுக் கோலேயில்ல அது தான் ஊரு மச்சான்
நாம நாலு பேருக்கு நன்மை செஞ்சாலே அதுவே போதும் மச்சான்

நாடு அளவு கஷ்டத்தில நகத்தளவு இஷ்டம் மச்சான்
அளவுக் கோலேயில்ல அது தான் நேசம் மச்சான்
நாம மாண்டு போனாலும் தூக்கி தீ வைக்க உறவு வேணும் மச்சான்
சொய் சொய்... சொய் சொய்

கையளவு நெஞ்சத்தில கடலளவு ஆச மச்சான்
அளவு ஏதும் இல்ல அது தான் காதல் மச்சான்
நாம் காணும் எல்லாமே கையில் சேந்தாலே கவலை ஏது மச்சான்

சொய் சொய்... சொய் சொய்...
சொய் சொய்... சொய் சொய்...




Chord - D minor
Beat - 4:3

Introduction:

/ - - - / - - - / - - - / - - - /
/ DDA / A - - / GAG / - F - /
/ EDC / - - - / CD D / EF - /
/ EE - / DD - / - - - / - - - /
/ DDA / A - - / GAG / - F - /
/ EDC / - - - / CD D / E F - /
/ EE - / DD - / - - - / - - - /
/ D - F# / - F# - / EF#D / G - G /
/ GGE / EG A / A#A - / GAD /
/ - - - / - - - / - - - / - - - /
/ D - - / A - - / - - - / - - - /
/ D - - / A - - / - - - / - - - /

Interlude

/ D - E / - DE / CD - / E - D
/ - E - / C - D / - E - / CDF
/ EDD / D - - / - - - / - - -



தொகுப்பு:
**சங்கீத் சுதா**
sudhananth@gmail.com



நானும் என் யாழ். பயணங்களும் 27

தெளிவத்தை ஜோசப்

# பல்துறை வித்தகர் சண்முகம் சிவலிங்கம்



மானுடத்தின் தமிழ்க் கூடல் முதல் நாள் நிகழ்வுகள் 19.10.2002 அன்று யாழ் மாவட்ட பலநோக்குக் கூட்டுறவு சங்க சமாசத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் கோலா-கலமாக ஆரம்பமானது.

பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆரம்பவுரையாற்றினார். மனித உணர்வுகள் நசுக்கப்படும்போதே போராட்டம் வெடிக்கிறது என்று தனது தொடக்கவுரையை ஆரம்பித்தார் பேராசிரியர்.

பங்கேற்பாளர்களால் நிறைந்திருந்த யாழ் வீரசிங்கம் மண்டபம் உரைக-ளால் கனத்து உறைந்து போய்க் கிடந்தது.

சி.வி. கே. சிவஞானத்தின் தலைமையுரை பேராசிரியரின் ஆரம்ப உரைகளைத் தொடர்ந்து நிலாந்தனின் சிறப்புரை இடம்பெற்றது.

'உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடந்து 28 ஆண்டுகளின் பின் யாழ் மண்ணில் இப்படி ஒரு கலை இலக்கிய மாநாடு மானுடத்தின் தமிழ்க் கூடலாக வெகு விமரிசையாகத் தொடக்கம் கொண்டிருப்பது மகிழ்வைத் தருகிறது' என்று பேசத் தொடங்கினார் நிலாந்தன்.

உரைகளை செவிமடுத்தவாறு மண்டபத்துள் அமர்ந்திருக்கின்றேன். கார்மேகத்தைக் காணவில்லை. மோசஸ் கேமராவும் தோளுமாக ஓடிக்கொண்டிருப்பது தெரிகிறது. நிலாந்தனின் இந்த உரையுடன் விழ-ாவின் ஆரம்ப அமர்வு நிறைவு பெற்று கவிதை அமர்வுக்காக மேடை தயாரா-கும். எனக்குப் பக்கத்தில் வில்வர். என் தோள் மேல் கைபோட்டபடி. கவிதை அரங்கில் தான் பேசவிருப்பதாக நேற்றே என்னிடம் கூறினார், கவிஞர். சு. வில்வரத்தினம். கவிதை அரங்கிற்குத் தலைமை தாங்க வந்திருந்தவர் சண்முகம் சிவலிங்கம். சு.வி.யைப் போல் பழக்கம் இல்லை என்றாலும் சண்முகம் சிவலிங்கம் எனக்கு மிகவும் ஆத்மார்த்தமாகப் பிடித்த கவிஞர். ஈழத்துத் தமிழ் கவிதை மரபில் ஒரு தீவிரமான வளர்ச்சிப்போக்கைக் காட்டுவதற்கான அடையாளமாகத் திகழ்பவை இவருடைய கவிதைகைள்.

இந்தக் கவிதை அமர்வில் பங்குகொள்வோராக சண்முகம் சிவலிங்கத்தின் தலைமையுடன், 'ஈழத்துக் கவிதையில் தமிழ் இன-மொழி- உணர்வுக்கான அடித்தளங்கள் 1970க்கு முந்திய காலகட்டம்' என்பது பற்றி உரை நிகழ்த்த கவிஞர் சோ. பத்மநாதனும் '1970க்குப் பின் ஈழத்துத் தமிழ்க் கவிதைப் பண்பின் மாற்றங்கள்' பற்றிக் கருத்துக் கூற கவிஞர் சு. வில்வரத்தினமும் வந்திருந்தனர்.

ஈழத்து தமிழ் கவிதை உலகு குறிப்பிட்ட சில தகுதிகளைக் கொண்டிருக்கிறது. சில சிகரங்களைத் தொட்டிருக்கிறது என்றால் அதற்கான முக்கியமான பங்களிப்பில் இம்மூவரும் முன்நிற்பவர்கள் என்பது குறிப்பிடக்கூடியது.

சண்முகம் சிவலிங்கத்தை இந்த கவிதை அரங்கிற்குத் தலைமைதாங்க தெரிவு செய்திருந்த தமிழ்க்கூடல் அமைப்பினர் ஒரு இலக்கியக் கரிச னையுடனேயே இதைச் செய்துள்ளனர். ஈழத் தமிழ்க் கவிதை மரபின் மிக முக்கியமான மனிதர் இந்த சண்முகம் சிவலிங்கம் என்பதுடன் ஒரு தனித்துவ மிக்க வித்தியாசமான கவிஞரும் கூட.

அறுபதுகளில் எழுதத் தொடங்கிய சண்முகம் சிவலிங்கம் பாண்டிருப்பில் முப்பதுகளில் பிறந்தவர். ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. கேரளப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயின்றவர்.

பாண்டிருப்பு மகா வித்தியாலயத்தில் ஒரு விஞ்ஞான ஆசிரியராகத் தொடங்கி அதிபராகி ஓய்வு பெற்றவர். கல்முனை சாகிராவில்; வெஸ்லியில், கார்மல் பற்றிமாவில் அவர் ஆற்றிய ஆசிரியச்சேவை அளப்பரியது.

நீலாவணனுடன் இணைந்து 'பாடும் மீன்' சஞ்சிகையையும் எம். ஏ. நு.்மானுடன் இணைந்து 'கவிஞன்' காலாண்டுக் கவிதைச் சஞ்சிகையை யும் வெளிக்கொண்டுவந்தவர் இவர்.

தமிழரின் ஒரு முக்கிய கவிஞராகப் போற்றப்படும் சண்முகம் சிவலிங்கம் ஒரு சிறந்த சிறுகதையாளர், மொழிபெயர்ப்பாளர், விமர்சகர். தன்னுடைய கேரளாப் பல்கலைக் கழக அனுபவங்களை மையமாகக் கொண்டு ஒரு நாவலை கையெழுத்துப் பிரதியாகவே வைத்திருந்தவர்.

தன்னுடைய படைப்புக்களை நூலாக்கவேண்டும் என்னும் அக்கறையற்றிருந்த இவருடைய இரண்டு கவிதை நூல்கள் இவருடைய இலக்கிய நண்பர்களின் பெருமுயல்வால் சென்னை தமிழிலக்கியப் பதிப்பகத்தினரால் வெளியிடப்பட்டுள்ளன.

நீர் வளையங்கள்- 1978

சிதைந்துபோன தேசமும் தூர்த்து போன மனக்குகையும்- 2010

ஒரு தனித்துவமான கவிஞராக; கவனத்துக்குரிய சிறுகதையாளராக; மொழிபெயர்ப்பாளராக; ஆழமான விமர்சகராக பரிமானம் கொண்ட சண்முகம் சிவலிங்கம் பல்வேறு கோணங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டிய ஒரு முக்கியப் படைப்பாளி.

'எழுத்து என்ற இந்த மாயமானைத் தேடித் துரத்தி நான் ஓட தொடங்கியிரா விட்டால் மற்ற வகைகளில் சிறந்திருப் பேன் என்று அவர் கூறுவதுண்டு.

2012 ஏப்பிரலில் அவர் மரணம-டைந்தபோது பத்தாண்டுகளுக்கு முன் அவரைக் கண்டு கதைத்த நினைவும் ஓடி வந்து நிலைத்தது. தமிழியல் வெளியிட்ட அவருடைய இரு கவிதை நூல்களையும் அந்தந்தக் காலங்களில் எனக்குக் கிடைக்கச் செய்தவர் இ. பத்மநாப ஐயர். லண்டனில் வாழ்ந்தா லும் இலங்கையில், இலங்கை இலக்கியத்தின் பல்வித வளர்ச்சிப் போக்குகளில் உயிர் வைத்திருப்பவர்.

கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் இரண்டாவது தொகுதி (சிதைந்து போன தேசம்...) யின் கவிதைகள், இன்ன பிற படைப்புக்களையும் பெற்றுக் கொள்ளத் தான் பட்ட சிரமங்களையும் ஐயர் குறிப்பிட்டார். அது பற்றி சில வாசகக்குறிப்பு எழுது வதற்காகக் கவிதைகளை படித்தபோது அவை பற்றி எழுதவேண்டும் என்னும் நினைவழிந்துபோய், வாசிப்பதும் கண்மூடிச் சிந்திப்பதும், பிறகு வாசிப்பதும், பிரமைதட்டிப்போய் அமர்ந்து இருப்பதாக நாட்கள் கழிந்தன.

(தொடரும்)

# மணிப்பிரவாளம் போய் தங்கிலிஷ் வந்தது தமிழுக்கு

ரிஷி

உலகில் பயன்பாட்டில் உள்ள எல்லா மொழிகளும் வேறு மொழிச் சொற்களை உள்வாங்கி வளர்ச்சி கண்டவைதாம். இது இயல்பானது. மனித நாகரிகங்க ளும், பழக்க வழக்கங்களும் கூட ஏனையவற்றில் உள்ள சிறப்புகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெற்று செழுமை பெற்றவைதாம். ஆனால் மொழிகள் பிற அல்லது வெளிச் செல்வாக்குகளுக்கு முற்றிலும் அடிமைப்பட்டு தன் தனித்தன்மையையும் ஆளுமையையும் சிறப்பு இயல்புகளையும் இழந்து விடக்கூடாது என்பது முற்றிலும் வேறு விடயம். உலக நாகரிகங்களும், மதங்களும், மொழிகளும் இதற்காகத்தான் போராடவேண்டுமே தவிர, வெளியில் இருந்துவரும் எதையுமே ஏற்கக்கூடாது என்ற கொள்கை சரியானதும் யதார்த்தமானதும் அல்ல, ஏனெனில் தேவையானபோது அவசியமானவற்றை உள்வாங்கிக் கொள்ளாத எதுவுமே கால மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கப்போவதில்லை.

உதாரணம், மாற்றங்களை விரும்பாத மாயன் நாகரிகம். எதுவுமே வெளியே சென்றுவிடக்கூடாது என்பதற்காக சாதிக்குள்ளேயே திருமணம் செய்து கொள்வதை விடாப்பிடியாக பின்பற்றிவரும் சமூகங்களின் எதிர்காலமும் இப்படித்தான் கேள்விக்குறியாகிவிடும்.

தமிழ் மொழியை எடுத்துக்கொண்டால் இங்கும், தனித்தமிழ் என்ற ஒரு வாதம் உள்ளது. தமிழில் கலந்திருக்கும் சமஸ்கிருத, பிராகிருத சொற்கள் அனைத்தையும் அகற்றி தூய தமிழ் சொற்களை மட்டுமே பயன்படுத்தவேண்டும் என்ற இயக்கம் பல தசாப்தங்களுக்கு முன்னரேயே தோற்றுவிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி, தமிழில் புகுந்துள்ள ஹிந்தி, கன்னட, ஆங்கில, மலையாள, ஆந்திர மொழிச் சொற்களையும் அகற்றிவிட வேண்டும் என்றும் சொல்கிறார்கள்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான தமிழ் இதழ்களை எடுத்துப் பார்த்தால் அப்போது பயன்படுத்தப்பட்ட தமிழ் வேறு மாதிரி. வசனங்கள் விளங்கிக் கொள்ள முடியாதமாதிரி அமைந்திருப்பதை அவதானிக்கலாம்.

'ரஸ்தா பாழாகிக் கிடப்பதை சர்கார் நோக்குவதில்லையோ? தாங்கள் ஷேமமா இருந்தா போதும்னு நினைக்கிறா... நோக்கு விளங்குதோ?' என்றிருப்பதை உங்களில் எத்தனைபேர் புரிந்துகொள்வீர்கள்?

'தெரு குண்டும் குழியுமாகக் கிடப்பதை அரசு கண்டுகொள்வதில்லையோ? தங்கள் வசதி பற்றி மட்டுமே நினைக்கிறார்கள் என்பது உங்களுக்கு விளங்குகிறதா?" என்பதே இதன் சரியான 'தமிழ்' மொழி பெயர்ப்பு.

அது, வடமொழி ஆதிக்கம் தமிழில் கொடிகட்டிப் பறந்தகாலம். செல்வாக்கு பெற்றிருந்த தமிழக பிராமண சமூகம் தமிழ் மொழி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டிருக்கவில்லை. தமிழ் மொழி சிதைந்து போயிருக்கக்கூடிய ஒரு ஆபத்து அப்போது கணப்பட்டபோதுதான் பெரியார் பிரவேசம் செய்தார். அவரது வெறி கொண்ட பிராமண மற்றும் மத எதிர்ப்பு வாதம் எப்படியிருந்தாலும் அது தமிழ்மொழியில் ஒரு பிரளய மாற்றத்தை ஏற்படுத்தியது உண்மை. தமிழில் காணப்பட்ட மணிப்பிரவாள நடை ஒழித்துக் கட்டப்பட்டு தூய தமிழ், இலகு தமிழ், நடைமுறைத்தமிழ் பிரயோகத்துக்கு வந்ததோடு, மக்கள் மத்தியில் மொழி உணர்வும் ஏற்படுத்தப்பட்டது.

ஈ.வே.ரா. பெரியாரை இன்று அனைத்துத் தரப்பினரும் போற்றுகிறா-ர்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் அனைவரும் மத எதிர்ப்பையும் கடவுள் மறுப்பையும் ஏற்கிறார்கள் என்பதல்ல. அவர் ஆற்றிய மொழி மற்றும் சமூக சீர்த்திருத்தத் தொண்டுகளே அவர் புகழுக்குக் காரணம்.

ஆனால் பாருங்கள், தமிழ் மொழிக்கு எப்போதும் ஒரு ஊன்றுகோல் தேவை-யோ என்னவோ, சமஸ்கிருதத்தை தமிழில் இருந்து வெற்றிகரமாக அகற்றிய பின்னர் அந்த இடத்தில் ஆங்கிலம் வந்து வசதியாக அமர்ந்து கொண்டதை நாம் பார்க்க முடிகிறது. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ரஸ்தா, சர்க்கார் என எழுதியபோது அது எப்படிப் புரியாத தமிழாக இருந்ததோ அதேபோல இன்றும் பேசப்படுகிறது.

'மெட்ச் ்பிக்சிஸ் நடந்தப்போ,' ஐ நோ வெரி வெல், டெண்டுல்கார் வோஸ் நிச்சயமா நொட் தேர்... உன்னோட அலிகேஷன் ரொம்பவும் தவறுண்ணு நா ்பீல் பண்றேன்' என்பது போல தமிழகத்தில் இன்று பரவலாகப் பலர் பேசுகிறார்கள், ஊடகங்களில் எழுதுகிறா-ர்கள். இந்த 'தங்லிஷ்' தமிழகத்தில் இயல்பாகப் போய்விட்டிருக்கிறது. ஆங்கில அறிவு இல்லாமல் தமிழை விளங்கிக் கொள்ள முடியாது என்ற நிலை, மணிப்பிரவாள காலத்தை விட மோசமானது.

இது ஒருபுறமிருக்க, தமிழ் ஆர்வல-ர்கள் மொழியை நன்றாகவே வளர்த்திருக்கிறார்கள். செம்மைப்படுத்தி இருக்கிறார்கள். இலகுபடுத்தி இருக்கிறா-ர்கள் என்பதும் பொருத்தமான, பயன்பாட்டுக்கு சுலபமான புதிய பல தமிழ்ச் சொற்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள் என்பதும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியதே.

ஒரு பக்கம் தமிழ் மொழியை எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய மொழியாக வளர்த்தெடுக்கும் பணி நிகழ்ந்து கொண்டிருக்கிறது. சிறு சஞ்சிகைகள் மற்றும் தலித் இலக்கிய முயற்சிகள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தனித்தமிழ் பாவனைக்கும் உந்து சக்தியாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மற்ற பக்கத்தில் 'தங்லிஷ்' வளர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. வணிக ஊடகங்களும் திரைப்படங்களும் ஆங்கிலத் தமிழை இளைஞர் மத்தியில் வெற்றிகரமாகக் கொண்டு சேர்த்து வருகின்றன. இது எங்கே போய் முடியப்போகிறது?






கடந்த ஜனவரியிலும் பெப்ரவரியிலும் சென்னையிலும் புதுடில்லியிலும் நடைபெற்ற புத்தகக் கண்காட்சிகளில் கலந்துகொண்டிருந்தார் பூபாலசிங்கம் ஸ்ரீதர்சிங். டில்லி சர்வதேச புத்தகக் கண்காட்சியில் தான் சந்தித்த பிரமுகர்களுடனும் சென்னை காட்சி அரங்கொன்றில் வாலியுடனும் ஸ்ரீதர்சிங்.

## வானவில் டொட் கொம்


அனூப்

# மென்பொருள் நிறுவும்போது Restart ஏன்?

ஏதேனும் புதிய மென்பொருள் ஒன்றை கணினியில் நிறுவும் போது விண்டோஸ் இயங்கு தளம் முதலில் அல்லது இறுதியில் கணினியை ரீஸ்டாட் செய்யும் படி சொல்லும் அல்லது இயங்கிக் கொண்டிருக்கும் அனைத்து புரோகிராம்களையும் நிறுத்தி விடுங்கள் என்ற செய்தியைக் காண்பிக்கும். மென்பொருள் நிறுவும் போது விண்டோஸ் இப்படிச் சொல்லி எங்களை எரிச்சலூட்டுவது ஏன்?

எப்போதெல்லாம் ரீஸ்டாட் செய்ய வேண்டி வரும்?

ஒரு மென்பொருளை நிறுவுவதற்குப் பயன்படும் இன்ஸ்டோலர் எனப்படும் செய்நிரல் முறையாக எழுதப்படாமையினால் அல்லது விண்டோஸ் இயங்கு தளத்துடன் அது மிக ஆழமாக ஒன்றிணைக்கப் படுமுகமாக தேவையான சிஸ்டம் பைல்களைப் பிரதி செய்து கொள்வதற்கு வசதியாக ரீஸ்டாட் செய்யும் படி கேட்கிறது.




விண்டோஸ் இயங்கு தளம் DLL (dynamic link library) எனும் பைல்களை அடிக்கடி பயன்படுத்துவதோடு அவற்றை ஒன்றிற்கு மேற்பட்ட பயன்பாட்டு மென்பொருள்களிடையே பகிர்ந்து கொள்கிறது. புதிதாக ஒரு மென்பொருளை நிறுவும் போது விண்டோஸ் தற்போது பயன்பாட்டிலுல்ள DLL பைல்களை விடுவிக்க வேண்டி வருவதனால் ரீஸ்டாட் செய்ய வேண்டி வரும்.

தற்போது உருவாக்கப்படும் மென்பொருள்கள் பொதுவாக தேவையான அனைத்து DLL பைல்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றன. அவை விண்டோஸிலுள்ள DLL பைல்களைப் பிரதியீடு செய்யாது. எனினும் அந்த எப்லிகேசன்களை நிறுவும். இன்ஸ்டோலர் கணினியை ரீஸ்டாட் செய்ய வைத்து விடுகிறது.

மேலும் நீங்கள் நிறுவப்போகும் மென்பொருள் தற்போது வேறு எப்லிகேசன்களால் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பைல்களின் புதிய பதிப்புகளை நிறுவ வேண்டியுள்ளதெனின் அந்த எப்லிகேசனை நிறுத்தச் சொல்லும் அல்லது ரீஸ்டாட் செய்யச் சொல்லும்.

விண்டோஸ் அப்டேட் பைல்கள் தரவிறக்கம் செய்யப்பட்டு நிறுவப்படாத நிலையில் புதிதாக ஒரு அப்லிகேசனை நிறுவ முயலும் போதும் அது தடை பட்டு கணினியை ரீஸ்டாட் செய்யும் படி சொல்லும்.

நீங்கள் நிறுவ முயலும் எப்லிகேசன் பிரிதொரு அப்லிக்கேசனிலும் தனது கட்டளைத் தொகுதியொன்றை நிறுவ வேண்டிய தேவையிருந்தாலும் அது குறித்த அப்லிகேசனை மூடும் படி அல்லது ரீஸ்டாட் செய்யும் படி வேண்டி நிற்கும்.

---

சில இணைய சேவை வழங்கும் தளங்களில் ஏதேனும் கணக்கொன்றை உருவாக்கும் போது குறிப்பாக இலவச மின்னஞ்சல் சேவை வழங்கும் நிறுவன இணைய தளங்கள ஊடாக மின்னஞ்சல் முகவரியொன்றை உருவாக்கும் போது எம்மைப் பற்றிய விவரங்ளைக் கேட்டு விட்டு ஓரிடத்தில் அர்தமற்ற ஓர் ஆங்கிலச் சொலலை இமேஜ் வடிவில் (படமாக) தோன்றச் செய்வார்கள். அந்தச் சொல்லில் காணப்படும் எழுத்துக்களை அவதானித்து அதன் கீழுள்ள பெடியில் டைப் செய்ய வேண்டும். இதனை நீங்கள் மிகச் சரியாக டைப் செய்தால் மாத்திரமே உங்களுக்கென கணக்கொன்றை ஆரம்பிக்கும். இதனையே Word Verification (சொல் சரிபார்ப்பு) எனப்படுகிறது.

எதற்கு இந்த சொல் சரிபார்ப்பு? சில இலவச மின்னஞ்சல் சேவை வழங்கும் நிறுவனங்கள் மேற்கொள்ளும் ஒரு பாதுகாப்பு நடவடிக்கையே இது. இந்தப் பாதுகாப்பு முன்னேற்பாடு மட்டும் இல்லையானால் கணினி வித்தகர்கள் மெயில் சேர்வரே திணறிப் போகும். அளவுக்கு தானியங்கி முறையில் ஒரே மணித்தியாலத்தில் ஆயிரக் கணக்கான மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்குமாறு அதற்கென விசேட செய் நிரல்களை உருவாக்கி விடுவார்கள்.

மேலும் ஸ்பாம் எனும் வேண்டாத குப்பை அஞ்சல்களையும் அனுப்ப அவர்களுக்கு வாய்ப்பாக அமைந்து விடும். இலவசமாக வழங்கும் சேவையை துஷ்பிரயோகஞ் செய்வதைத் தடுக்கவே இந்த பாதுகாப்பு ஒழுங்கு.

ஒரு மனிதரால் மட்டுமே இமேஜ் போமட்டிலுள்ள எழுத்துக்களைக் கண்டறிந்து டைப் செய்ய முடியும் என்பதனாலேயே அந்த எழுத்துக்களை டெக்ஸ்ட் போமட்டில் அல்லாமல் இமேஜ் போமட்டில் தோன்றச் செய்கிறார்கள்.

---

## இந்த மாத டவுன்லோட்

### வலைப் பதிவிலிருந்து அழித்த பைலை மீளப் பெறலாமா?




உங்கள் இணைய தளத்தில் அல்லது ப்லொக்கர், வர்ட்ப்ரெஸ் போன்ற வலைப் பதிவிடங்களில் நீங்கள் இட்ட ஒரு பதிவை தவறுதலாக அழித்து விட்டீர்களா? கவலை வேண்டாம். அவ்வாறு நீங்கள அழித்த இணைய பக்கங்களை மறுபடியும் மீட்டெடுப்பதற்கான வழிகள் பல உள்ளன. அவற்றில் ஒன்றை இன்று உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். முதலில் www.archive.org எனும் இணைய தளத்திற்குச் செல்லுங்கள். அங்கு Wayback Machine எனும் பகுதியில் உங்கள் இணைய தளத்தின் பெயரை டைப் செய்து "Take Me Back" பட்டனில் க்ளிக் செய்யுங்கள். அப்போது கடந்த சில வருடங்களுக்குரிய ஒரு நாட்காட்டி காண்பிக்கப்படும். இந்த நாட்காட்டியில் சில திகதிகள் வட்டமிடப்பட்டிருக்கும். நீங்கள் உங்கள் வலைப் பதிவைத் தவறுதலாக அழித்த திகதிக்கு முந்திய ஒரு திகதியில் க்ளிக் செய்து அழித்த அப்பக்கத்தை மீட்கலாம். இந்த Wayback Machine உலகலாவிய வலைத்தளத்திலுள்ள (www) அனைத்து இணைய தளங்களையும் அவ்வப்போது தனது காப்பகத்தில் சேமித்து விடுகிறது. எனினும் உங்கள் வலைத் தளத்தை அதுவரை தனது தரவுத் தளத்தில் பட்டியலிடாமலிருந்தால் அதற்கு நான் பொறுப்பல்ல. அது உங்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது.

---




### http://www வேண்டாமே...

இணைய தள முகவரிகளை முகவரிப் பட்டையில் டைப் செய்யும் போது http:// www. என்பவற்றை டைப் செய்யாமல் தவிர்க்கலாம். உதாரணமாக http://www.vaanavil.com எனும் இணைய தளத்திற்குச் செல்ல vaanavil.com என டைப் செய்து Enter விசையை அழுத்தினாலே போதுமானது. உங்கள் பணியை மேலும் விரைவாக்க நீங்கள் செல்ல வேண்டியது ஒரு .com எனும் டொமேன் பெயர் கொண்ட தளமானால் vaanavil என டைப் செய்து Ctrl + Enter விசைகளை ஒரே நேரத்தில் அழுத்துங்கள்.

### டெஸ்க் டொப் ஐக்கனைப் பெரிதாக்க..

விண்டோஸ் இயங்கு தளத்தில் விஸ்டாவிற்குப் பிந்திய பதிப்புக்களில் கன்ட்ரோல் விசையை அழுத்திக் கொண்டு உங்கள் மவுஸின் நடுவிலுள்ள ஸ்க்ரோல் பட்டனை மேலும் கீழும் சுழற்றி பாருங்கள். மேலே நகர்த்தும் போது டெஸ்க் டொப்பிலுள்ள ஐக்கன்கள் அனைத்தும் பெரிதாவதையும் கீழே நகர்த்தும் போது சிறிதாவதையும் காணலாம்.

### பைல் எங்கே இருக்கிறது?

சில வேளைகளில் நாம் திறந்து பணியாற்றும் பைல் எந்த போல்டரியல் இருக்கிறது என்று தெரியாமல் திண்டாடுவோம். டைட்டில் பாரில் அந்த பைலின் பெயர் மட்டுமே காட்டப்படும். பைல் இருக்கும் இடம் எது? அது இருக்கும் போல்டரின் பெயர் என்ன என்று தெரியாமல் இருப்போம். அந்த பைல் இருக்கும் இடத்தின் முழு விபரமும் டைட்டில் பாரில் தெரிந்தால் எவ் வளவு வசதியாக இருக்கும் என்று எண்ணுகிறீர்களா? அனைத்து தகவல்களையும் டைட்டில் பாரில் இருக்கும்படியும் செய்யலாம்.

அதற்கு விண்டோஸ் எக்ஸ்ப்லோரரைத் திறந்து கொள்ளுங்கள். அதில் Tools மெனுவில் அதில் உள்ள Folder options தெரிவு செய்யுங்கள். பின்பு அதில் உள்ள View டேபைக் கிளிக் செய்து Display full path in title bar என்ற என்பதற்கு இடப்புறம் உள்ள கட்டத்தைத் தெரிவு செய்யுங்கள். இனி உங்கள் பைலின் இருப்பிடம் உங்கள் டைட்டில் பாரில் காட்டப்படும்.

### லின்கில் க்ளிக் செய்யும் போது...

ஒரு இணைய தள பக்கத்தில் உள்ள லிங்கைக் க்ளிக் செய்யும் போது அதே விண்டோவில் தான் புதிய பக்கமும் வரும். பிறகு மறுபடியும் Back பட்டனில் க்ளிக் செய்து முன்னர் பார்த்துக் கொண்டிருந்த பக்கத்திற்கு வர வேண்டியிருக்கும். இதனைத் தவிர்ப்பதற்கு ஒரு லிங்கின் மீது க்ளிக் செய்யாமல் ரைட் க்ளிக் செய்து வரும் மெனுவில் Open link in new window அல்லது Open link in new tab என்பவறைத் தெரிவு செய்து கொள்ளலாம்.




FaceBook, Twitter, Blog பிரியர்களே!
இப்போது வண்ணவானவில் Facebook, Twitter, Blog உடன் நீங்களும் சுவாரஷ்யமான விடயங்களை Share, Tag பண்ணலாம். சிறந்தவை இங்கே பிரசுரமாகும்.

வண்ண வானவில் விலாசங்கள்:

facebook :- vannavaanavil@facebook.com
Twitter :- vannavaanavil@twitter.com
Blog :- vannavaanavil@blogspot.com





இன்று முதல் தகவல் @ facebook

அவன் நெட்டிலே உட்கார்ந்திருக்கான். இப்போ நீ எவ்வளவு கூப்பிட்டாலும் காதிலே விழாது... பேசாம ஃபேஸ் புக்ல போயி அவனுக்கு ஒரு மெசேஜ் அனுப்பு-சாப்பிட எழுந்து வா என்னு.




நண்பன் அசோக்@ facebook




Vithya Sharma@ facebook




அம்மாவுக்கு என்று தனியாக கவிதை வேண்டாம்.... அன்பாக பழகிப் பார் அம்மாவே கவிதை தான்.




ஏதுமில்லாத
எல்லை
தெய்வங்கள்
சுதந்திரமாக
வெட்டவெளியில்.
காசுள்ள தெய்வம்
பூட்டிய
அறைக்குள்!

Jeganjeeva
@Twitter.com

முட்கள் இல்லைதான் ஆனாலும் இதயத்தைக் குத்தும் மீன்கள் உன் விழிகள்

Babypriya@Twitter.com

பணமும் நிறமுமாய் தேர்ந்தெடுத்துவிட்டு, கல்யாணமானபின் குணத்தை கணக்கிடுகிறார்கள்

நறுமுகை@Twitter.com

பசங்க பொண்ணுங்களத் திட்டினா அது ஆணாதிக்கம், அவங்க கழுத, எறுமை, மாடுன்னா அது அன்பாம்...என்னா ஒரு டக்கு!

மதுரக்காரன்@Twitter.com

பழகுனவங்க பார்க்காம போனா ஒன்னு அவங்களுக்கு பணம் வந்திருக்கணும் இல்ல நமக்கு பணம் போயிருக்கணும்.

மோனம்@Twitter.com

வேலிகளின்
காவலுடன்
பயிர்களை
மேய்கின்றன
மாடுகள்...

கவிஞர்அஸ்மின்
@facebook.com




நமக்கு வர்ற
WIFE வெள்ளையா
இருக்காளாங்குறது
முக்கியம் இல்ல மச்சி

அவ தொல்லையா
இருக்கக் கூடாது அது
தான் முக்கியம்




Komalavani vani@ facebook




S.T.Saanth@ facebook



upperstall@ facebook

தமிழ்த் திரையுலகின் மூவேந்தர்

தொகுப்பு:
மணி ஸ்ரீ



வானவில் மங்கை

# வெப்பத்தை சமாளிப்பது எப்படி?

காலை வெயில் உடலுக்கு விட்டமின் D சத்தை பெற்றுத் தருகிறது. அதனால்தான் குழந்தைகளை எண்ணெய் தடவி காலை வெயிலில் காட்டுவார்கள். காரணம் விட்டமின் Dயை உணவுகளில் பெறுவது கடினம். ஆனால் அதே வெயிலில் மதியவேளை போகும்போது அது உடலில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் வெளியில் போகும்போது குடை அல்லது தொப்பி அணிந்து செல்வதால் தலைமுடி பாதிக்கப்படாது. சருமத்திற்கு சன் கிரீம் பூசிச்செல்வதால் வெயிலினால் ஏற்படும் கருமை, சருமபாதிப்புக்களைத் தவிர்க்கலாம்.

கண் எரிச்சலைத் தவிர்ப்பதற்கு கூலிங்கிளாஸ் அணியலாம். தாகம் ஏற்படும்போதெல்லாம் கூச்சப்படாமல் நீர் அருந்துங்கள். கூல்டிரிங்ஸ் அருந்துவதை விட தண்ணீர் அருந்துவதே சிறந்தது. வெளியில் போகும் போது தண்ணீர் போத்தலையும் கையோடு எடுத்து செல்லுங்கள். மென்பானங்கள் அல்ல, தண்ணீர் மட்டுமே, தாகத்தை அடக்கும். நிறைய மினரல்களும் இதில் உண்டு. வெயில் காலத்தில் மெல்லிய பருத்தி ஆடைகளை அணிவதால் உடலுக்கு இதமாக இருக்கும். இவையெல்லாம் வெளியில் போகும்போது செய்யவேண்டியவை. வீடு திரும்பியதும் அதிக வியர்வை இருக்குமானால் ஒரு நாளைக்கு இருமுறை குளிக்கலாம். தவறில்லை. குளிக்கும்போது சவர்க்காரத்தைத் தவிர்த்து கடலைமாவுடன் தயிர்கலந்து பூசி குளிக்கவும். இது ஆரோக்கியமான பழக்கம். அல்லது இயற்கை ஸ்கரப்பான ரோஜா இதழ், தேசிக்காய் தோல், கடலைப்பருப்பு, மஞ்சள் என்பனவற்றை ஒரு வாரம் வெயிலில் வைத்தெடுத்து மாவாக்கி பூசிக்குளிக்கலாம். கண்களுக்கு வெள்ளரிக்காய் அல்லது கிழங்கை வெட்டி வைத்து கொள்ளலாம். இது கண்களுக்கு நல்ல குளிர்ச்சியை தந்து சோர்வை விரட்டும். பானங்களையோ உணவையோ சூடாக அருந்துவதைத் தவிர்த்துவிடுங்கள். சுரைக்காய் போன்ற நீர் அதிகமாக உள்ள காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். இதனால் நீர்கடுப்பு நோய்கள் வராமல் பாதுகாக்கலாம். சருமத்தில் ஏற்படும் வியர்குரு, அரிப்பு போன்றவற்றை தவிர்ப்பதற்கு தயிரை பூசி விட்டு சிறிது நேரம் வைத்து பிறகு கழுவலாம். உடலில் சூடு அதிகமாவதால் குளிர்பானங்களை தவிர்த்து மோர், பழச்சாறு செய்து குடிக்கலாம். குடிக்கும் தண்ணீரில் வெட்டிவேரை வாங்கி சுத்தப்படுத்தி போட்டு குடிக்க, உடல் குளிர்ச்சியடையும். அதிலும் மண்பானையில் வைத்து குடித்தால் தண்ணீரும் ஜில்லென்று இருக்கும்.



### டிப்ஸ்

*மண் பானையை வாங்கியதும் உட்புறம் எண்ணெய் தடவி அடுப்பில் வைத்து சூடுபடுத்திவிட்டு பின் தேய்த்து கழிவிவிட்டால் மண் வாசனை வராது.*

~

*ஒரு வாரத்திற்கு வேண்டிய மரக்கறிகளை வாங்கியதும் ஒவ்வொரு மரக்கறியில் இருந்தும் இரண்டு துண்டுகளை எடுத்து வைத்துக் கொண்டு வார இறுதியில் எல்லாவற்றையும் சேர்த்து சாம்பாரோ கூட்டு மரக்கறி குழம்போ செய்யலாம்.*

~

*கிராம்பு, ஏலம், சீரகம், பெருஞ்சீரகம், ஓமம் இவற்றை வாயில் போட்டு கொஞ்சம் கொஞ்சமாக மென்று சாப்பிட சளித் தொல்லை நீங்கும்.*

~

*வியர்க்குருவால் ஏற்படும் அரிப்பைப் போக்க உடல் முழுவதும் தயிரை நன்கு தடவி பதினைந்து நிமிடம் கழித்து குளிக்க அரிப்பு நீங்கிவிடும்.*

மின்சார கட்டண உயர்வு

## அம்மிக்கும் அரவைக்கல்லுக்கும் மாறுவோமா?





தினசரி வெளியில் சென்று வருபவர்கள் ஒரு விஷயத்தைக் கவனித்திருப்பார்கள். சராசரியாக இன்றைய ஆண்கள் நல்ல உடல் வளர்ச்சியுடன் காணப்படுவதையும் பெண்கள் இதேபோல உயரம் பருமன் என்ற ரீதியில் வளர்ந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. இது எழுபதுக-ளில் ஆரம்பித்த பொருளாதார வளர்ச்சியின் காரணமாகவும் இருக்கலாம்.

இந்த ஆண்கள் நல்ல உடற்கட்டுடன்தான் காணப்படுகின்றனர். பெரிய தொந்தி, தொள தொள சதை வளர்ச்சி என்பன இளைஞர் மத்தியில் குறைவு. ஆனால் பெண்களை எடுத்துக்கொண்டால் பதின்ம பருவத்தைத் தாண்டிய பெண்களில் மிகையானோர் அதிக சதை வளர்ச்சி, பெருத்த இடுப்பு, தொந்தி எனக் காணப்படுகின்றனர். திருமணமான பெண்களில் மிகப் பெரும்பான்மையானோர் குண்டுப் பெண்களாகவே காட்சி அளிக்கின்றார்கள். இந்த ஒப்பீடு கிராமபுறங்களில் வாழும் பெண்களுக்குப் பொருந்தாது என்றாலும் அங்கேயும் குண்டுப் பெண்களின் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்திருக்கிறது.

நமது பெண்களின் உடற்பயிற்சி, பாடசாலை காலத்தோடு முடிந்து போகிறது. அதன் பின் அவர்கள் அழுங்காமல் குலுங்காமல் வாழ முடியுமா என்பதிலேயே குறியாக இருக்கிறார்கள். பிள்ளை பெற்றுக்கொண்ட பின்னர் உடல் குண்டாகி விடுகி றது. அது பற்றி அவர்களுக்கு கவலையும் இல்லை. திருமணமான ஒரு பெண், மெல்ல நடக்கும் குண்டுப் பெண்ணாக இருப்பதே பொருத்தமானது என்றே சமூகம் எதிர்பார்க்கிறது என்று நினைக்கிறார்களோ தெரியவில்லை.

இவர்களை கேட்டுப் பார்த்தால், நாங்கள் என்ன சும்மா படுத்துக்கொண்டா இருக்கிறோம்? காலையில் எழுந்து அரக்கப்பறக்க ஆயத்தமாகி அலுவலகம் செல்கிறோம். வீடு வந்ததும் திரும்பவும் வீட்டு வேலை களில் மூழ்கி விடுகிறோம். ஏதோ இரவில் கொஞ்சம் டி.வி பார்ப்பதுதான் பொழுதுபோக்கு என்று பதில் சொல்கிறார்கள்.

இல்லத்தரசிகளோ, காலையில் எழுந்ததில் இருந்து படுக்கைக்கு செல்லும்வரை ஓய்வு ஒழிச்சல் இல்லாத வேலை எங்களுக்கு. செய்பவர்களுக்குத்தான் தெரியும் இதன் கஷ்டம் என்று பொரிந்து தள்ளுகிறார்கள்.

இரு பிரிவினர் சொல்வது உண்மைதான். இவர்கள் சோம்பேறிகள் அல்ல. ஆனால் இவர்கள் குறிப்பிடும் வேலைகளில் எத்தனை உடற்பயிற்சியுடன் தொடர்புடையது? கிராமத்துப் பெண்களுக்கு சுள்ளி பொறுக்குதல், விறகு பிளத்தல், காணி யில் வேலை செய்வது, நடப்பது என்று உடற்பயிற்சியுடன் தொடர்புடைய பல வேலைகளை தினசரி செய்கிறார்கள். பட்டர், சீஸ், ஐஸ்கிறீம், துரித உணவுகள் சாப்பிடுவதும் குறைவு.

நகர்புர பெண்கள் பிஸியாக இருந்தாலும் உடல் உழைப்பு குறைவு. கொழுப்பு சார்ந்த உணவுகள் உட்கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகம். எனவே, இந்த மின்சார கட்டண அதிகரிப்பை ஏன் நகர்ப்புற பெண்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது? முன்பு வீடுகளில் அரவைக்கல், அம்மி, உரல் என்பன பயன்பாட்டில் இருந்தன. இவை நல்ல உடற்பயிற்சி சாதனங்களும் கூட. காலையில் அல்லது மாலையில் அல்லது முடிந்த வேளைகளில் இவர்கள் நடை பயிற்சி செய்யலாம். இதற்கு மேலாக, ஒதுக்கி வைத்த உரல், அரவைக்கல், அம்மி போன்றவற்றை இவர்கள் பயன்படுத்த ஆரம்பித்தால் மின்பயன்பாட்டைக் குறைத்த மாதிரியும் இருக்கும். உடற்பயிற்சி செய்த மாதிரியும் இருக்கும்.

குண்டான தோற்றம் கௌரவமானது என்ற நினைப்பே தவறானது. பெண்கள் மத்தியில உயர் குருதி அழுத்தம், சர்க்கரை நோய், கொலஸ்ட்ரோல் மற்றும் மூட்டு வருத்தம் என்பன அதிகரித்து காணப்படுவதை இங்கே பெண்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். உடற்பயிற்சியும் கட்டுப்பாடான உணவு பழக்கமும் வைத்திய செலவுகளை பெருமளவில் குறைக்கும்.

சோம்பல் காரணமாக ஏன் உடலை கெடுத்துக் கொண்டு மருத்துவர்களையும் மருந்து கம்பனிகளையும் கொழுக்க வைக்கவேண்டும்?

சுமைத்துப் பாருங்கள்

## நூடில்ஸ் பிரியாணி



### தேவையானவை

| | |
|---|---|
| நூடில்ஸ் | - 1 கப் |
| எலும்பில்லாத சிக்கன் | - 100g |
| வெங்காயம் விழுது | - 1/4 கப் |
| தக்காளி விழுது | - 1/4 கப் |
| பச்சை மிளகாய் | - 2 |
| கொத்தமல்லி | - 1 தேக்கரண்டி |
| மிளகாய்த்தூள் | - 1/2 தேக்கரண்டி |
| கரம் மசாலா | - 1/2 தேக்கரண்டி |
| இஞ்சி பூடு விழுது | - 3 தேக்கரண்டி |
| தயிர் | - 4 தேக்கரண்டி |
| மஞ்சள் | - 1/4 தேக்கரண்டி |
| உப்பு | - தேவையான அளவு |
| எண்ணெய் | - தேவையான அளவு |

### செய்முறை

கொதிக்கும் நீரில் நூடில்ஸ்சை சேர்த்து பாதி வெந்ததும் நீரை வடிகட்டி குளிர்ந்த நீரில் கழுவி சிறிது எண்ணெய் விட்டு கலந்து எடுத்துக்கொள்ளுங்கள். வேறு ஒரு பாத்திரத்தில் எண்ணெய் விட்டு பச்சை மிளகாயை வதக்கி பின் வெங்காயம், இஞ்சிபூடு விழுது சேர்த்து வதங்கியதும் தக்காளி, தயிர் சேர்த்து எண்ணெய் பிரிந்து வந்ததும் சிக்கனை சேர்க்கவும். பின்னர் உப்பு அளவாக சேர்த்து வேகவிடவும். நீர் வற்றியதும் நூடில்ஸை போட்டு பிரட்டவும்.

விஞ்ஞான விளையாட்டு

# உள்ளங்கையில் ஓட்டை



என்ன டிராகுலா கதை மாதிரி நினைத்து விட்டீர்களா? அதுதான் இல்லை. இந்த ஓட்டையை யார் கையிலும் போடலாம். ஆனால், ரத்தம் வராது. சதை பிய்ந்து போகாது. துளையிடும் இயந்திரக் கருவியும் தேவைப்படாது. ஆனால் கையில் ரேகைகள் மறைந்து போகும். எனினும் இந்த ஓட்டை உங்கள் கண்ணுக்கு மட்டுமே தெரியும். மற்றவர் கண்ணுக்குப் புலப்படாது.

என்னடா இது விபரீதமாக இருக்கிறதே என்கிறீர்களா? இந்த பரிசோதனைக்கு ஒரு அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். அதனை ஒரு தொலைக்காட்டி (பைனாகுலர்) மாதிரி முதலில் சுருட்டிக் கொள்ளுங்கள். வலது கண்களை வெறுமனே இமை சுருக்கி மூடினாலே போதும். அல்லது கையால் வலது கண்ணைப் பொத்திக் கொள்ளுங்கள். இடது கண்ணால் அந்தக் காகிதக் குழாய் வழியே தூரத்துப் பொருள் ஒன்றைப் பாருங்கள்.

இப்போது 'அண்டக்கா கசம், அபுக்கா குசும், திறந்திடு சீசே; வலது கண்ணைத் திறவுங்கள். வலது உள்ளங்கையை காகிதக் குழாய்க்கு அருகே உங்கள் முகத்தைப் பார்த்தபடி விரித்துப் பாருங்கள். அட உள்ளங்கையில் ஓட்டையா? பயப்படாதீர்கள். இது வெறும் மாயத்தோற்றம்தான். கண்களில் இடம்மாறு தோற்றத்தின் விளைவு. என்ன, ஓட்டை வழியே நீங்கள் குறிபார்த்த தொலைத்தூர காட்சி தரிசனம் ஆகிறதா, சந்தோஷம்தானே? உள்ளங்கையில் தொலைக்காட்சி!

## நிறமுள்ள கோள்கள்

பச்சைக் கோள் எனப்படுவது
- யுரேனஸ்

சிவப்பு கோள் எனப்படுவது
- செவ்வாய்

நீலக்கோள் எனப்படுவது
- பூமி

மிகக் குளிர்ந்த கோள்
- நெப்டியூன்

மிக வெப்பமான கோள்
- வெள்ளி

- எல்.லோஜினி,
அக்கறைப்பற்று

## உலகப் படத்தை வரைந்த டொலமி


உலக வரை படத்தை முதல் முதலில் வரைந்தவர் கிரேக்க அறிஞர் டொலமி. இதை கி.பி.160ல் வரைந்தார். அப்போது அவருக்கு அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மற்றும் அண்டார்டக்டிகா ஆகிய கண்டங்கள் இருப்பதே தெரியாது.



பிறகு எப்படி உலக வரை படம் வரைந்தாரோ!


டொலமியைத் தவிர பிறரும் உலக வரை படத்தை வரையத் தொடங்கினார்கள். எதன் அடிப்படையில் தெரியுமா? தாங்கள் கேள்விப் பட்ட கதைகளின் அடிப்படையில்தான்! அதிலும் சில இடங்களில் என்ன இருக்கிறது என்று அவர்களுக்கே தெரியாமல் போனால், அந்த குறிப்பிட்ட இடங்களில் மட்டும் அரக்கர்கள், மேகங்கள் ஆகியவற்றின் படங்களை வரைந்து விடுவார்களாம்.

## கண்டுபிடியுங்கள்



ஒன்றிலிருந்து ஆரம்பித்து புள்ளிகளை இணைத்து உருவத்தைக் கண்டுபிடியுங்கள்

## ஓவியப் பயிற்சி



## பாலைவனத்து பூச்சிகள்



பாலைவனங்களில் அவ்வளவாக பூச்சிகள் கிடையாது என்று பலர் சொல்வதுண்டு. உண்மையில் மற்ற எல்லாப் பகுதிகளிலும் இருப்பது போலவே இங்கேயும் பூச்சிகளின் ஆட்சி கொடிகட்டிப் பறக்கிறது.

இங்குள்ள பூச்சிகள் சூழலுக்கு ஏற்ப பல தரவுகளைக் கொண்டுள்ளன. மண்ணுக்குள் புதைந்து கொள்வதிலும், குழி தோண்டி பதுங்கிக் கொள்வதிலும் இவை கைதேர்ந்தவை. மேலும் மிருதுவான மணல் பரப்பில் புதைந்தவாறே வேகமாக ஓடக்கூடிய திறமையும் கொண்டுள்ளன. பாலைவனத்தில் நிலவும் சுட்டெரிக்கும் 60 டிகிரி செல்சியஸ் வெப்பத்தையும் புறக்கணித்து வாழ்வதற்கு இவை பல டெக்னிக்குகளை வைத்திருக்கின்றன.


வெப்பம் மிகுந்த பகல் பொழுதுகளை மணலுக்குடியில் ஆழமான பகுதியிலேயே இவை கழித்து விடுகின்றன. மணலுக்கடியில் புதைந்து கிடக்கும் காய்ந்த இலைகளை சுடுமணலுக்கு ஏற்ப கேடயமாக பயன்படுத்திக்கொள்கின்றன. சமயத்தில் மணலுக்க அடியில் இருக்கும் காய்ந்த முள் குச்சிகள் மற்றும் பிற செடிகளின் தண்டுப்பகுதிக்குள் இவை துறை போட்டு வெப்பம் கடத்தாத ஒரு சூழலை உருவாக்கி சந்தோஷமாய் பாலைவன உயர் வெப்பத்தை உதாசீனப்படுத்தி வாழ்வதுண்டு. இருள் சூழ்ந்து வெப்பம் தணிந்தவுடன் இப்பூச்சிகள் எல்லாம் ஆவேசப்பசியோடு வெளிவந்து திரிவது சகஜம்.

எனவே, பாலைவனத்தில் அவ்வளவாக பூச்சிகள் இருப்பதில்லை என்று சொல்வோர் இரவு நேரத்தில் டோர்ச் லைட் வெளிச்சத்தோடு அங்கே சென்று பார்த்தால், ஆச்சரியத்தில் மூக்கில் விரல் வைக்க நேரிடும். அங்கே கோடிக்கணக்கான பூச்சிகள் குதூகலமாய்ப் பறந்து கொண்டிருக்கும்.

## Star Baby




## சொல் விளையாட்டு 30



### இடமிருந்து வலம்

1. சிலை(6)
4. இதில் 7 உண்டு (3)
6. குடித்துவிட்டு இப்படி தெரியாமல்தான் கார் ஓட்டுவார்கள் (4)
7. பட்டினி (2)
10. கடலில் மிதக்கும் (4)
11. சுவர்க்கோழி (3)
12. ஒரு நாடு (2)


### மேலிருந்து கீழ்

1. கண்கள் (4)
2. மக்கள் இங்கு கூட்டமாக வசிப்பார்கள் (4)
3. ராமாயணத்தை எழுதியவர் (4)
5. மத்திய மாகாணத்தின் தலைநகரம் (3)
8. உச்சி (4)
9. இந்தியாவின் தலைநகரம் (3)
10. பழம் (2)

சரியான விடை அனுப்பும் அறுவரின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சொல்விளையாட்டு 29ன் விடைகளும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்களும் 22ஆம் பக்கத்தில்...

| ஸ்டார் பேபி பகுதிக்கு உங்கள் குழந்தைகளின் படங்களையும் அனுப்பலாம். | முகவரி: STAR BABY, Editor, Vanna Vaanavil Editorial, Lake House Colombo - 10 |
|---|---|

## வழிகாட்டுங்கள்



நாய்க்குட்டிக்கு ரொம்பவும் பசியாம். அந்த எலும்பை எடுப்பதற்கு வழிதெரியாமல் தவிக்கும் நாய்க்குட்டிக்கு நீங்கள் கொஞ்சம் வழிகாட்டுவீர்களா?

# ஜன்னலுக்கு வெளியே...



இவர் தமிழ் திரையுலகில் பிரபல்ய நடிகர்

A. அதர்வா
B. சிம்பு
C. பிரபுதேவா
D. விமல்

சரியான விடையைக் கண்டுபிடித்தால் உங்கள் பெயர், முகவரியுடன் 0778021501 என்ற தொலைபேசி எண்ணுக்கு டைப் செய்து உடனே அனுப்பி வையுங்கள்

எல்லோருடைய வாழ்க்கையும்
மெழுகுவர்த்தி போலதான்,
தூரத்தில் இருந்து
பார்த்தால் ஒளி
மட்டும் தெரியும்
அருகில் சென்று
பார்த்தால்
கண்ணீர்த்
துளியும்
தெரியும்!

- ரிபாஸ், ஹெம்மாத்தகமை

வாழும்போது மங்கி மாதிரி வாழணும்
சாகும் போது கும்கி மாதிரி சாகணும்

- எம். திவ்யா, கண்டி

ஒரு பெண்ணின் மனதில் நீ
மட்டும் இருந்தால் அவளுக்காக
உயிரையும் கொடு.
அப்பெண்ணின் மனதில் நீயும்
ஒருவனாக இருந்தால், அவள் போன் நம்பரை
எனக்குக் கொடு.

- தல. அச்சுவேலி

# SMS பூக்கள்

நீங்கள் படித்தது, கேட்டது, கற்பனையில் உருவானது என்று உங்களுக்குப் பிடித்த எஸ்.எம்.எஸ். கதை, கவிதை, ஜோக்குகளை இங்கே பதிவு செய்யலாம். இப்போதே உங்கள் செல்போன்களை எடுத்துப் பதிவு செய்து உங்கள் பெயர் முகவரியுடன் அனுப்புங்கள். செல்போன் வசதியற்றவர்கள் தபாலட்டையிலும் அனுப்பலாம். முகவரி 3ஆம் பக்கத்தில்.

0778021501

ஜஸ்ட்
பிரண்டுக்கும்,
பெஸ்ட்
பிரண்டுக்கும்
உள்ள டிபரண்ட் தெரியுமா?
நீங்க ஹொஸ்பிடல்ல
இருக்கும்போது உடம்பு எப்படி
இருக்குன்னு கேட்டா அவன்
ஜஸ்ட் பிரண்ட்!
மச்சான் நேர்ஸ் எப்படி
இருக்குன்னு கேட்டா
அவன்தான் பெஸ்ட் ஃப்ரண்ட்.

- பி.எஸ்,
பாண்டியன் குளம்

நட்புக்கு நேரம் ஒதுக்கு, அது
இன்பத்துக்கு வழி.
உழைப்பதற்கு நேரம் ஒதுக்கு, அது
உன் வெற்றிக்கு வழி.
but காதலுக்கு மட்டும் நேரம்
ஒதுக்காதே, அது நீ போகும்
கல்லறைக்கு வழி

- யமுனா, அன்கும்புர

ஒரு காலம் வரும், அந்தக் காலத்தில்
நாய் கூட நக்கலடிக்கும்...
கழுதையும் கல்யாணம் முடிக்கும்,
பூனையும் பூ பறிக்கும்
குரங்கும் குடைப்பிடிக்கும்
நரியும் நடனம் ஆடும்
எருமையும் SMS படிக்கும் என்று
சொன்னாங்க,
இப்போதுதான் அது உண்மை என்று தெரியுது!!!
பெரியவங்க சும்மாவா சொன்னாங்க

- புஸ்ரா, சாய்ந்தமருது

**லவ்வருக்கும், பொண்டாட்டிக்கும் உள்ள டிஃப்ரண்ட்:**

லவ்வர் காரமா இருப்பா
பொண்டாட்டி பாரமா இருப்பா

- ரிஷாத், திருகோணமலை

காரணமே இல்லாமல்
கண்ணீர் வருகிறதென்றால்
நீ யாரையோ அதிகமாக
நேசிக்கிறாய் என்று அர்த்தம்
உண்மையாக அல்ல உயிராக

- சுஜீவன், பாண்டிருப்பு

அழகான பெண்ணை அன்பாக
பார்ப்பது காதல் இல்லை. அன்பான
பெண்ணை அழகாக பார்ப்பது தான்
காதல்

- பஸ்ரா, நாவலப்பிட்டிய

1st year ராகிங்
2nd year போரிங்
அரட்டைக்கு கிளாஸ் ரூம்
பாட்டிக்கு கென்டீன்
மிமிக்கிரி, ஜோக், குட்டி சண்டை
இந்தியா, பாகிஸ்தான் போல
பக்கத்து கிளாஸ்
வெட்டி எஸ். எம். எஸ்
அடிக்கடி ஒசி டிரீட்
முடியாத டிரிப்
கைகொடுக்க பிரண்ட்ஷிப்
என்ஜோய்க்கு மொக்க
ஜோக்ஸ்
எக்ஸ்சம் முன்னாடி படிப்பு
எக்ஸ்சம் பின்னாடி ஆப்பு
இதுதான் ரியல் ஸ்கூல் லைப்

- டி. அபிராமி,
கோலாவில், அக்கறைப்பற்று

## லவ் ஸ்டோரி

பெண்: ஏன் என் பின்னால் சுத்தி சுத்தி வர்ரா?

பையன்: நீ ரொம்ப அழகா இருக்க அதனால உன்ன லவ் பண்றேன்!

பெண்: அப்படியா? ஓகே...

பெண்: என்னை விட என் ஃப்ரெண்ட் ரொம்ப அழகா இருப்பாள் உன் பின்னாடி நிக்கிறாள் பாரு!

(அவன் திரும்பி பார்த்தான் யாருமில்லை)

பையன்: பின்னாடி யாருமில்ல...

பெண்: நீ உண்மையிலேயே என்ன காதலிச்சிருந்தா திரும்பி பார்த்திருக்க மாட்ட!

இப்படித்தான் வாழ்கிறது பலரது காதல்

உங்கள சொல்லலல்ல...

- சிவதர்ஷனி, ஏறாவூர் - 05
மட்டக்களப்பு

**இங்க்லீஸ் மிஸ்:** நீ வாழ்க்கையில் என்னவாக ஆசைப்படுற?

**பையன்:** நான் MBBS படிச்சு பொலிஸ் ஆகி நல்ல சொவ்ட்வெயார் கொம்பனியில் லோயரா வொர்க் பண்ணி பெரிய பெரிய பில்டிங்கா கட்டப்போறேன்.

**மிஸ்:** எனக்கு ஒண்ணுமே புரியல...?

**பையன்:** கொய்யால, இத்தனை நாள் எங்களுக்கே ஒன்னுமே புரியாம எத்தனை நாள் கிளாஸ் எடுத்திருப்ப?

- ரபா ரஷித்தா, கல்முனை

உண்மை சொல்ல கண்கள்
பொய் சொல்ல ஆண்கள்
அதை நம்ப பெண்கள்
உண்மை சொன்ன
கண்களோ,
சிறை அறையில்...
பொய் சொன்ன ஆண்கள்
மணவறையில்...
அதை நம்பிய பெண்கள்
கல்லறையில்
கோபம் வேண்டாம்
மனதிற்கு பட்டதை சொன்னேன்

- கே. தீபமலர்

நம்முடைய வலி
மற்றவர்களுக்கு சிரிப்பா
இருக்கலாம்
but நம்முடைய சிரிப்பு
மற்றவர்களுக்கு
வலியாக இருக்க கூடாது...

- சனா, உடும்பிராய்

சிரிப்பை விட
கண்ணீருக்கு
மதிப்பு அதிகம்.
பிகோஸ் யாரு
வேண்டுமானாலும் சிரிக்கலாம்,
but உண்மையான அன்பு
இல்லாமல் யாருக்காகவும்
கண்ணீர் சிந்த முடியாது.

- W.L.O மேரி, கண்டி




## குரங்குக்கு யார் பொருத்தம்?

குரங்கு: எனக்கு இருக்கிற அழகுக்கும், அறிவுக்கும் அந்தஸ்த்திற்கும் என்ன கல்யாணம் பண்ணிக்கிற தகுதி யாருக்கு தான் இருக்கு!
**சிங்கம்:** சேர்! முயலுக்கு...
குரங்கு: நோ...!
புலி: சேர் அப்போ மானுக்கு
குரங்கு: நோ பா...! நோ சான்ஸ்...
யானை: சேர்! முயலுக்கு கூட இல்லியா?
குரங்கு: நோ! இல்லவே இல்ல...
புலி: இப்படி யாருக்குமே தகுதி இல்லன்னா கடைசியா உங்களுக்கு பொருத்தமான ஐட்டம் ஒண்ணே ஒண்ணுதான் பாக்கி சேர்.
குரங்கு: யார் அந்த புண்ணியவான்?
புலி: சேர்...! இந்த SMS படிச்சிட்டு இருக்கிறவங்க, உங்களுக்கு எல்லா விதத்திலயும் பொருத்தமா இருப்பாங்க...
குரங்கு: எனக்கு வெட்கமா இருக்கு, அவங்கள... அவங்கள எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு...

அவள் என்னைப்
பார்த்து சிரித்துக்
கொண்டே
இருக்கிறாள்
போட்டோவில்
மட்டும்!

- ஆர்.எஸ்

உன் பெற்றோரைப் பார்க்கிறேன்
அவர்கள் மனிதர்கள் தானே... நீ
மட்டும் எப்படி தேவதையானாய்?

- ஆர். எஸ்

நினைவில் தான்
உன்னுடன் பேச
முடியவில்லை!
கனவிலாவது பேசலாம்
என்றால்
உன் நினைவு என்னை
தூங்க விடுவதில்லையே!

- எம். அபி. பொரளை

2013 ஃபுல்லா கலக்குற
மாதிரி ஒரு மேட்டர்
சொல்லவா?
இந்தாங்க கரண்டி, நீங்க
இதை வச்சி 2013 ஃபுல்லா
கலக்கணும் ஓகே?

- நஸ்மின் பஸ்மிலா, புத்தளம்

நான்
நேசிப்பது
மலரையும்-
உன்
மனசையும்
மட்டும் தான். ஏன்
என்றால் மலருக்கு வாசம்
அதிகம்; உன் மனசுக்கு
பாசம் அதிகம்.

- எஸ்.அரவிந்த், நுனாவில்

எனக்குள் உன்
நினைவும்,
உனக்குள் என்
நினைவும்
இருக்கும் வரை
சத்தியமா
சொல்றேன்,
நீயும் உருப்படமாட்ட...
நானும் உருப்படமாட்டேன்...

- ரிபாஷா, தர்கா நகர்

வாழ்க்கையில்
எப்போ என்ன
வேண்டுமானாலும்
நடக்கலாம்
அதை எதிர்கொள்ள
BEER அடி
சொரி பி. ரெடி Be ready

- தினேஷ், கொழும்பு-03

## மலேசியாவில் தமிழர்கள்

க. இராஜசிங்கன்

# ஹிண்ட்ராப்
## ஒரு பின்னோக்கிய பார்வை



மலேசிய தேயிலைத் தோட்டம்

2007 ஆம் ஆண்டு புத்ராஜெயாவில பிரதமர் அலுவலகத்துக்கு 30 பதாதைகளை ஏந்தி சுமார் ஐயாயிரம் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஊர்வலமாகச் சென்றனர். இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட இந்தியத் தமிழர்கள் கையடக்கத் தொலைபேசி குறுஞ்செய்தி ஊடாக திரட்டப்பட்டவர்கள்.

அணிவகுப்பு பிரதமரின் காரியாலயம் நோக்கி சென்றது. இந்தியத் தமிழர்களின் சாதாரண கோரிக்கைகளை பிரதமருக்கு மகஜராக வழங்குவதே இந்த பேரணியின் நோக்கமாக இருந்துள்ளது. ஆனால் கலகத்தடுப்பு பொலிஸார் பிரதமரின் புத்ராஜெயா அலுவலகத்தை சுற்றி நிறுத்தபட்டிருந்தனர். ஊர்வலத்தை அவர்கள் தடுத்து நிறுத்தினர். அப்போது நிகழ்ந்த தள்ளுமுள்ளுகளை இப்பகுதியில் நடமாடிய வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் படமெடுத்துத் தள்ளினர். இதன் மூலம் இந்தியத் தமிழர்கள் மலேசியாவில் பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர் என்ற தகவல் வெளிநாடுகளுக்கு தெரிய வந்தது.

இந்த தகவல்கள் எல்லாம் நான் தினமும் சென்று சாப்பிடும் சைவ உணவக உரிமையாளர் என்னிடம் கதையாகச் சொன்னார். இவர் திருச்சி தின்னனூர்காரர். இலங்கையில் குருநாகல், கண்டி பகுதியில் தமது உறவினர்கள் வாழ்வதாகவும் அவர்களை பார்க்க இலங்கை வந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

புத்தஜெயாவில் 18 புள்ளி கோரிக்கைகளைப் பற்றி பிரதமருக்கு தெரிவிப்பதே நோக்கமாக இருந்ததாகவும் வேதமூர்த்தி இதற்கு தலைமை தாங்கியதாகவும் என்னிடம் தெரிவித்தார்.

வட்டிக்கும் பணம் கொடுக்கும் செட்டிமார்களும், யாழ்பாணத்து இந்துக்களும் தமது பொருளாதா பலத்தை கொண்டு பத்துமலை முருகன் கோயில், ஜாலான் பண்டாரில் ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயம், ஜாலான் செந்தூலில் அமைந்துள்ள செட்டியார் ஆலயம், சிரம்பான் ஜாலான் தெமியாங்கிலுள்ள செட்டியார் ஆலயம், பினாங்கிலுள்ள ஜாலான் கெபுன் பூஹா செட்டியார் ஆலயம் ஆகிய கோயில்களை அமைத்துள்ளனர். இங்கு தென்னந்தோப்புகள் உள்ளன. இவற்றின் மீது மலாயர் கைவைப்பதில்லை. ஏழை இந்தியரையே துரத்துகின்றனர் என இம்முதலாளி வேதனையுடன் கூறினார்.

நான் அவரிடம் சாதி அமைப்பு மலேசியாவில் கடுமையாக பின்பற்றப்படுகிறதா? எனக் கேட்டேன்.

"நீங்கள் இலங்கை தமிழா? ஏன் அங்கு சாதி அமைப்பு கிடையாதா?" என பதிலுக்கு அவர் என்னிடம் கேட்டார்.

''தமிழர் வாழும் இடமெல்லாம் சாதி முறை இருக்கத்தான் செய்யும். சாதியை முன்னெடுப்பதும் அவனது சாதிபுத்திதான்'' என்றார் அவர்.

ஹிண்ராப் கோலாலம்பூரில் நடத்திய மாபெரும் மாநாட்டிலும் சரி இந்தியத் தமிழர்கள் நடத்தும் ஏனைய போராட்டங்களிலும் சரி செல்வந்த இந்திய மற்றும் இலங்கை குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏன் பங்கேற்கவில்லையோ அதே காரணத்துக்காகத்தான் ஒரு தமிழ்ப் பட்டதாரி கூட பங்கேற்று போராடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்குக் காரணம் உள்ளது. பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு, அரசசலுகை, போதிய வருமானம் போன்ற வசதிகள் இருப்பதால் இவர்கள் தமது சமூக பிரச்சினைகளின் பேரில் நடக்கும் போர்ாட்டங்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்து விடுகின்றனர் என்று காரணம் தெரிவிக்கப்படுகிறது.

ஹிண்ட்ராப் எப்படி ஆரம்பித்தது என்பதை அறிய ஆவலுடன் சிலரிடம் விசாரித்தேன். சரியான தகவல்கள் கிடைக்கவில்லை. ஒரு டியூசன் ஆசிரியர்; பெயர் ஞாபகமில்லை. அவர் சில தகவல்களைச் சொன்னார்.

வேதமூர்த்தி மற்றும் சில இளைஞர்கள் விவேகானந்தா இளைஞர் பேரணியை வழிநடத்தி வந்தனர். மாணவர்களுக்கு தமிழில் கருத்தரங்குகள், இந்து மத வகுப்புகள் நடத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இச்சந்தர்ப்பதில் ஈபோரில் ஒரு தோட்ட இந்து ஆலய எரிப்பு பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளியானது. ஆல்யம் அதிகாலை மூன்று மணிக்கு எரிக்கப்பட்டதாம். ஆலயத்தில் உறங்கிக் கொண்டிருந்த இளைஞர்களைத் தாக்கி விரட்டி விட்டு தரை விரிப்புகளை எடுத்து விக்கிரகங்களை போர்த்தினராம். உள்ளே வந்த வன்முறையாளர்களுடன் வந்த மந்திரவாதி ஏதோ மந்திரங்களை ஓதி சிலைகள் மீது நீரைத் தெளித்தாராம். இச்சடங்கு முடிந்ததும் கோவிலுக்கு தீ வைத்தனராம். வழக்கில் வாதிட முன்வந்த சட்டத்தரணி வேறொரு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாகவும் அட்டோர்னி ஜெனரல் அரசுக்கு ஆதரவாக செயறபட்டதாகவும் உண்மையை தெரிந்து கொண்ட பெண் நீதிபதி சட்டத்தரணிகளை விடுதலை செய்ததாகவும் இவர் தகவல் தெரிவித்தார். எனினும் நீதிபதி மாற்றப்பட்டு பதிவி நீக்கம் செய்யப்பட்டார் என்றும் இதற்கு எதிர்கட்சிகளும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை என்றும் அச்சம்பவம் குறித்து அவர் மேலும் கூறினார்.

பொது அமைப்புகளும் கண்மூடியிருந்தன. இச்சமயத்தில் விவேகானந்தா இளைஞர் அமைப்பினது நிலைபாடு பற்றி பேசினோம். இதன் பின்விளைவாகவே ஹிண்ட்ராப் தோற்றம் பெற்றது. ஹிண்ட்ராப் கூட்டங்களில் தோல்வியே வாழ்க்கை என்று நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா? என்ற பாடல் மேடையில் ஒலிபரப்பப்படுவது வழக்கம். ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட இந்தியத் தமிழர்களுக்காக எழுதப்பட்ட எழுச்சிப் பாடலாகவே இப்பாடல் இந்தியத் தமிழர்களால் கொள்ளப்படுகிறது. சிலர் இப்பாடலை கூட்ட ஆரம்பத்தில் ஒலிபரப்பும் போது அழுது விடுவதுமுண்டு. இது போலவே கூட்டத்தில் 'அம்னோ ஆதிக்கத்திலான மலேசிய அரசின் 50 ஆண்டுகால அரசியல் சாசன மீறல்கள்' என்ற புத்தகமும் விற்கப்படும். இந்த அமைப்புடன் 'தெலுங்கு இந்தாள்' அமைப்பும் பூரண ஆதரவுடன் பங்குபற்றுகிறது.

ஹிண்ட்ராப் அமைப்பு நடத்தும் கூட்டங்களுக்கு அரங்குகளை வாடகைக்கு தர மறுக்கும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. கிளான் தெலுக்கு புலாய் ஸ்ரீ சுப்ரமணியம் கோயிலில் நடத்தத் தயாரான கூட்டத்திற்காக மண்டபத்திற்கு 400 வெள்ளி பணம் வாடகையாக செலுத்திய பின்னும் ஹிண்ட்ராப் கூட்டம் என்றவுடன் மண்டபம் தர மறுத்துள்ளனர். இறுதியில் மணடபத்திற்கு வெளியே கூட்டம் நடத்தப் பட்டதாம். கூட்டத்திற்கு வந்த கலகம் அடக்கும் பொலிசார் ஹிண்ட்ராப் ஆதரவா-ளர்களால் விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இதுவே ஹிண்ட்ராப் கூட்டங்கள் நடத்துவதற்கு திருப்புமுனையாக அமைந்துள்ளது.

சங்கைப்பட்டானி மின் தொக் சீன பள்ளிக்கூடத்தில் நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் சுமார் ஐயாயிரம் பேர்வரை கலந்து கொண்டதுடன் மண்டபத்துக்கு வெளியேயும் மக்கள் திரண்டனராம். பொலிசார் கூட்டத்தினரை மிரட்டியதோடு அடையாள அட்டைகளையும் பரிசோதித்துள்ளனர். அடையாள அட்டை இலக்கங்களையும் குறித்துக்கொண்டனராம்.

ஹிண்ராப் கூட்டங்களைக் கட்டுப்படுத்தும் பணிகளில் இந்தியர்களான பொலிசாரையே ஈடுபடுத்துவது; ஹிண்ராபையும், மலேசிய , இந்திய காங்கிரசையும் மோதவிடுவது போன்ற காரியங்களில் அரசு ஈடுபடுவதாக தெரிவிக்கப்படுகிறது.


சிப்பாங் அம்பாட் பட்டர்வொர்த் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய மண்டபத்தில் நடந்தக் கூட்டம், குளுவாங் ஜொகூர் தேசிய நில நிதி கூட்டுறவு கழக சங்கத்தின் மண்டபக் கூட்டம், ஜோகூர் சாஆ மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடல், போட்ஸ்சன் கலந்துரையாடல் போன்ற கூட்டங்கள் ஹிண்ட்ராப் மக்கள் மத்தியில் வளர்வதற்கு வழிவகுத்தன.

இக்கூட்டங்களில் பெண்கள் பங்குபற்றுகிறார்களா?

பினாங்கு சீன மண்டபத்தில் ஒரு பெண்ணின் தலைமையிலேயே ஹிண்ட்ராப் கூட்டம் நடைபெற்றுள்ளது. இதன் பின்னரேயே பெண்களும் ஆர்வமாக பங்குபற்றத் தொடங்கியுள்ளனர் என அறிந்தேன். வசந்தா என்ற பெண்ணின் தலைமையிலேயே இங்கு சுமார் 5000 பேர் கூடியுள்ளனர். பெண்களும் முழு ஆதரவை வழங்கி வருவதாக என்னிடம் பலர் கூறினர்.

பி. உதயகுமார், வேதமூர்த்தி ஆகியோர் செல்லும் கூட்டங்களில் இளைஞர்கள் கூடுதலாக பங்குபற்றுகின்றனர். பட்டர்வொர்த் கூட்டம், கூலிமில் சி.ஆர்.சி கிளப்பில் நடைபெற்ற கூட்டங்களில் 7000 முதல் பத்தாயிரம் பேர் வரை கலந்து கொண்டனராம். இத்தகைய கூட்டங்களில் ஆற்றப்படும் சகல உரைகளும் இரகசிய பொலிஸாரால் பதிவு செய்யப்படுவது எமக்குத் தெரியும் என்றும் இது குறித்து கவலை இல்லை என்றும் ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

ஹிண்ட்ராப் அமைப்பு சுவடிகள் காப்பகம் ஒன்றையும் நடத்தி தேவை யான ஆவணங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்தனர். நாடு முழுவதும் இருந்து இந்த அமைப்புக்காக நிதி சேகரிக்கப்படுகிறது. இது விருப்பத்துடன் வழங்கப்படும் நிதி என்னும் நிலையில் பலர் தமது தங்க நகைகளையும் கழற்றி வழங்கி வருவதாகவும் ஒருவர் என்னிடம் கூறினார்.



பள்ளி மாணவ மாணவியர்

மலாய் சமூகத்தில் பல ஏழைகள் உள்ளர். அதுபோலவே பூர்வீகக் குடிகள், கடாசான் ஈபோன் மக்களிலும் ஏழைகள் உள்ளனர். ஆனால் இந்தியத் தமிழர்கள் ஏழைகள் மட்டுமல்ல; மோசமான சூழலில் வாழ்பவர்களும் கூட என்ற விடயத்தை ஒருவர் சுட்டிக்காட்டினார். மேலும் இந்தியத் தமிழர் பற்றி செய்திகளை வெளியிட்ட பத்திரிகை ஒன்று தடைசெய்யப்பட்டுள்ளது என்றும் அதன் பதிப்பக அனுமதியை புதுப்பிக்க அரசு மறுத்து விட்டது என்றும் ஒருவர் கூறியபோது சில்லிட்டுப் போனேன்.

அடுத்த இதழில் நிறைவு பெறும்




**ரஜினி தன் வயதுக்கேற்ற வேடத்தில் நடிப்பதில்லையே?**
**- எஸ். விஜி. சுன்னாகம்**



நீங்கள் தமிழ்ப் படங்களை மட்டுமே பார்ப்பவர் போல் தெரிகிறதே! ஆங்கில படங்களை பொறுத்தவரை 50, 60 களில்தான் நடிகர்கள் மிளிர்கிறார்கள். George cloney, Jason Statham, Bruce Willsin ஆகியோர் இந்த வயதெல்லையில்தான் உள்ளனர். அதிரடி அக்ஷன் படங்களில் வெளுத்து வாங்குகின்றனர். ரஜனிக்கும் கமலுக்கும் இந்த வயதெல்லைதான். விஸவரூபம் 2, கோச்சடையான் வந்த பின் பாருங்கள். இவர்கள் எங்கோ போய்விடுவார்கள். வருடத்துக்கு தலா 2 படமாவது தருவார்கள்.

ரஜினி, கமல் சீசன் இனிதான் ஆரம்பம்!



**என் கனவுக்கன்னி நமீதா இப்போது எத்தனை படங்களில் நடிக்கிறார்?**

**- ஜே. அர்ஜுன், இரத்தினபுரி**

பவருடன் (தமிழக) இரும்புக்கம்பி விளம்பரத்தில் கலக்குகிறாரே நமீ, நீங்கள் பார்க்கவில்லையா? நமீ விரைவிலேயே பவருடன் (தமிழக) பெரிய திரையில் தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. சினிமாவில் எதுவும் நடக்கலாம்.

படம் இல்லாததால்தான் உங்கள் கனவில் வருகிறார் நமீ

**நயன்தாரா இப்போது கிறிஸ்தவரா, இந்துவா?**

**- வி. மாணிக்கம், கண்டி**



சினிமாவுக:கு வரும் வரை நயன் கிறிஸ்தவ பெண்தான். அவரது இயற்பெயர் டயானா மரியம். சிம்புவுடன் ஆடிப்பாடியபோது அவர் நயன்தாரா. பிரவுதேவாவுடன் குடித்தனம் நடத்தியபோது இந்துவாக மதம் மாறியதாக கேள்வி. ஆனால் பிரவுதேவாவை பிரிந்ததும் மீண்டும் கிறிஸ்தவ மதத்தில் இணைந்துகொண்டார். இப்போது ஆர்யாவுடன் டுயட் பாடுகிறார். முஸ்லிமாக மாறினாலும் மாறலாம்.

மதம் மனதில் இருந்தால் போதுமே



**சசிகுமாருக்கும் கும்கி லக்ஷ்மி மேனனுக்கும் என்ன உறவு?**

**- தீ. வாகீஷன், மஸ்கெலிய**

டைரக்டர், நடிகை என்ற உறவுதான். வேறு எதுவும் இல்லை. ஒரு நடிகை ஒரு டைரக்டரின் பாணி அல்லது Style ஐ புரிந்து கொண்டால் இருவருக்கும் வேலை செய்வது சுலபமாக இருக்கும். ஒரு காட்சி எப்படி அமைய வேண்டும் என்று கே. பாலசந்தர் விரும்புகிறாரோ, அதை அப்படியே நாகேஷ் கமல் ஆகியோர் சரியாக புரிந்து கொண்டு நடிப்பார்களாம். அவ்வளவு புரிந்துணர்வு அவர்களிடையே இருந்தது. அதுபோலத்தான் இதுவும்.

டைரக்டர், நடிகை உறவுதான்.

**பாவனா நடிப்புத் தொழிலை கைவிட்டு விட்டாரா?**

**- நந்து, இங்கிரிய**

யார் சொன்னது? தமிழில் தான் இல்லை. மலையாளப்படங்களில் நடிக்கிறாரே! தமிழில் வரும் புது டைரக்டர்கள் புதுப்புது நடிகைகளைத்தானே தேடுகிறார்கள். இதனால் பாவனா, பூமிகா ஆகியோர் இவர்கள் கண்களில் படுவதில்லை.

மலையாளத்தில் நடிக்கிறார்.

**அதர்வா யாரையாவது 'லவ்' பண்ணுகிறாரா?**

**- இல்ஷானா, வெலிகமை**



அதர்வா, ஜனனி ஐயரை (அவன் இவனில் நடித்தவர்) காதலிக்கிறார். கல்யாணமும் செய்து கொள்ளப் போகிறாராம். இவர்கள் இருவரும் எந்தப் படத்திலும் ஜோடியாக நடிக்கவில்லை. பொதுவான ஒரு நண்பர் ஒருவரின் மூலம் அறிமு-கமாகி இன்று காதலராகியுள்ளனர்.

அதர்வா + ஜனனி = காதல் கல்யாணம்

**சித்தார்த் வெற்றிப் படங்களை தந்திருக்கிறாரா?**

**- ரொசான், சூரியகந்த**



சித்தார்த்தின் முதல்படம் போய்ஸ். தமிழ் நாட்டில் சர்ச்சைக்குள்ளாகியபோதும் இலங்கையில் பரப்பரப்பாக ஓடியது. அதன் பின் சித்தார்த் ஹிந்திக்கு சென்றார், சோபிக்கவில்லை. அங்கு உதவி டைரக்டராகவும் பணியாற்றினார். பின்னர் தமிழுக்கு வந்தார். 'ஆயுத எழுத்து' பேசப்பட்டது. ஆனால் அது சூர்யாவுக்கும் மாதவனுக்கும். அதன் பின் '180', 'காதலில் சொதப்புவது எப்படி?' (இதில் இவரொரு தயாரிப்பாளரும் கூட) இரண்டுமே கை கொடுக்கவில்லை. வெற்றிப்படங்கள் எதையுமே கொடுக்காத நிலையில் சமந்தாவை திருமணம் செய்யப்போகிறாராம். ஏற்கனவே ஸ்ருதிஹாசனுடன் குடும்பம் நடத்தியதாகவும் கேள்வி. பாவம் சமந்தா!

சித்தார்த் கடுமையாக உழைக்கவேண்டும்.

**பவர் ஸ்டாரின் போன் நம்பரை தர முடியுமா?**

**- வாசன், வவுனியா**



பவர் ஸ்டாருக்கு இப்போது உங்களிடம் பேச நேரமில்லை. ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் சூட்டிங். சூட்டிங். சூட்டிங்.

பேசக்கூட நேரமில்லை

சினிமானந்தா பதில்களுக்கான சினிமா தொடர்பான உங்கள் கேள்விகளை சுருக்கமாக கீழ்கண்ட முகவரிக்கு தபாலிலோ, எஸ்.எம்.எஸ்சிலோ, இ-மெயிலிலோ அனுப்பி வையுங்கள்.

சினிமானந்தா பதில்கள்,
வண்ண வானவில்,
த.பெ இல : 1218,
கொழும்பு

மின்னஞ்சல் முகவரி:
vannavaanavil@gmail.com

குறுந்தகவல் இல:
0778 021 501




## தரமான சஞ்சிகை

வண்ணவானவில் பத்திரிகையை அண்மைக்காலமாக நான் வாசித்து வருகிறேன். அதில் வரும் அம்சங்கள் அனைத்தும் அழகாக உள்ளது. அதிலும் கவிமுற்றம் என்னை வெகுவாக கவர்ந்துள்ளது. அதில் நானும் எழுத வேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது. அதன் பிரகாரம் எழுதி அனுப்பியுள்ளேன்.

எம்.ஐ.எம். முஜீப்
மருதமுனை-04

## ஜனரஞ்சக இதழ்

தொடர்ச்சியாக வானவில்லை படித்து வருகி-றேன். படிப்பது மட்டுமன்றி எனக்குள் அவ்வப்போது, படைப்புகளை யாத்து அனுப்ப வேண்டும் என்றும் நினைப்பேன். ஜனரஞ்சக இதழாக வண்ணவானவில் வந்து வாசகர் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

நிந்தமணாளன்
நிந்தவூர்

## நான் உங்கள் தீவிர ரசிகை

வானவில்லுக்கு கடிதம் எழுதுவதை நினைக்கும்போதே மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. ஏனெனில் நான் வானவில்லின் தீவிர ரசிகையாகி விட்டேன். இந்த இதழில் வெளியாகும் அனைத்து விடயங்களையும் நான் படித்து வருகிறேன். எஸ். எம். எஸ் பூக்கள், கவிமுற்றம் பகுதிக்கு கவிதைகள் எழுதவும் நினைத்திருக்கிறேன். எழுதினால் பிரசுரிப்பீர்கள் அல்லவா?

தீவிர ரசிகை றஜனிதா
உடுவில் கிழக்கு

## கச்சத்தீவு

கச்சத்தீவு பற்றிய வித்தியாசமான கட்டுரை என்னை புரட்டிப் போட்டது உண்மை. இது நல்ல ஐடியா. கச்சத்தீவு எங்களுக்கு வேண்டும் எனத் தமிழக அரசியல்வாதிகள் கூறத் தொடங்கியுள்ள இவ்வேளையில் அதை ஒரு சுற்றுலாத்தலமாக மாற்றினால் என்ன என்ற யோசனை ரொம்பவே யதார்த்தமாக தெரிகிறது. அங்கே சுற்றுலா செல்பவர்களுக்கு தீர்வையற்ற பொருட்களை வாங்கிக் கொள்ளும் வாய்ப்பும் வழங்கவேண்டும் என்ற யோசனை ரசிக்கத்தக்கதாக இருக்கிறது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏன் இதுபற்றிய சாத்தியப்பாடு அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரசின் பார்வைக்கு சமர்ப்பிக்கக்கூடாது?

ஸ்ரீசாந்தன்
யாழ்ப்பாணம்.

## கீப் இட் அப்!

இதழுக்கு இதழ் வண்ணவானவில் மெருகேறி வருகிறது. உங்கள் ஒரு பக்கக் கட்டுரைகளை விட குட்டி விஷயங்களைத்தான் நான் அதிகம் விருப்பிப் பார்ப்பேன். முன்பள்ளி குழந்தைகள் சாப்பிடுவதில் கவனம் வைத்திருக்கவேண்டும் என்ற கட்டுரை, சமையலறை ஸ்பொன்ஞ் தரக் கூடிய ஆபத்து, பரதேசி பற்றிய அறிமுகம், ராஜசிங்கன் நினைவு தினம் எனப் பல புதிய விஷயங்களை அறிய முடிகிறது, வானவில் ஊடாக மாத்திரமே! பரதேசியை உங்கள் கட்டுரைக்குப் பின் பார்த்ததில் படம் அதிகம் இனித்தது.

கீப் இட் அப்!
சுந்தரம், சுன்னாகம்

## நல்ல சிறுகதை

இந்த இதழில் வெளியான சிறுகதை அருமை. மிகவும் யதார்த்தமான, என்றைக்கும் நம் சமூகத்தில் நடந்து கொண்டிருக்கின்ற விஷயத்தையே 'சல்லி வந்திருச்சி' கதையில் கதாசிரியர் பன்பாலா சுவையாக நெஞ்சில் தைக்கின்ற மாதிரி சொல்லி இருக்கிறார். இந்த மாதிரியான சிறுகதைகள்தான் வரவேண்டும். ஒருவராவது திருந்தினால் சரிதான். பெருந் தோட்டங்களில் உண்மையாகவே பெற்றோரை மதிப்பது குறைந்து வருகிறது. மேலும் மன்சூரலிகானின் அதிரடிப் பேட்டியை படித்தேன். நிஜத்திலும் அவர் வில்லன்தானா? நம் நாட்டில் கண்டி ராஜ்ஜியத்தை ஆண்ட மன்னரின் வாரிசுகள் ஒன்று கூடி ஞாபகார்த்த விழா கொண்டாடிய நிகழ்வை வெளியிட்டு இருந்தீர்கள். ஒரு அரச பரம்பரை சாதி அளவுக்கு தாழ்ந்து போனது பற்றிய குறிப்பு நெஞ்சத்தைத் தொட்டது. கோட்டைகள் மணல் மேடாகுவதும் குப்பைகள் கோபுரங்களாகுவதும்தான் வாழ்க்கை! ஆள்பவர்கள்தான் அதை புரிந்துகொள்வதில்லை.

ஸ்ரீதரன்
மாத்தளை

### வானவில் கவிதை

வண்ண நிறம்
படைத்தாய் வாழ்க்கையை
விரும்பி சுவைக்க வைத்தாய்
பாலர்கள் முதல்
பாடம் சொல்லும் வாத்தியார்
வரை உன் வருகையை
எதிர்பார்த்து காத்து கிடக்கிறார்கள்
ஒவ்வொரு மாதமும் முதல் திகதிகளில்
நீ இன்னும் வளமுடன் வலம் வரவேண்டும்.

கலான்சன், இங்கிரிய



# “சாண்டில்யனைப் பார்க்க வேண்டும்!”

“நீ எழுதுவதெல்லாம் ‘செக்ஸ்’தானே?” என்று பலர் கேட்டிருக்கிறார்கள். பொதுக்கூட்டங்களில் என்னைப் பார்த்ததும் ‘இவரா இப்படியெல்லாம் எழுதுகிறார்?” என்று வியப்படைந்தவர்கள் பலர். ‘இப்படி பார்வைக்கு வைதீகமாயிருப்பவன் இப்படியெல்லாம் எதற்காக எழுதுகிறான்?” என்று கோபப்பட்ட பெரியவர்கள் பலர்.

ஒருமுறை ஒரு பிரசுரகர்த்தர், ‘‘நீங்கள் ஏதாவது தகராறு செய்தால் உங்கள் போட்டோவைப் பத்திரிகையில் போட்டு விடுவேன்’’ என்று பயமுறுத்தினார். ஆனால், பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாதல்லவா? எனக்கு வயதாகிவிட்டதாகவும், ஆகவே எழுத்தைச் சற்று மாற்றிக்கொள்ள வேண்டுமெனறும் சிலர் மன்றாடியிருக்கிறார்கள். அப்படி எனக்கு வயதொன்றும் அதிகம் ஆகவில்லை. 65தான்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு சில கல்லூரி மாணவிகள் என்னைப் பார்க்க வந்தார்கள். நான் மாடியில் இருந்தேன். என் பெண்கள் அவர்களை, ‘‘மேலே இருக்கிறார் போங்கள்’’ என்று அனுப்பி வைத்தார்கள். மாணவிகள் மாடிக்கு வந்தார்கள். என்னைப் பார்த்து, ‘‘சாண்டில்யனைப் பார்க்க வந்தோம்’’ என்றார்கள்.

‘‘என்ன வேண்டும்?’’ என்று கேட்டேன்.

மாணவிகள் பரஸ்பரம் பார்த்துக் கொண்டார்கள். சற்றுக் குழம்பினார்கள். ‘‘இல்லை, அவரைப் பார்த்துத்தான் பேச வந்தோம்’’ என்று சொன்னார்கள்.

நான் என்ன பதில் சொல்ல?

**சாண்டில்யன் எழுதிய ‘போராட்டங்கள்’ நூலிருந்து.**

## எமனை நோக்கி...

(11ஆம் பக்கத் தொடர்)

ரூபினி அங்கிருந்து தப்பக்கூடும். அல்லது மகேஸ் அவளை தப்ப வைக்க திட்டம் தீட்டினாலும் தீட்டுவான் என்ற நினைப்பில் ஜினதாஸ முதலாளி அங்கு காவலுக்கு இருவரை நிற்க வைத்திருந்தார்.

ரூபினியின் துரதிர்ஷ்டம் அந்த இரண்டு தடியன்களும் அவள் ஜன்னல் வழியாக குதிப்பதை கண்டுவிட்டார்கள். சினிமா பாணியில் விரட்டுதான்.

ஏற்கனவே அறைச் சிறையில் கிடந்த ரூபினியின் மனதும் உடலும் பெரிதும் பாழ்பட்டிருந்தது. தப்பியோடுவதற்கு ஏற்ற உடல் வலுவுடன் அவள் இருக்கவில்லை. இருந்தாலும் ஓடினாள்.

அடுத்த தெருவுக்கு ஓடிவிட்டாள். தடியன்களும் விரட்டினார்கள். அடுத்தது ஒரு பாழடைந்த கட்டடம். அதன் பின் ஒரு அரை மதில். அதனையும் தாண்டினாள். அது ஒரு ரயில் பாதை.

ரயில் பாதை வழியே ஓடினாள். சிறிது நேரத்தில் களைப்படைந்து விட்டாள். தண்டவாளத்துக்கு இடையில் நின்று கொண்டாள்.

தண்டவாளம் வழியே ஓடுவதா இல்லை தண்டவாளத்தை தாண்டி கடற்கரை ஓரமாக ஓடுவதா? முன்னால் பார்த்தாள். தூரத்தில் ஆள்நடமாட்டமே இல்லை. எனவே தண்டவாள வழியே ஓடுவதுதான் சரி. பின்னால் பார்த்தாள். தடியன்கள் 50 மீட்டர் தூரத்தில் வந்து கொண்டிருந்தனர். கொஞ்ச தூரம் ஓடிய பின் கடற்கரை பகுதிக்கு ஓடித் தப்பும் நோக்கில் அடுத்த ரயில் பாதைக்கு தாவினாள்.

அவளது கெட்ட காலம். அந்த பாதையில் அப்போது வேகமாக வந்தது ருகுணு குமாரி.

ரூபினியும் ருகுணுகுமாரியும் ஒருவரையொருவர் தொட்டுக்கொண்டனர்.

ரூபினி இரண்டானாள். ருகுணு குமாரிக்கு பாதிப்பில்லை. விபத்து மரணம் என்று சட்ட வைத்திய நிபுணரின் சான்றிதழ் கூறியது.

மேசையில் மடித்து வைக்கப்பட்டிருந்த ரூபினியின் கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது. நான் தப்பிப் போகிறேன். மகேஸுடன் இணையப் போகிறேன். இம்முயற்சியில் எனது உயிருக்கு எந்த பாதிப்பும் ஏற்படுமானால் அடுத்த பிறவியில் பாம்பு போல் வந்து அப்பா ஜினதாஸ முதலாளி, அம்மா, பாட்டி, மாமா ஆகியோரை கொத்திக் கொல்லுவேன். இது நிச்சயம், நிச்சயம், நிச்சயம் என்று எழுதப்பட்டிருந்தது.

ரூபினி உயிரிழந்த அடுத்த மாதம் அவளது பாட்டியை பாம்பு கடித்து விட்டது. சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இதனால் பெரிதும் மிரண்டு போன ஜினதாஸ அந்த வீட்டை அப்படியே விட்டு விட்டு தூர இடத்துக்கு குடிபெயர்ந்தார்.

இப்போது அந்த இரட்டை மாடி வீடு பாழடைந்து கிடக்கிறது.

மகேஸ் சில சமயங்களில் ரூபினி நினைவு வரும்போது அங்கு வந்து செல்கிறான்.

ஒரு நாகப்பாம்பு அந்த வீட்டு வளவில் காணப்படுவதாக அக்கம் பக்கத்தவர்கள் கூறுகின்றனர்.

## சம்பந்தி...

(12ஆம் பக்கத் தொடர்)

வள்ளியம்மையும் ஒழுங்காக முறையாகப் பரிமாறினாள். மூவரது கைகளும் வாய்களும் அசையத் தொடங்கின.- இது முடிந்ததும் மச்சாளும் மச்சாளும் சாப்பிடத் தொடங்கினார்கள்.

இவை எல்லாம் முடிந்ததும் வள்ளியம்மை வட்டாவையும் படிக்கத்தையும் வைத்து ‘‘சப்புங்க’’ என்று கூறி முடிந்ததும், கதிராமர் எல்லோரையும் பார்த்து, ‘‘நான் உங்க எல்லோருக்கும் சந்தோஷமான ஒரு கதயொண்டு செல்லப்போறேன்,’’ என்று ஒரு அதிர்ச்சி வெடியை போட்டார்.- எல்லோருடைய கண்ணும் அவரையே பார்த்தன.

‘‘கதிராமண்ணண்ட கதயெண்டா அது பழய கதயாத்தானிருக்கும் செல்லுங்க, கதிராமண்ண’’ என்று வள்ளியம்மை வாய் திறந்தாள்.

‘‘இது பழய கததான் அதுக்குப் புறகு ஒரு புதுக்கதயும் வரும்.’’

‘‘நாரதர் ஒரு கலகத்த உண்டாக்கினா அதுக்குப்புறகு ஒரு நன்ம வருமாமெண்டு நான் கதய்களிலகேட்டிரிக்கன். இப்ப நாம சந்தோஷமாக் கதச்சிப் பேசி சிரிச்சி இரிக்கம்- ஆனா இதுக்கு முந்தி ஒரு சின்னச் சண்டயும் வந்தது. உங்களுக்கு தெரியும்- நாரதர் கலகத்துக்குப் புறகு ஒரு சந்தோஷமான காரியம் வருவது போல, இப்ப நாம ஒரு சந்தோஷமான காரியத்த உண்டாக்கவேணும்’’ என்றார்.

‘‘அதயும் நீயே செல்லன் கதிராமண்ண’’ என்று மறுபடியும் வள்ளியம்மதான் வாய் திறந்தாள்.

‘‘டேய் காத்தமுத்து! நான் செல்றத்த கவனமாகக் கேட்டுக்க- உண்ட மகன் வெளிநாட்டில இரிக்கானெலலுவ?’’

‘‘ஓம்’’

‘‘உண்ட தங்கச்சிக்கும் ஒரு குமர்புள்ள இரிக்கெல்லுவ’’

‘‘அதுவும் தெரியும்’’

‘‘இந்த ரெண்டு பேருக்கும் கெதியாக் கலியாணத்த முடிச்சிப் பார்த்தா என்ன? இது எண்ட ஆச என்ன சொல்றா காத்தமுத்து’’ என்று ஒரு போடு போட்டார். இதக்கேட்டதும் செல்லதம்பியும் தவமணியும் கொடுப்புக்குள்ளே சிரித்தார்கள்.

‘‘அது சரி கதிராமண்ண. இப்பத்தயப் பொடியனுகள நம்பி நாம் எப்பிடி முடிவு செய்யிற?’’ என்றான் காத்தமுத்து.

‘‘நீ செல்றதும் சரிதான். நான் ஒத்துக்கிறன். ஆனா இது உனக்கு விருப்பமோ?’’

‘‘யோசிச்சிப் பாப்போம்.’’

‘‘என்னடா யோசிக்கிற? ஆரோட யோசிக்கப் போறா... நீயும் உண்ட பொஞ்சாதியுந்தானே யோசிக்கவேணும்?’’

‘‘புள்ள வள்ளியம்ம நீ என்ன செல்ற புள்ள’’

‘‘அவர் சம்மதிச்சா எனக்கும் சம்மதந்தான்’’

‘‘பாத்தயாடா- வேறாரிட்டக்கேக்கப் போறா. டேய்! பாவண்டா அதுகள்ற மனம்... சந்தோசத்தோட போறதுக்கு ஒரு முடிவச் செல்லு- வயலில் விளஞ்சத வயலிலதான் போடவேணுமெண்டு எங்கட அம்மயப்பன் செல்லுவாங்க- உனக்கு வருத்தமெண்டு அறிஞ்சா அதுகள் வராம இருந்திரிக்குங்களா- அதுகள்- வேற ஊர். ஆரும் போய்ச் சொன்னாத்தானே அதுகளுக்குத் தெரியும்- இது தெரியாம நீ அதுகளக் கோவிச்சது நியாயமடா செல்றா பாப்பம்...போனது போகட்டும். இதுக்கு நீ இப்ப என்ன செல்றா- உங்களுக்கு விருப்பமோ?’’

‘‘விருப்பம்தான்’’ என்றான் காத்தமுத்து.

‘‘டேய் இப்பத்தான் நீ மனிசன் என்ன வள்ளியம்ம சரிதானே?’’

‘‘அவர் சொன்னாச்சரிதானே’’ என்றாள்.

‘‘இப்பதாண்டா எண்ட மனம் நிறஞ்சிரிக்கி. இப்ப மாசி கழிஞ்சி பங்குனி புறந்திரிக்கி. வெள்ளாமய வெட்டிச் சூடு வெச்சி உண்ட மச்சான் அதக் கலியாணச் சிலவுக்கு காசாக்கி எடுக்கட்டும். காத்தமுத்து நீயும் இதப்பத்தி உண்ட மகனுக்குக் காயிதம் போட்டு விசயத்த நினைப்பூட்டி வெய். வரிசம் கழிஞ்சி வைகாசி புறந்ததும் அந்த ஆண்டவண்ட புண்ணியதால இந்த கலியாணத்தச் சிறப்பாக நடத்தவேணும்- அந்தக் கலியாணத்தில இப்ப தந்த மாதிரிச் சோறெல்லாம் சரிப்படாது- என்னமோ சோறு எண்டு இப்ப சொல்லுவாங்களே, எனக்கு நினைக்க வருகுதில்ல. என்னமோ ஆணி எண்டு வருமே ஆ... ஆ... புறியாணிச் சோறு அதுதான் ஆக்கவேணும். டேய்! காத்தமுத்து இணல் சாஞ்சதும் அதுகள வஸ்சில ஊருக்கு பகித்திரமா அனுப்பி வெச்சிரு- எல்லாருக்கும் சந்தோஷந்தானே’’ என்று சொல்லிக் கொண்டு கையை ஊன்றி எழுந்து மெல்லிய தள்ளாட்டத்தோடு கதிராமர் நடக்கத் தொடங்கினார்.

## என்னை எம்.ஜி.ஆர்....

(06ஆம் பக்கத் தொடர்)

எம்.ஜி.ஆர் இப்படம் பற்றி கேள்விப் பட்டிருந்ததாகவும் தோட்டக்காரியுடன் சம்பந்தப்பட்டிருந்த ஒருவர், அதன் நாயகி (சேபாலிக்கா) சென்னை வந்தால் திரைப்படம் ஒன்றில் நடிக்க வைப்பது தொடர்பாக தன்னால் உதவ முடியும் என்று எம்.ஜி.ஆர் கூறியிருந்தாக ஒரு தகவலைத் தன்னிடம் தெரிவித்திருந்தார் என்றும் கூறுகிறார் சேபாலிக்கா.

சரி, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஏன் சென்னை சென்று எம்.ஜி.ஆரை சந்திக்கவில்லை?

‘‘அந்த சமயத்தில் நான் அதை சீரியசாக எடுக்கவில்லை. சென்னை செல்வதற்கு வீட்டிலும் அனுமதிக்கவில்லை. சென்றிருந்தால் என் வாழ்க்கை நிச்சயம் வேறுவிதமாக மாறி இருக்கும்,’’ என்கிறார் சேபாலிக்கா.

இவருக்கு தமிழ் சரளமாக வராததால் இவருக்கு டப்பிங் பேசியவர் ராஜேஸ்வரி சண்முகம். இப்போது ராஜேஸ்வரி சண்முகமும் உயிருடன் இல்லை.

சேபாலிக்கா ஏழு சிங்களப் படங்களில் நடித்திருக்கிறார். அன்றைய நாயகியான விஜித மல்லிகா, நாயக நடிகர் அசோகா பொன்னம்பெரும ஆகியோருடன் இவர் இணைந்து நடித்திருக்கிறார்.

தன் திரைப்பட வாழ்வில் திரையுலகினரும் ரசிகர்களும் தன்னை கௌரவமாகவே நடத்தினார்கள் என்று கூறும் இவர், தன் கணவரின் மறைவுக்குப் பின் தன்னந்தனியாக குடும்ப பாரத்தை சுமக்கவேண்டிய நிலை ஏற்பட்டதாக சொல்கிறார்.

‘‘கஷ்டம் தாள முடியாமல் லெபனான் சென்றேன். பல வருடங்களாக அங்கே தொழில் செய்தேன். இன்றைக்கு எனக்கென ஒரு காணியோ, வீடோ இல்லை. டவர்ஹோல் ஓய்வூதியம் பெறுவதற்கு எடுத்த முயற்சிகள் கைகூடவில்லை. என் நிலையை விளக்கி இரண்டு கடிதங்களை ஜனாதிபதிக்கு எழுதினேன். எனக்கு வசிப்பதற்கு ஒரு வீடு கிடைக்குமானால் அது பெரிய உதவியாக இருக்கும்,’’ என்று கூறும் இவர், தற்போது மகனின் உழைப்பிலேயே தங்கியிருக்கிறார்.

இப் பழம்பெரும் நடிகைக்கு யாராவது உதவினால் புண்ணியமாக இருக்கும்.

## கட்டுக் கட்டாய்...

(03ஆம் பக்கத் தொடர்)

தரம்பற்றிய உத்தரவாதம் யாராலும் வழங்கமுடியாது. ஏனெனில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் மருந்துகள் குடிசை கைத்தொழிலாகவும் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் எந்தக் கம்பனியில் கூடுதலாக போனஸ் வழங்கப்படுகின்றதோ அந்த கம்பனியிடம் அதை வாங்கி நோயாளியின் தலையில் விலைக்கழிவு என்ற போர்வையில் கட்டி விடுகின்றார்கள்.


அரசாங்கம் அவ்வப் பகுதிகளுக்குரிய மொத்த வழங்குனர்களை, சுற்றறிக்கைகள் மூலம் காலத்துக்குக்காலம் சில்லறை மருந்தகங்களுக்கு அறிவிக்க வேண்டும். மொத்த வியாபாரிகளுக்கு அனுமதிப் பத்திரத்தை வழங்கு முன்னர் இறக்குமதியாளர் மற்றும் உற்பத்தியாளரிடம் குறிப்பிட்ட மொத்த வியாபாரி தமது நிறுவனத்தால் நியமிக்கபட்டுள்ளார் எனவும் அவர் சந்தைப்படுத்தக்கூடிய எல்லைகளையும் வரையறுத்துக் கூறல் வேண்டும். அப்போதுதான் உப விநியோகத்தர்கள் என்ற போர்வையில் நடைபெறும் சட்ட விரோத விநியோகம் தடைப்படும். மேலும் களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகங்களில் ஏற்படும் குறைபாடுகள் நீங்கி மக்களுக்கு தரமான மருந்துகள் சென்றடையும்.

நியமிக்கப்பட்ட மொத்த வியாபாரிகள் மற்றும் விநியோகஸ்தர்கள் தவிர்ந்த ஏனையோரிடம் வாங்கப்படும் மருந்துகள் மருந்தகங்களில் காணப்படின் அவை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

அரச இலச்சினையற்ற, பதிவு செய்யப்படாத மருந்துகளை எக்காரணம் கொண்டும் கொள்வனவு செய்தல் கூடாது. இதை ஒரு கொள்கையாகவே பார்மஸிகள் மட்டுமன்றி மொத்த வியாபாரிகளும் கொண்டிருத்தல் மிகவும் அவசியம்.

**(மிகுதி அடுத்த மாதம்)**

# போல்ட்டை உலக நாயகனாக்கிய பீஜிங் ஒலிம்பிக்



©AP

**16 ஆகஸ்ட் 2008**

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் ஆடவருக்கான 100 மீட்டர் ஓட்டப்போட்டி ஆரம்பமாக சில நிமிடங்களே இருந்தன.

சீனத் தலைநகரான பீஜிங்கின் Birds Nest (குருவிக் கூடு) விளையாட்டரங்கு ஆயிரக்கணக்கான பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. அந்த நிகழ்வை உலகின் பல பாகங்களிலும் இருந்து 17.8 கோடிப் பேர் வைத்த கண் வாங்காமல் தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்தனர்.

2008 மே 31ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் ஆடவர்களுக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனை நிலைநாட்டியதையடுத்து உலகின் பிரபல குறுந்தூர ஓட்ட வீரர்களில் ஒருவராக உசேய்ன் போல்ட்டும் கணிக்கப்பட்டார். அதேவேளை அப்போதைய காலகட்டத்தில் உலகின் அதிவேக ஓட்ட வீரர்களாக உசேய்ன் போல்ட், அஸாபா பவல் மற்றும் டைசன் கே ஆகியோர் கணிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் அந்த ஆண்டு (2008) ஜூலை 5 ஆம் திகதி டைசன் கே காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு காரணமாக ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவது சந்தேகமாகியிருந்த நிலையில் போல்ட் மற்றும் பவலுக்கு இடையில்தான் முதல் இடத்துக்கான பலத்த போட்டி நிலவும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. அவர்கள் இருவருமே ஜமேய்க்காவை சேர்ந்தவர்கள் என்பது விசேடமானதாகும்.

1982 ஆம் ஆண்டு பிறந்த அஸாபா பவல் உசேய்ன் போல்ட்டின் அதே சமூக பின்னணியில் இருந்து வந்தவர்தான் பொருளாதார ரீதியில் பிரச்சினைகளை எதிர்நோக்கிய குடும்பம் அவருடையது. அந்த குடும்பத்தில் மொத்தம் ஐந்து ஆண்பிள்ளைகள் அஸாபா பவல்தான் அவர்களில் கடைக்குட்டி.

இவரது சகோதரரான மைக்கல், நியூயோர்க் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததுடன் மற்றுமொரு சகோதரரான டோனி கால்பந்தாட்ட விளையாட்டின் போது ஏற்பட்ட திடீர் மாரடைப்பு காரணமாக உயிரிழந்தார்.

இச்சம்பவங்கள் காரணமாக அஸாபா பவல் எப்போதுமே ஒருவித மன உளைச்சலுடனேயே இருந்து வந்தார். 'அடுத்தது யார்' என்ற கேள்வி அவரது மனதில் எப்போதுமே தொக்கி நின்றது.

அஸாபா பவல் லேசுப்பட்ட மெய்வல்லுன வீரர் அல்ல. 2005 ஜூன் மாதம் 100 மீட்டர் ஓட்டத்தில் உலக சாதனை நிலைநாட்டியதையடுத்து 2008 ஜூன் மாதம் வரை உலகின் அதிவேக மனிதன் என்ற பெருமையை தக்க வைத்துக்கொண்டவர். 80 தடவைகளுக்கு மேல் 100 மீட்டர் தூரத்தை 10 செக்கன்களுக்கு குறைவான நேரத்தில் ஓடியிருந்தமை அவரது இன்னொரு சாதனையாகும்.

இந்த நிலையில்தான் 2008 ஒலிம்பிக் போட்டிகள் சீனாவின் தலைநகரான பீஜிங்கில் ஆரம்பமாகின.

ஆடவர்களுக்கான 100 மீட்டர் இறுதிப் போட்டியில் பங்குபற்றிய 8 வீரர்களும் ஆரம்பக் கோட்டருகே அணிவகுத்து நின்றனர்.

ஆரம்ப நிலையில் வரிசையாக நின்றனர். போட்டியை ஆரம்பித்து வைப்பவரின் துப்பாக்கி தயாராக இருந்தது.

'டுமீல்'

வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல் வீரர்கள் விடுபட்டனர். போல்ட், டிக்ஸ், பவல், பெட்டர் புயல் வேகத்தில் முன்னேறினர்.

அரைவாசி தூரத்தில் முதலிடம் இவர்களில் எவருக்கும் போகலாம் என்ற நிலை.

போட்டியின் வெற்றி இலக்கை தொட 20 மீட்டர் தூரம் தான் பாக்கி...

போல்ட் 1, பவல் 2

வெற்றி இலக்கு...

முதலில் தொட்டவர் போல்ட்

எடுத்துக்கொண்ட நேரம்

9.69 செக்கன்கள்.

புதிய உலக சாதனை.

இரண்டாவது இடத்தில்

டிரினிடாட் அன்ட் டொபாகோ வீரர் ரிச்சர்ட் தொம்ஸன்.

எடுத்துக்கொண்ட நேரம் 9.89 செக்கன்கள்.

மூன்றாவது இடத்தில்

அமெரிக்க வீரர் வோல்டர் டிக்ஸ்

எடுத்துக்கொண்ட நேரம் 9.91 செக்கன்கள்.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஜமேய்க்க வீரர் அஸாபா பவலுக்கு கிடைத்ததோ ஐந்தாம் இடம்! அவர் எடுத்துக்கொண்ட நேரம் 9.95 செக்கன்கள்.

போட்டியில் 60 மீட்டர் தூரத்தில் உசேய்ன் போல்ட் அணிந்திருந்த NIKE சப்பாத்தின் கயிறு கழன்று விட்டது. இதனால் போல்ட்டின் அவதானம் தடைப்பட்டது. இல்லையெனில் இத்தூரத்தை போல்ட் 9.52 செக்கன்களில் ஓடி முடித்திருப்பார் என்கிறார் அவரது பயிற்சியாளர் க்ளென் மில்ஸ்

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் ஆடவர்களுக்கான 200 மீட்டர் ஓட்டப்போட்டி, 100 மீட்டர் ஓட்டப்போட்டி நடைபெற்ற நான்காவது நாளில் அதாவது ஆகஸ்ட் 20 ஆம் திகதி நடைபெற்றது.

200 மீட்டர் ஓட்டப்போட்டியிலும் வெற்றி பெற்று உசேன் போல்ட் பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் அவரது இரண்டாவது தக்கப்பதக்கத்தை வென்றார்.

200 மீட்டர் தூரத்தை உசேன் போல்ட் 19-30 செக்கன்களில் ஓடி தங்கப்பதக்கத்தையும், அமெரிக்காவின் ஷேன் க்ரோபோட் 19.96 செக்கன்களில் வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்காவின் வோல்டர் டிக்ஸ் 19.98 செக்கன்களில் வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தனர்.


100 மற்றும் 200 மீட்டர்கள் ஓட்டப்பந்தயங்களில் உலக சாதனைகளுடன் ஒலிம்பிக் தங்கப் பதக்கங்களை வென்ற உசேய்ன் போல்ட், ஆகஸ்ட் 21 ஆம் திகதி தனது 22ஆவது பிறந்தநாளை நண்பர்களுடன் கொண்டாடினார்.

அன்றைய பிறந்த நாள் பரிசாக அவருக்கு மற்றுமொரு உலக சாதனை கிடைத்தது.

ஆடவர்களுக்கான 4X100 அஞ்சலோட்டப் போட்டியில் உசேன் போல்ட், நெஸ்டா கார்டர், மைக்கல் பிரெட்டர் மற்றும் அஸாபா பவல் ஆகியோர் ஜமேய்க்காவுக்காக உலக சாதனையுடன் தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக் கொடுத்தனர். அதற்காக அவர்கள் செலவிட்ட 37.10 செக்கன்கள் 4X100 மீட்டர் ஓட்டத்துக்கான புதிய உலக சாதனையாகும்.

பீஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகள் அரம்பிப்பதற்கு முன்னர் உசேயன் போல்ட் சமர்ப்பித்த சிறுநீர் மாதிரிகள் சோதிக்கப்பட்டதில் அவை எதிலுமே போதை மருந்து தொடர்பான எந்தவொரு துகளும் அவற்றில் காணப்படவில்லை என்ற சந்தோஷமான செய்தியும் அன்றுதான் கிடைத்தது!

''நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு, தீவிரமாக பயிற்சி பெற்று சிறப்பான திறமையை காட்டி வருகிறோம். நாங்கள் நூற்றுக்கு நூறு சுத்தமானவர்கள் என்பதை இதன் மூலம் நாங்கள் நிருபித்திருக்கிறோம். எந்தவொரு நாளிலும் எந்தவொரு நேரத்திலும் உடம்பின் எந்தவொரு பாகத்திலும் சோதனை நடத்துங்கள். எனது அனுமதியின்றி உசேய்ன் போல்ட் ஒரு விட்டமின் மாத்திரையை கூட எடுப்பதில்லை'' என்று அடித்துக் கூறினார். அவரது பயிற்சியாளர் க்ளென் மில்ஸ். (தொடரும்)





# பவரைக் கட்டியணைத்த ஒபாமா

பவர்ஸ்டார் ஒருமுறை மும்பையில் உள்ள அலுவலகம் ஒன்றில் அலுவலக பணியாளராக (பியூன்) பணியாற்றிக் கொண்டிருந்தார். அவரிடம் ஒரு கெட்ட பழக்கம் இருந்தது. அதாவது யாராவது ஒருவரைப் பற்றி பேசிக்கொண்டிருந்தால் நடுவில் புகுந்து ஓ... அவரா? அவரை எனக்கு தெரியுமே என்று கூறுவார்.

ஒரு முறை அந்த அலுவலகத்தின் மேலதிகாரி (அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவர்) ஆர்னோல்ட் பற்றி பேசிக்கொண்ருந்தார். உடனே எப்போதும் போல நமது பவர்ஸ்டார் ஓ ஆர்னோல்டா அவர் என்னோட நண்பராச்சே என்று கூறினார். இதைக் கேட்ட முதலாளிக்கு சிரிப்பு வந்துவிட்டது. என்ன ஆர்னோல்டை உனக்குத் தெரியுமா? சரி அடுத்த முறை நான் அமெரிக்காவிற்குப் போகும்போது உன்னையும் அழைத்துச் செல்கிறேன். உனக்கு ஆர்னோல்டை தெரியுமா இல்லையா என்பதை அப்போது பார்க்கிறேன் என்று கூறினார். அதற்கு பவர்ஸ்டாரும் ஒப்புக்கொண்டு தலையசைத்தார்.

முதலாளி சொன்னபடியே பவர்ஸ்டாரை அமெரிக்காவிற்கு அழைத்துப்போனார். பிறகு ஆர்னோல்டின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். ஆர்னோல்ட் பவர்ஸ்டாரை பார்த்ததும் ஓடி வந்து 'ஹாய் பவர்... எவ்வளவு நாளாச்சுடா உன்ன பார்த்து... எங்கடா போன இவ்வளவு நாளா?" என்று கேட்டவாறு அவரை உள்ளே அழைத்துச் சென்று தேநீர் விருந்து அளித்தார். அதுவரை வாசலில் நின்றிருந்தார் அதிர்ச்சியடைந்த முதலாளி. பின்னர் பவர்ஸ்டார் வந்ததும் ஒபாமா வீட்டிற்கு அழைத்துச் சென்றார். ஒபாமாவும் ஆர்னோல்டைப் போலவே பவர்ஸ்டாரைக் கட்டி அணைத்துக் கொண்டு ''ஒரு காபியாவது குடித்துவிட்டுப் போ'' என வற்புறுத்தினார். இதைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்தே போனார் முதலாளி.

கடைசியாக வத்திக்கானுக்கு பவர்ஸ்டாரை அழைத்துப் போனார் முதலாளி. அங்கு மக்கள் கூட்டம் அலைமோதியது. அந்த கூட்டத்தில் உள்ளே நுழைவது கடினமான விஷயமாக இருந்தது. எனவே பவர்ஸ்டார் தனது முதலாளியிடம் ''கொஞ்சம் இங்கேயே இருங்கள். நான் போய் வருகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றார்.

சிறிது நேரத்தில் வத்திக்கான் மாளிகையின் பால்கனியில் இருந்து போப்பின் கைகளை பிடித்துக்கொண்டு பவர்ஸ்டார் தோன்றினார். அவ்வளவுதான் வாசலில் நின்று இதனைப் பார்த்துக்கொண்டிருந்த முதலாளி மயங்கி விழுந்தார். அவரை உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சை அளித்த பின் பவர்ஸடர் என்ன ஆனது உங்களுக்கு? என்று கேட்டார்.

அதற்கு முதலாளி ''ஆர்னோல்டை உனக்குத் தெரியும். ஒபாமாவுக்கும் உன்னை தெரியும். போப்புடனும் உனக்கு பழக்கம் இருக்கிறது. இதெல்லாம் பெரிய விஷயமே இல்லை....

நீ போப்புடன் பால்கனியில் தோன்றியதும் அங்கு கூடியிருந்த கூட்டத்தில் இருந்த ஒரு வெள்ளைக்காரன் என்னிடம்... யாருடா அது பால்கனியில் பவர்ஸ்டார் கையைப் பிடித்துக்கொண்டிருப்பது என்று கேட்டான். அதைத் தான் என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை," என்று கூறி விட்டு மீண்டும் மயக்கமானார்.

# காமரங்காய்

இன்றைய காலப்பகுதியில் நாம் உணவாக உட்கொள்ளும் பழங்களிலும் மரக்கறிகளிலும் இரசாயனப் பொருட்கள் கலந்துள்ளமை அனைவரும் அறிந்த விடயமே. இவை பழுதடையாமல் இருப்பதற்கும் விரைவில் கனிவதற்கும் ஏன் செடிகளில் உருவாகுவதற்கும் கூட இரசாயன பசளை வகைகளைத் தானே பயன்படுத்துகின்றனர்!

எம் உடலுக்கு கேடுவிளைவிக்கும் உணவுகளைத்தான் நாம் தேடித் தேடி சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். எனினும் விதிவிலக்காக இரசாயன பாதுகாப்பு திரவங்களை பயன்படுத்தாத பசளைகளைப் பயன்படுத்தாத சில பழவகைகளும் மரக்கறி வகைகளும் இன்னமும் உள்ளன என்பது ஆறுதலான விடயம் தான்.

தான் தோன்றியாக வளரும் இத்தகைய பழவகைகளும் மரக்கறிகளும் சிறந்த மருத்துவக் குணமும் போஷாக்கும் நிறைந்தவையாக இருக்கின்ற போதிலும் அவற்றை விரும்பி உண்பது மிக மிக குறைவுதான். அத்தகைய பழங்களில் ஒன்றுதான் காமரங்காய்.



காய் பருவத்தில் கனிந்த பின்னர் பழமாகவும் உட்கொள்ளப்படும் காமரங்காயானது இரு வகைப்படுகின்றது. ஒரு வகையான இனிப்பும் புளிப்புத் தன்மையும் கொண்டிருக்கும். விவசாயத் திணைக்களத்தினால் ஹசனிஸ்ட், வன்டன், பீ 10 ஆகிய பெயர்களினால் இது அழைக்கப்படுகின்றது.

காமரங்காயின் தாய்நாடு இந்தோனேஷியா என்றும் சிலர் இலங்கை அல்லது இந்தியா என்றும் கூறுகின்றனர்.

இனிப்பு தன்மையுடைய காமரங்காய் வீரியத்துக்கு சிறந்த மருந்து என்கின்றனர் சுதேச வைத்தியர்கள். கயானா, அமெரிக்க ராச்சியம், தென் புளோரிடா ஆகிய பிரதேசங்களில் காமரங்காய் அதிகமாக பயிரிடப்படுகின்றது. மத்திய அளவில் வளரக்கூடிய காமரங்காய் மரத்தை வளர்ப்பதற்கு அதிகமாக இடம் தேவையில்லை.

நீர் வடியக்கூடிய பிரதேசங்களில் அதிகமாக உற்பத்தியாகும் காமரங்காய் மரத்தை 66X30 cm அளவுடைய குழிகளில் நடவேண்டும். இவ்வாறாக நடப்படுமானால் ஒரு ஏக்கருக்கு 300 தொடக்கம் 400 வரையிலான மரங்களை நட முடியும். நட்டு இரு வருடங்களிலேயே பலன் தரக்கூடிய காமரங்காயானது ஜூலை/செப்டெம்பர் மாதங்களில் (வருடத்துக்கு இரு தடவைகள்) அதிக பலன் தரும் என்ற போதிலும் வருடம் முழுவதும் பழங்களைப் பெறலாம். குடலிலுள்ள விஷத்தன்மையை நீக்குவதற்கும் சளித் தொல்லையிலிருந்து விடைபெறுவதற்கும் இதுவொரு சிறந்த மருந்து என்கின்றனர் சுதேச மருத்துவர்கள்.

நன்றி: மிஹிதுரு - தமிழில் ஆர்த்தி






கோழி: எனக்காக எதையும் செய்வீங்களா?

சேவல்: உனக்காக உயிரையும் கொடுப்பேன்.

கோழி: ப்ளீஸ் எனக்காக ஒரு முட்டை போடேன்....!

- எஸ்.மது, இரணைமடு

# நற்பிட்டிமுனையின் தனிச் சிறப்புகள்

மருதமுனை, பெரிய நீலாவணை, கல்முனை, நற்பட்டிமுனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, இறக்காமம், வருப்பொத்தானை சேனை, மல்கம்பிட்டி, நிந்தவூர், அட்டாளச்சேனை, மீன்ஓடைக்கட்டு, அக்கரைப்பற்று, பொத்துவில் எனப் பல முஸ்லிம் கிராமங்களை உள்ளடக்கிய பகுதி 'தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசம்' என்று அழைக்கப்படுகிறது.

ஆனால் இந்த முஸ்லிம் பிரதேசம் ஒரு காலத்தில் இரண்டு ஊர்களாகவே இருந்தன. அவை கல்லாற்றினை ஒரு எல்லையாகவும் களியோடையை மறு எல்லையாகவும் கொண்டிருந்தன.

ஒன்று ஊர் என்றும் மற்றது அக்கரையூர் என்றும் அழைக்கப்பட்டது. இது களியோடை ஆற்றிற்கு அப்பால் உள்ள அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பொத்துவில் உள்ளிட்ட பகுதியாகும்.

**'ஜவுளிக்கடையே பின்னர் சவளக்கடையாக பெயர் மாற்றம் பெற்றது'**



மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் தவம்

இந்த இரண்டு ஊர்களையும் போர்த்துகேயருக்கு முற்பட்டகாலத்தில் மட்டக்களப்பு என அழைக்கும் வழக்கிருந்தது.

இவர்களது ஆட்சியின் போது மட்டக்களப்பை புளியந்தீவிற்கு மாற்றிவிட்டனர்

அத்தோடு ஊரை மக்கள் 'மருதூர்' என அழைக்கலாயினர். இந்த மருதூருக்கு கல்முனை, மருதமுனை, நற்பட்டிமுனை, சொறிகல்முனை, வீரமுனை என ஐந்து முனைகள் இருந்தன. நற்பெட்டிமுனையை அண்டியுள்ள சவளக்கடை எனும் பகுதியின் சரியான பெயர் ஜவுளிக்கடை என்பதாகும். ஜவுளிக்கடை ஒரு காலத்தில் உலகச் சந்தையாக இருந்துள்ளது. துருக்கி, கட்டார், ஆப்கானிஸ்தான், ஈராக், சவுதிஅரேபியா போன்ற நாடுகளில் இருந்து வந்த வியாபாரிகள் இங்கு வியாபாரம் செய்தனர் என்கிறது மட்டக்களப்பு மான்மியம் எனும் நூல்.

இன்றைய கிட்டங்கி அன்று ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களைப் பாதுகாத்து வைக்கும் இடமாக இருந்ததுள்ளது.

கிழக்குக் கடலில் இருந்து கல்லாற்றின் ஊடாக கிட்டங்கி வாவியுள் வரும் பாய் மரக்கப்பல்கள் வியாபாரச் சரக்குகளை இறக்கிவைத்து விட்டு, வாங்கும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு போகும் வரை சம்மாந்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும்.

இந்த இடைவெளிக்குள் நேரம், காலம் சரியாக அமைபவர்கள் ஆதாம்மலையைத் தரிசிக்கச் செல்வதும் உண்டு.

இந்த நடைமுறை நீர்வழிப் பாதை தடைப்படும்வரை இருந்து வந்தது எனலாம். தரைவழிப்பாதை மருதமுனையில் இருந்து கல்முனைவரை கடலை அண்டிய பகுதியோடு அமைந்திருந்தது.

தரைவழிப்பாதை ஆரம்பமானதும் துறைமுகப்பட்டினமாக இருந்த நற்பட்டுமுனை ஆடு மாடு வளர்க்கும் நற்பட்டிமுனையாக மாற்றம் பெற்றது எனலாம். இந்த நற்பட்டிமுனைக் கிராமத்தில் ஆண் பெண் என்று வித்தியாசம் பாராது எல்லோருமே தொழில் செய்வார்கள்.

கூனி வடித்துக் காயவைத்து விற்றல், முள்ளிக்காய், தாமரைக் கிழங்கு, தாமரை இலை, கொட்டிக்கிழங்கு, தாமரைகொட்டை, பாய் இழைக்கும் பன் என்பவற்றைச் சேகரித்து கல்முனைச் சந்தையில் அல்லது பக்கத்து ஊர்களில் விற்பனை செய்வது இங்குள்ள வயது போன பெண்களின் தொழிலாகும்.

ஆடு மாடு வளர்த்தல், வேளாண்மைச் செய்தல், கண்ணிவைத்து கீச்சான் கொக்கு, குருவி பிடித்தல், நன்னீர் மீன் பிடித்தல், அவற்றை காயவைத்து கருவாடாக விற்றல், அரச ஊழியர்களாக தொழில் செய்தல், வியாபாரம் செய்தல் போன்றன ஆண்களின் தொழில்களாகும்.

மேற்படி ஊரின் சுற்றுப்புறச் சூழல் இங்குள்ளவர்களின் தொழிலுக்கு வாய்ப்பாக இருந்தது என்பதால் கஷ்டமும் இல்லாது தொழில் செய்து வருகிறார்கள்.

''மட்டக்களப்பு மக்களின் விருந்தோம்பலை சொல்லி விளக்க வார்த்தைகளே இல்லை'' என்ற வெளியூரவர்களின் வாக்குமூலத்தை இன்றும் அழியாது பாதுகாக்கும் ஊராக நற்பட்டிமுனையைக் குறிப்பிட முடியும்.

இதுமட்டுமல்ல; இந்த ஊரின் விசேட தன்மைகளில் இன்னுமொன்று இந்தவூர்கைக்கு அடக்கமான ஊர் என்பதால் தனிப்பட்டவகையில் எல்லோரையும் எல்லாரும் நன்கு தெரிந்து வைத்திருப்பதாகும்.

யாரையாயினும் தேடி இங்குவரும் வெளியூரவர்கள் கஷ்டப்படுவதில்லை. சிறுபிள்ளைகளிடம் கேட்டாலும் உரியவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று உதவுவார்கள். இவ்வாறு உதவுவதற்கு இங்கு வழக்கில் உள்ள பட்டப்பெயர் நடைமுறை காரணம் எனலாம்.

திங்கட் கிழமை பிறந்தவர்களுக்கு எல்லாம் இங்கு 'ஆதம்பாவா' என்றுதான் பெயர் சூட்டுவார்கள். செவ்வாய்க்கிழமை பிறந்தவர்களுக்கெல்லாம் 'அகமது' என்பதுதான் பெயர். புதன்கிழமை பிறந்தவர்கள் எல்லோருக்கும் இப்படி ஒரே பெயர்தான். அதனால் பட்டப்பெயர் இங்கு அவசியமாகின்றது.

உதாரணமாக ஐந்து ஆதம் இருந்தால் ஒரு ஆதம் மோட்டாண்ட ஆதம் என்றும் மற்ற ஆதம் வெடிக்காரண்ட் ஆதம் என்றும் அடுத்த ஆதம் போடியார் ஆதம் என்றும் அழைக்கப்பட்டனர். இதனால் இங்கு பல்கலைக்கழகப் பட்டங்களைவிடவும் ஊரார்களால் கொடுக்கப்படும் பட்டங்கள் பெறுமதியானவை.

இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் தென்கிழக்கின் எல்லா ஊர்களிலுமே இது நடைமுறையில் இருந்தது. இன்று நற்பட்டிமுனையில் மட்டும் அழியாது அருகிப்போகாது உள்ளது.

# கண்கள்



## புகைக் கண்கள்

சிலருக்கு பார்க்கும் போது, கண்களில் திடீர் திடீரென புகை ஓடுவது போலவும், மேகம் செல்வது போலவும் தோன்றும். கண்புரை நோயின் அறிகுறி இதுதான். க்ளுகோமாவின் ஆரம்பமாகவும் இருக்கலாம். கண்களில் அழுத்தம் ஏற்பட காரணமாகவும் இருக்கலாம். இதை கவனிக்காவிட்டால், கண் பார்வை பாதிக்கும்.

## நீர் வடியும் கண்கள்

சில சமயம், சிலருக்கு கண்ணில் இருந்து நீர் வடியும். எரிச்சலாக இருக்கும். அலர்ஜியினாலும் இப்படி ஏற்படும். தைரோயிட் உள்ள பெண்களுக்கு இப்படி வரும். கழுத்து வீங்கும் போது, இப்படி கண்ணில் எரிச்சல் வரும்.

## மஞ்சள் கண்கள்

கண்களில் மஞ்சள், ஊதா நிறத்தில் படிவம் இருக்குமானால், ஏதோ வழக்கமான கண்கள் போல இல்லாமல், மஞ்சள் படிந்தது போல தெரிந்தால், உடனே டாக்டரை பார்ப்பது நல்லது. காய்கறி, பழங்கள் சாப்பிடுவதே இல்லை. கொழுப்பு உணவுகளை சாப்பிடுகிறீர்கள் என்பதை காட்டும் அறிகுறி மட்டுமல்ல, இப்படியே நீடித்தால், அது மஞ்சள் காமாலையில் கொண்டு போய்விட்டுவிடலாம். சிலருக்கு தோலையும் பாதிக்கும்.

## மங்கல் பார்வை

கிட்ட, தூரப்பார்வையில் மங்கலாகவே இருந்தால், அதற்காக கண்ணாடி அணிவது நல்லது. டாக்டரின் ஆலோசனைப்படி, டெஸ்ட் செய்து கண்ணாடியை போடலாம். அதிக ரத்த அழுத்தம், கட்டுப்படாத சர்க்கரை வியாதி, முதுமை போன்றவற்றாலும், இப்படி பாதிப்பு வரலாம்.

## கலர் கண்கள்

சிலருக்கு கண்களால் பார்க்கும் போது, விதம் விதமான நிறங்களில், வித்தியாசமாக பார்க்க முடிவதை உணரலாம். அதற்கு விழித்திரை கிழிவதும் காரணமாக இருக்கலாம். கண்களில் ரத்தம் கசிந்தாலும், அப்படி தோன்றும்

## செங்கண்கள்

கண்களில் அடிக்கடி சிவப்பு ஏறிவிடுகிறதா? கண்டதையும் பயன்படுத்துகிறீர்களா? மேக்கப்போடுவதில் தரமற்றதை பயன்படுத்துபவரா? அப்படியானால், உஷார் உங்களுக்கு கண்களில் அலர்ஜி ஏற்பட்டுள்ளது.

## கூசும் கண்கள்

பளீச் என்று விளக்கு வெளிச்சத்தை பார்க்கும் போது கண்கள் கூசும். அப்படி கூசுவதுடன், சில நொடிகள் கண் மங்கிவிட்டால், அதுவும் அடிக்கடி அப்படி நேரிட்டாலும், விழித்திரை கோளாறு வருவதற்கான அறிகுறி. டாக்டரிடம் பரிசோதனை செய்வது நல்லது.

## வலிக்கும் கண்கள்

கண்கள் வலிக்குமா? ஏன் வலிக்காது. நீங்கள் தொடர்ந்து பல மணி நேரம் 'டிவி' பாருங்கள். கம்ப்யூட்டரிலேயே முகத்தை புதைத்து கொண்டு, இன்னர்நெட்டில், சாட்டிங்கில், மணிக்கணக்கில் மனதை செலுத்துங்கள். அப்புறம் தான் கண்களின் வலி தெரியும். அதனால் சிறிது நேரம் ஓய்வு கொடுப்பது நல்லது, கண்களுக்கு.

# மருதாணி இட்டுக்கொள்கிறீர்களா?

இளம் பெண்களின் உடலில் அவர்களுக்கே மிகப் பிடித்த பாகம் மென்மையான விரல்களும், பஞ்சுபோன்ற பாதங்களும்தான். அவற்றை மேலும் அழகாக்கிப் பார்ப்பதில் ஒரு தனி சந்தோஷம் அவர்களுக்கு. அதற்காகவே இயற்கையால் படைக்கப்பட்டது தான் மருதாணி.

அவரவர் கற்பனைத் திறனுக்கேற்ப மருதாணியில் விதவிதமான டிசைன்களைப் பயன்படுத்தி கைகளையும், கால்களையும் அழகுபடுத்திக்கொள்கிறார்கள்.

ஒருமுறை இப்படி மருதாணி வரைந்து கொண்டால், குறைந்தது பத்து நாட்கள் வரை பளிச்சென்று கைகளை அழகாகக் காட்டும்.

மருதாணி நன்கு சிவக்க, அதன் பொடியை மெல்லிய துணியில் 2 தடவை சலித்துக் கொள்ளவும். பிறகு அந்தத் தூளை 2 மணி நேரம் சிறிதளவு வெல்லம் சேர்த்த தேநீர் சாயத்தில் ஊற வைக்க வேண்டும் பிறகு இதை நன்கு கலக்கி, பிளாஸ்டிக் கோனில் நிரப்பி மேல் பகுதியை ஒட்டவும். தேவைக்கேற்ப வாய் பகுதியில் சிறிய அல்லது பெரிய துளை போட்டுக் கொள்ளலாம்.



மருதாணி உருண்டை அதிக கெட்டியாகவோ நீர்த்துப் போயோ இருக்கக்கூடாது என்பதை கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

மருதாணி இடுவதற்கு முன்பு உள்ளங்கையில் மருதாணி எண்ணெயை பூசுவது அதன் நிறத்தை அடர்த்தியாக தோன்றச் செய்யும்.

மருதாணி காய்ந்த பிறகு அதன் மீது எலுமிச்சைச் சாறில் சர்க்கரை சேர்த்த கரைசலை லேசாக ஒற்றி எடுக்கவேண்டும். இதனால் மருதாணி மேலும் சிவந்த நிறம் பெறும்.





# லெப்டொப் அழகி

டெல்லிக்கு சென்று கொண்டிருந்த ரயில் பெங்களூரை தொட்டபோது ஜீன்ஸ்- டிசர்ட் அணிந்திருந்த அந்த இளம் பெண் ஏறினாள். உட்கார்ந்த வேகத்தில் அருகில் தனி ஆளாக உட்கார்ந்திருந்த 40 வயது நபரைப் பார்த்து சினேகப் புன்னகை உதிர்த்துவிட்டு, பையை திறந்து 'லேப் டாப்'பை எடுத்து தன் மடியில் வைத்தாள். படித்தபடியும், டைப் செய்தபடியும் அவள் நேரத்தை செலவிட்டுக்கொண்டிருந்தபோது அவர் தன் கையில் இருந்த ஆங்கில வார இதழைத் திறந்தார்.

அவருக்கு ஆங்கிலம் தெரியும் என்பதை அவள் புரிந்துகொண்டதும், ''என்ன நண்பரே... இரண்டு பேர்தான் இங்கே இருக்கிறோம். நாம் பேசிக்கொண்டால் தானே பொழுது போகும்'' என்று கூற, அவர் உற்சாகமாக பேசத் தொடங்கினார்.

அவள் எம்.பி.ஏ. படித்துவிட்டு பிரபல நிறுவனம் ஒன்றில் வேலைப்பார்ப்பதாகவும், நிறுவனம் சார்பிலான பணி ஒன்றுக்காக டெல்லிக்கு சென்று கொண்டிருப்பதாகவும் சொன்னாள். அவர் தனக்கு திருமணமானதை மட்டும் மறைத்துவிட்டு, மீதி தன்னைப்பற்றிய எல்லா விஷயங்களையும் சொன்னார். கொறிப்பதற்காக வைத்திருந்த உணவுப் பொருட்களை இருவரும் தங்களுக்குள் பரிமாறிக்கொண்டார்கள்.

அவளுக்கு வெளிநாடுகளில் இருந்து செல்போன் அழைப்புகள் வந்து கொண்டிருந்தன. ஓயாமல் பேசிக்கொண்டே இருந்தாள். பெரும்பாலும் தன் வங்கி கணக்கு எண்களை போனில் தெரிவித்துக் கொண்டிருந்தாள். அடுத்தடுத்து 'ஈமெயில்' அனுப்பிக்கொண்டும் இருந்தாள்.

முழுமையாக ஒரு நாள் கிடைத்ததால் அவர்கள் இருவரும் நெருங்கிவிட்டார்கள். செல்போன் எண்களை பரஸ்பரம் பரிமாறிக்கொண்டார்கள். பிரிய முடியாமல் பிரிந்தார்கள். ''நான் இதுவரை ரயிலில் சந்தித்த நண்பர்களிலேயே நீங்கள் தான் என்னை ரொம்பவும் கவர்ந்தவர்'' என்று உருகும் உள்ளத்தோடு, கசிந்த கண்ணீரை அடக்கிக்கொண்டு அவள் பிரிந்தாள்.

அதன் பின்பு இருவரும் விடாமல் செல்போனில் பேசியிருக்கிறார்கள். அவள் ஈமெயிலும் அனுப்பியிருக்கிறாள். எஸ்.எம்.எஸ்களும் நேரங்காலம் பார்க்காமல் வந்து குவிந்திருக்கின்றன. ரொம்பவும் நெருங்கிப்போன பின்பு ஒரு நாள் திஏரென்று அந்த ஈமெயில் வந்துவிழுந்தது. ''என் தாயார் திடீரென்று இதயநோயில் பாதிக்கப்பட்டுள்ளார். உடனடியாக அவருக்கு மேஜர் ஆபரேஷன் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு லட்சம் ரூபாய் குறைகிறது. உடனே ஏற்பாடு செய்யுங்கள். ஒரு வாரத்தில் திருப்பித் தந்துவிடுவேன்'' என்றது ஈமெயில் தகவல். அவளோடு காற்றுப் புகாத அளவிற்கு நெருங்கிவிட வேண்டும் என்று அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததால் இந்த 'நல்ல' வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள நினைத்தார். அவள் கொடுத்திருந்த அக்கவுன்ட் நம்பரில் ஒரு லட்சம் ரூபாயை செலுத்தினார். உடனே 'அளவற்ற உங்கள் அன்புக்கு நன்றி' என்று பதில் வந்தது.

அடுத்தடுத்த நாட்களில் அவள் அம்மா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆபரேஷன் முடிந்தது... என்றெல்லாம் 'லைவ்' ஒலிபரப்பு செய்துகொண்டிருந்தாள். 'ஆபரேஷன் முடிந்தது' என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தமோ, தெரியாது. அதுதான் அவளிடமிருந்து கிடைத்த கடைசி வார்த்தை.

ஒரு லட்சத்தை இழந்த அவர் இப்போது செல்போனில் தொடர்புகொண்டால், 'அந்த நம்பர் உபயோகத்தில் இல்லை' என்று வருகிறது. அந்த லேப்டாப் அழகியை அவர் தேடிக்கொண்டிருக்கிறார். அவள் எத்தனை பேரை எந்தெந்த ரயிலில்களில் ஏமாற்றிக்கொண்டிருக்கிறாளோ தெரியவில்லை.

இந்த உண்மைச் சம்பவம் இந்தியாவில்தானே நடந்தது? என்று அலட்சியமாக இருக்கவேண்டாம். இத்தகைய நம்ப வைத்து ஏமாற்றும் வேலைகள் இங்கேயும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. எனவே எப்போதும் உஷாராக, அறிவுக்கு வேலை கொடுத்து மோசடிக்காரர்களுக்கு இடம்கொடுக்காமல் வாழப்பழகுங்கள்.

ராகவி

# கௌரவம் பாடல்


பாடல் : ஒன்றாய், ஒன்றாய்,
எழுதியவர் : மதன் கார்க்கி
இசை : எஸ். தமன்
பாடியோர் : ஹரிசரன், சுசித்ரா

நாம் ஒன்று சேரும் நேரம்
புது சக்தி வந்து சேரும்
இனி அத்தனையும் மாறும்

ஒன்றாய் ஒன்றாய் ஒன்றாய்
நாம் சேரும் இந்த நேரம்
எங்கள் மூச்சில் பெருகும்
அந்த சூட்டில் இந்த பனி உருகும்
உன்னை தட்டிக் கேட்க வந்தோம்
கொஞ்சம் முட்டிப் பார்க்க வந்தோம்
நீ எங்கோ நான் எங்கோ
ஒன்றாய் சிரித்தோம் அன்று
தோழியே என் தோழனே
எண்ணங்கள் ஒன்றாகி
கோபங்கள் சேர்ந்தாச்சு இன்று
தோழியே என் தோழனே
அட பனிப் பனி துளியெல்லாம்
திரண்டிடும் போதும்
அலை உருண்டிடும் போதும்
அதில் பயனொன்று ஏது.
மலை என எழும் அலை
அடித்திடும் வரை
கல்லில் செய்த
நெஞ்சம் ஒன்றும் நகர்வதில்லை

தனிபொறிக்கும்
இணைந்திடும் போதும்
ஒளி தெரிந்திடும் போதும்
ஒரு வழி மட்டும் காட்டிவிடு
அடங்கிடுமா
தீ அணைந்திடுமா...
ஒரு தீப்பிளம்பே நாம் கிளம்ப ஒன்றாவோம்
ஊருக்கு ஒன்றென்றால்
நாம் என்ன செய்வது என்று
ஓடினோம் அன்று ஓடினோம்
உண்மைக்கு பக்கத்தில்
தோளோடு தோள் நின்று இன்று
தேடினோம் பதில் தேடினோம்

வெறும் அரட்டைக்கு பயன்பட்ட
இணையத்தளம்
இன்று புரட்சிக் களம்
அதில் விதை ஒன்று போட்டால்
முளைத்திடும் காடு
அதன் பரவலைப்பாரு
இதைத் தடுத்திட
ஒருவனும் இங்கில்லை




தயாரிப்பு - பிரகாஷ்ராஜ் புரொடக்ஷன்ஸ்
இயக்கம் - ராதா மோகன்
இசை - தமன்
பாடல்கள் - மதன் கார்க்கி
ஒளிப்பதிவு - ப்ரீதா
வசனம் - விஜி
படத்தொகுப்பு - ஆலன்
நடனம் - போனி வர்மா, தினேஷ்
நடிப்பு - சிரிஷ், யாமி கௌதம், பிரகாஷ்ராஜ், நாசர், குமரவேல், ஸ்ரீசரண்



*குடும்பத்தின் கௌரவம் தான் பெரியது என்று நினைக்கும் ஒரு குடும்பத்துக்குள் காதல் நுழைந்து விட அந்தக் காதலால் அந்த குடும்பத்தின் கௌரவத்தைக் காப்பாற்ற அந்த குடும்பத்தை சேர்ந்தவர் எடுக்கும் முடிவுதான் இந்த கௌரவம்!*

*தமிழ்நாட்டில் இப்படி நடந்ததா, நடக்குமா என்று கேள்வி எழுகிறது. ஆனால் வட இந்திய மாநிலங்களில் இதுபோன்று நடப்பதை பத்திரிகைகளில் காணமுடிகிறது. அப்படிப்பட்ட ஒரு கதையை தமிழுக்கு ஏற்றபடி கொடுத்திருக்கிறார் ராதாமோகன்.*

*இப்படத்தின் பாடல் வெளியீட்டு வைபவம் விஜய் டிவியின் நீயா நானா நிகழ்ச்சியில் சமீபத்தில் இடம்பெற்றது. அப்போது, இப்படி எல்லாம் தமிழகத்தில் நடக்குமா? என்ற கேள்வி எழுந்தது. நடக்கிறது என்றார் பிரகாஷ் ராஜ். சென்னையில் வாழும் ஒரு பணக்கார குடும்பத்துக்கு தாழ்த்தப்பட்ட பெண் மருமகளாக வந்ததைப் பொறுக்காத அக்குடும்பம் ஒரு கொலைக் கும்பலுக்கு பணம் கொடுத்து அப்பெண்ணைத் தீர்த்துக்கட்டிய சம்பவம் நடந்திருக்கிறது என்பதை தான் தனிப்பட்ட ரீதியாக அறிவேன் என்று பிரகாஷ்ராஜ் சொன்னபோது அரங்கமே உறைந்துபோனது.*

தன்னுடன் படித்த சண்முகம் என்ற தனது நண்பனைச் சந்திக்க அவனது ஊருக்கு செல்கிறார் ஹீரோ அல்லு சிரீஷ். அங்கே அவரை காணவில்லை. மாறாக அவரைப் பற்றிய செய்திகள் தான் கிடைக்கின்றன.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த சண்முகம் அந்த ஊரின் பெரும்புள்ளியான உயர்சாதியை சேர்ந்த பிரகாஷ்ராஜின் பெண்ணை காதலித்து அழைத்துக் கொண்டு ஊரை விட்டே ஓடிவிட்டதாக தகவல் கிடைக்கிறது. சண்முகம் சென்னைக்குத்தான் போனார் என்கிறார்கள். ஆனால் சரியாகத் தெரியவில்லை.

சண்முகத்தின் தந்தையின் பரிதவிப்புக்காக அவனைத் தேடும் முயற்சியில் ஹீரோ தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறார். துணைக்கு தன்னுடன் படித்த நண்பனையும் இணைத்துக்கொள்கிறார். தொழிற்சங்கவாதியான சௌந்தரபாண்டியனின் மகளான ஹீரோயினும் இந்த கூட்டணியில் சேர்கி-றார். சண்முகத்தின் அண்ணன் மாரியும் அவர்களுக்கு உதவி செய்கிறார். சண்முகத்துடன் படித்த நண்பர்கள் நண்பிகள் ஆகியோரையும் இவர்கள் வரவழைக்கிறார்கள். இவர்கள் சண்முகத்தை கண்டுபிடித்தார்களா என்பதுதான் 'கௌரவம்' படத்தின் கதை.

தனிக்குடியிருப்பு, இரட்டைத் டம்ளர்... செருப்பு அணிய அனுமதியில்லை... இதற்காகவே தாக்கப்படும் மக்கள்... கற்பழிக்கப்படும் தாழ்த்தப்பட்ட பெண்கள்....

இவ்வாறு தமிழகத்தின் பல மாவட்டங்களில் தற்போது நடந்துகொண்டிருக்கும் ஜாதி வெறியினை ஜாதிகளின் பெயரைச் சொல்லாமலேயே வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

படத்தின் மிகப் பெரிய பலமே வசனம்தான். ராதாமோகனின் ஆஸ்தான வசனகர்த்தா விஜியின் நறுக்கலான வசனங்கள் இந்த சாதி பிரச்சினையை மனசுக்குள் நுழைத்து விடுகிறது. தமனின் இசையும் படத்துக்கு பலம் சேர்க்கிறது.

கதை, திரைக்கதை, இயக்கம் ராதாமோகன். சீரியசான ஜாதிப்பிரச்சினையை சிந்திக்கும் வகையில் சுவாரஸ்யமாக கொடுத்திருக்கிறார்.

நாயகனாக புதுமுகம் கிரிஷ், சுமார் ரகம். நாயகி யாமி கௌதம் அழகாக இருக்கிறார். தமிழ் சினிமாவில் ஒரு ரவுண்ட் வரலாம்.

சாதி ஒரு பிரச்சினைதான். தீண்டாமை ஒரு குற்றம்தான். அதை எப்படி ஒழிப்பது?

சாதி ஒரு பிரச்சினை என்பதை சமூகம் உணரச் செய்வதற்கு மாற்றத்துக்கான சிந்தனைகள் தேவை. சினிமாவில் அது உருவாவது ஒரு நல்ல ஆரம்பம்... தொடரட்டும்.

பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிப்பவர்களுக்கு எதிராக உரக்கப் பேசவேண்டும். அதற்கு சினிமா ஒரு சிறப்பான தளம்.

நீயா நானா அரங்கில் கேட்ட இன்னொரு வியப்பான தகவலையும் இறுதியாக சொல்லிவிடலாம்.

தமிழகத்தின் சில இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆண் நாய் வளர்ப்பதற்கு தடையாம். ஏனெனில், தாழ்த்தப்பட்ட வீட்டு ஆண் நாய் உயர்சாதி குடும்பத்தைச் சேர்ந்த பெட்டை நாயோடு உறவு வைத்துக்கொண்டால் தங்கள் வீட்டில் 'கீழ்சாதி நாய்க்குட்டி' பிறந்து விடலாம் என்ற முன்னெச்சரிக்கைத்தான் இந்தத் தடைக்கான காரணமாம்!

இப்படி பார்க்கும்போது கௌரவம் படம் நன்றாக வந்திருந்தாலும்; வெற்றி பெறுமா? என்ற கேள்வி எழவே செய்கிறது. இருந்தாலும் ராதா மோகன்-பிரகாஷ்ராஜ் துணிச்சலை பாராட்டத்தான் வேண்டும்.





**விஸ்வகாந்தன்**
(பக்க வடிவமைப்பாளர், லேக்ஹவுஸ்)
**பிரதீபா**
(விற்பனை சந்தைப்படுத்தல் அதிகாரி, பட்டக்கண்ணு)
**கிருளப்பனை**



**லாசர்**
**சாந்தகுமாரி**
**இறக்குவானை**

எங்க வீட்டுக் கல்யாணம் என்ற இப்புதிய பகுதியில் வானவில் குடும்பத்தைச் சேர்ந்த புதுத்தம்பதியினர் தமது திருமண புகைப்படத்தை இலவசமாக பிரசுரித்து மகிழலாம். நீங்கள் செய்யவேண்டியதெல்லாம், உங்கள் திருமண அழைப்பிதழ், தபால் முகவரி, தொலைப்பேசி எண் மற்றும் திருமணபதிவு நகல் ஆகிய விவரங்களுடன் உங்கள் திருமண புகைப்படத்தை

**எங்க வீட்டுக் கல்யாணம்**
**The Edior**
**Vanna Vaanavil Editorial**
**Lake House**
**Colombo-10**

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். எங்கள் வாசகரின் திருமண புகைப்படத்தை பிரசுரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.



'சேட்டை' படத்தில்
ஆர்யா, அஞ்சலி

Printed and published by ANCL No: 35, D.R.Wijewardena Mawatha, Colombo-10 in May, 2013.